# என்னுயிராய் நீயிருக்க...



ஆர். மகேஸ்வரி

# என்னுயிராய் நீயிருக்க....

## 1



தென்றலைத் தழுவி... அந்த தீண்டலில் இன்புற்றப் பூவினங்கள்... புதுப் பெண்ணாய் சிலிர்த்து... சிங்காரமாய் இதழ் விரித்து... புன்னகை செய்த, இளங்காலைப் பொழுது!

பறவையினங்கள் பூபாளம் பாடி... புவிமகளை மெல்ல விழிப்படையச் செய்தன!

காதலனைக் கண்ட காதலியின் முகச்சிவப்பாய், காலை வானம் சிவந்திருந்தது!

இன்னும் கொஞ்ச நேரத்தில் பகலவன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தான், கிழக்கு வானில்!

அந்த அழகான காலைப்பொழுதை புதுச்சேரி நகரம் பரபரப்போடு வரவேற்க ஆயத்தமாகிவிட்டது.

கலைநயத்தோடு மிளிரும்... அந்த அழகான பங்களா... சுற்றிலும் பூஞ்சோலைக்குள்... ராஜகம்பீரமாய் வீற்றிருந்தது! விதவிதமான பூக்கள்... பனியில் நீராடி புத்துணர்வுடன் தாராளமாய் வாசத்தை உற்பத்தி செய்து கொண்டிருந்தது.

காலை நேர உடற்பயிற்சி அத்தனையையும் முடித்துக் கொண்டு... பொங்கி, பெருகி, ஆறாய் ஊற்றெடுத்து ஓடிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு.. அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து... சிகரெட் ஒன்றை பற்ற வைத்து... ஆழ இழுத்து புகைவிட்டுக் கொண்டே.... மலர்ந்து சிரித்த மலர்களை ரசித்துக் கொண்டிருந்தான்.

'அவன்?'

'சித்தார்த்தன்!'

புதுச்சேரி மாநிலத்தில்... பிஸினஸில் நெம்பர் ஒன்றாய் கொடிகட்டிப் பறக்கும் சிவநாதனின் செல்வ புதல்வன்தான், சித்தார்த்தன்! பல்வேறு தொழிற்சாலைகளும், ஜவுளி மில் நிறுவனங்களும், தங்கம், வெள்ளி, ப்ளாட்டினம், வைரம் என்று தனித்தனி பிரிவுகளுடன் கூடிய பெரிய நகைக்கடையும், நகரின் முக்கிய வீதிகளில் வாடகைக்கு விடப்பட்டு பணமாய் கொட்டிக் கொண்டிருக்கும் கட்டிடங்களும் என ஏகபோகச் சொத்திற்கும் ஒரே வாரிசு!



வில்லியனூரிலிருந்து வடக்கே ஒரு கிலோ மீட்டர் தூரம் கடந்ததும்... நூறு ஏக்கருக்கும் அதிகமான விவசாய பண்ணை ஒன்று இருக்கிறது. அதில் மூன்று வருடங்களுக்கு முன்பு முப்பது ஏக்கரில்.... சுற்று மதில் அமைத்து... பிரம்மாண்டமான கட்டிடங்களோடு... சித்தார்த்தனின் பெயரில் ''சித்தார்த் வித்யாஸ்ரமம் டே கம் ரெசிடென்சியல் பள்ளி'' இயக்கப்பட்டு.... குறைவானக் கட்டணத்தில்.... சேவைக்காய் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

சி.பி.எஸ்.இ. பாட்டர்ன் ஸ்கூல்!

எத்தனையோ இல்லாத ஏழைகளுக்கும், அநாதை ஆசிரமங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும்... ஏராளமான நன்கொடைகள் கொடுத்து உதவினாலும்... சிவநாதனுக்கு நிறைவாய்த் தெரியவில்லை...

இல்லாதவர்களுக்கு கல்விதானம் வழங்கி... அறிவுக் கண்ணை திறக்க ஆசை வந்து... அதன் பலனாய் நிறுவப்பட்டதுதான் இந்த பள்ளி!

நிறைவான கல்வி!

குறைவான கட்டணங்கள்!

தனித்திறன்களை ஊக்குவிக்கும் பயிற்சிகள்!

திறமையான... நிரம்ப கற்ற ஆசிரியப் பெருமக்கள்... என்று பள்ளி நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

அந்த பள்ளியின் மூன்றாம் ஆண்டு ஆனிவல் பங்ஷனுக்காக.... பள்ளியில் நடிப்பு, பாடல், நடனம் என்று மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

சித்தார்த்தன்... ஆறடிக்கும் மேலான நெடுநெடு உயரம்! கட்டுமஸ்தான உடம்பு! கம்பீரமான தோற்றம்! அழகான முகத்தில் யாரையும் வசீகரிக்கும்... காந்தக் கண்கள்! அடர்ந்த மீசையும், அழுத்தமான உதடுகளும்... சிரிக்கும்போது பளிச்சென ஒளிரும் வெண்பற்களும், கண்ணோர சுருக்கமும், கன்னக்குழியும் சித்தார்த்தனுக்கு கூடுதல் அழகு! சந்தன நிற மேனியும்... மிடுக்கான தோற்றமும்... தலை கொள்ளாத முடியும் அவனுக்கு கூடுதல் கவர்ச்சி! மொத்தத்தில் எதிரில் வரும் பெண்களை ஏக்கப் பெருமூச்சு விட்டு, திரும்பத் திரும்பப் பார்க்கத் தூண்டும், பேரழகன்!

லண்டனில் படிப்பை முடித்துவிட்டு வந்து... ஆறேழு மாதங்களுக்கு மேலாகிறது.

இதுவரை ஒருநாள்கூட பள்ளியை எட்டிப் பார்த்ததில்லை!

தந்தையோடு பிஸினஸ் பார்க்க வருகிறேன் என்று அவரோடு புறப்பட்டவன்... கொஞ்ச நாளில் அத்தனையையும் தன்னிடம் ஒப்படைத்துவிட்டு போய்... சிவநாதனை ஓய்வெடுத்துக் கொள்ள சொன்னான்.

'சின்ன வயது! அனுபவம் பத்தாது! என் கீழே வேலையைப் பார், சித்தார்த்!' என்று தந்தை கண்டிப்புடன் கூற.... அவரோடு கோபித்துக் கொண்டு... பிஸினஸ் செய்யப் போகாமல்... நண்பர்களைக் கூட்டிக் கொண்டு நகர வலம் வந்தான்.

சிவநாதனும் பொறுப்பு வந்தால்... தானே வருவான் என்று விட்டுவிட்டார்.



அம்மா மீனாட்சியின் செல்லம், அவன்! தினம் தினம் செலவுக்கு பத்தாயிரத்திற்கு மேல் வேண்டும்! அம்மாவிடம் பணமாய் வாங்கிக் கொள்வான். சில சமயம் அந்தப் பணம் பற்றாமல் போய்விடும். அப்போது அவனுடைய கிரெடிட் கார்டை பயன்படுத்திக் கொள்வான்.

வாழ்க்கையில் இதுவரை பார்த்தது, கேட்டது, ஆசைப்பட்டது, ரசித்தது அத்தனையும் தங்குதடையில்லாமல் உடனடியாய் கிடைத்து மகிழ்ந்தவன், சித்தார்த்தன்!

வாழ்க்கையில் வெற்றியையே கண்டவன்!

மகிழ்ச்சியையே, வெற்றியையே கண்ட அவனுக்கு துன்பமென்று ஒன்றும், தோல்வியென்று ஒன்றும் உண்டென்றே தெரியாது!

இதுவரை தன்போக்குக்கு தான்தோன்றித்தனமாய் வளர்ந்து விட்டவன்!

எல்லாமும் கேட்கும் முன்பே கிடைத்துவிட்டதால்... அவனுக்கு வாழ்க்கையின் நெளிவு சுளிவுகள், ஏமாற்றங்கள்... என்று எதுவும் தெரியாது வளர்ந்ததால்... அப்பா தன் பிஸினஸ் சாம்ராஜ்யத்தை தராததால்... ஆத்திரம் கொண்டு தந்தையிடமே பேசுவதில்லை.

பணமும், பகட்டும் நிறைய நண்பர்களைத் தேடித் தந்தது!

புதுச்சேரியின் இளவரசனாய் திகழ்ந்த சித்தார்த்தனிடம் நட்புக் கொள்வதே பெரும் பாக்கியமாய் எண்ணினர். லண்டனில் இருந்து லீவுக்கு எப்போது வருவான் என்று எதிர்பார்த்து ஏங்கும் நண்பர்களுக்கு... நிரந்தரமாய் அவன் படிப்பை முடித்துவிட்டு வந்தது கண்டு... அட்டையாய் ஒட்டிக் கொண்டனர்.

அதில் நல்லவர்கள், சிலபேர்தான்!

கெட்டவர்கள், ஏராளம்!

ஆட்டம், பாட்டம் என்று ஜாலியாய் பண்ணுவார்கள்!

பெண்களின் கூட்டமோ... அவன் அழகுக்கும், பணத்துக்கும் கூட்டமாய் மொய்த்தது.

லண்டனில் சமீபமாய் கற்றுக் கொண்டதுதான்... மதுவையும், மாதுவையும்!

இந்தியா, இந்த நாட்டின் பண்பாடு, ஒழுக்கம், பழக்க வழக்கம், பாரம்பரியம் என்று தெரியாமல் வளர்ந்து விட்டவன் சித்தார்த்தன்!

பத்தாவதுக்குமேல் வெளிநாட்டு வாசம்தான்! இப்போது இருபத்தைந்து முடிந்து இருபத்தாறு வயது ஆரம்பம்!

சமீபமாய் பெண் சிநேகிதிகளோடு அங்கே, இங்கே கண்ட சிவநாதன்... மனைவி மீனாட்சியிடம் விஷயத்தை சொன்னார்.

மீனாட்சி பதற...

'திருமணம் என்ற கால்கட்டு போட்டால் சரியாகி விடுவான், மீனா!' என்று மனைவியை தேற்றிவிட்டு... சித்தார்த்தனிடம் சொல்ல...

''திருமணமா? எனக்கா? ஓ... நோ...! எனக்கு அதெல்லாம் வேண்டாம்! எனக்கு இந்த மணம், மனைவி என்ற மாயவலையில் விழவெல்லாம் பிடிக்காது!'' என்று மறுக்க...

இருவரும் திரும்பத் திரும்ப பேச்செடுக்க...

'எனக்கென்ன வயசாகிறது? பிறகு பார்த்துக் கொள்ளலாம்!' என்று கட்டாயமாய் சொல்லிவிட்டான்.



காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தான், சித்தார்த்தன். அப்பா சிவநாதனும், அம்மா மீனாட்சியும் அருகில் வர...

சட்டென்று சிகரெட்டைத் தூக்கி தூர வீசினான்.

மீனாட்சி அருகில் வந்து... ஆசையாசையாய் அவன் கைப்பிடித்து...

''இது கெட்டப் பழக்கம், சித்தார்த்! இதயத்தையும், நுரையீரலையும் பாதிக்கும்ப்பா! எங்களுக்கு நீ ஒத்தை பையன் மட்டும்தான்! அந்த ஞாபகம் இருக்கட்டும்ப்பா! கண்ணா... இந்த பழக்கத்தை விட்டுடேன்! ப்ளீஸ்...'' என்று கெஞ்ச...

''ஓவரா செல்லம் கொடுத்துட்டு... இப்போது இது கெட்டப் பழக்கம், அது கெட்டப் பழக்கம்... விட்டுடு என்றால் அவனுக்கு நம்மேல் கோபம்தான் வரும்! படிக்க வெளிநாடு அனுப்பியதுதான் நாம் செய்த மகாப் பெரிய தவறு! அடுத்ததாய் கேட்டதெல்லாம் நிறைவேற்றி... அவனை நீ பிடிவாதக்காரனாய் ஆக்கிவிட்டாய்! இப்போ வருந்தி என்ன புண்ணியம்?'' என்று சலிப்புடன் கூற...

''காலையிலே ஏன் இப்படிப் புலம்பறார்?'' என்று தாயைப் பார்த்துக் கேட்க....

''மூக்கு நுனியில் கோபம் இருந்து என்னத்துக்கு ஆகப்போகுது?''

''என்ன விஷயம்மா?''

''நம்ம பள்ளி ஆண்டு விழாவுக்கு முதலமைச்சரை போய் கூப்பிடணும்! அவருக்கு எந்தத் தேதியில வர வசதிப்படும்ன்னு கேட்கணும்! இதுவரை இவன் இருந்த

தில்லே! இந்த ஆண்டு இருக்கான் இல்லையா... இவனும் வந்தால் நல்லா இருக்கும்! முதலமைச்சருக்கு இவனை பார்க்கணுமாம்! அவருக்கு அழைப்பு விடுக்க போகணும்! சாருக்கு இன்று போக வசதிப்படுமா? இல்ல ஏதாவது முக்கியமான வேலையிருக்கா? கேட்டு சொல், மீனா?'' என்ற மீனாட்சியைப் பார்த்து சொல்ல...

''இரண்டு வருட ஆன்வல் பங்ஷனுக்கு வந்திருக்கிறார்! மீண்டும் இந்த ஆண்டு விழாவுக்கு அவர் வரணுமா? அதிகப்படியான செலவு செய்யணுமா?'' சித்தார்த்தன் கேட்க...

''அவரே வந்தாலும் நீ வேண்டாம் என்று சொல்லு வாய் போல! அவர் தலைமையில் விழா நடக்கிறது என்றால்... நீ மாணவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்பிக்கப் போகிறாய்! அப்போதாவது அந்த பள்ளியின் உள்ளே காலெடுத்து வைக்கிறாயா என்று பார்க்கலாம்!'' என்று மகனைப் பார்த்தே பேச...

''நான் வரமுடியாதும்மா...!''

''ஏன், சித்து?'' அம்மா கேட்க....

''நான் டம்மியா வந்து உட்கார்ந்து இருக்கணுமா? அவர் இந்த பங்ஷனுக்கு வந்தால்... நான் வர்லேம்மா..!''

''இதுயென்ன சித்தார்த் பிடிவாதம்?'' அம்மா கோபமாய் கேட்க....

''முதல்வர் வந்தால் நான் கட்டாயம் வரமாட்டேன்! என்னை அந்த விழாவுக்குத் தலைமை ஏற்கச் சொன்னால் மகிழ்ச்சியாய் வருவேன்! இல்லேன்னால் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன்!'' முடிவாய் சித்தார்த் சொல்ல....



''மீனாட்சி... நம்ம துரைக்கு தலைமை ஏற்கணும்ன்னு ஒரு எண்ணம் வந்திருக்கே! அதுவே சந்தோசம்தானே! விழா அழைப்பிதழ்ல தலைமை சித்தார்த்துன்னு போடச் சொல்லிடு!'' என்றவர்...

சித்தார்த்தனைப் பார்த்துச் சொன்னார்.

''ஏய் சித்தார்த்தா... வரேன்னு சொல்லிட்டு... பிறகு சென்னைக்குப் போறேன், பிச்சாவரம் போறேன், வெள்ளி மலை போறேன்னு கிளம்பிடக்கூடாது! தெரியுமா?'' என்று சிவநாதன் கேட்க....

வெற்றி பெற்ற மகிழ்ச்சியில்...

''சரிப்பா! கண்டிப்பா வருவேன்!'' என்று சொல்ல... இருவரும் மகிழ்ந்தனர்.

வேலைக்காரன் கொண்டு வந்து நீட்டிய காபி கோப்பையை ஆளுக்கு ஒன்றாய் எடுத்து அருந்தினர்.

''மீனா... விழாவுக்கு மாணவர்களை பாட்டு, பரதம்ன்னு தயார் படுத்தறீங்களா? யார் பொறுப்பேற்று செய்வது?''

''எல்லாம் நம்ம யுக்தாமுகிதாங்க! அவள் செயல் எதில் சோடை போய் இருக்கு?''

''யுக்தாமுகியா... நீ சொல்லவே வேண்டாம்! அபார திறமைசாலியாச்சே!'' என்று சிவநாதன் சிரிக்க...

'யுக்தாமுகி' என்று பெண்ணின் பெயர் காதில் விழ... சித்தார்த்தனுக்கு சுவாரசியம் வந்து... அவர்கள் பேச்சைக் கவனிக்கலானான்.

''கலை, இலக்கியத்துல எல்லாம் போட்டி வைத்து மாணவர்களை எப்போ தேர்ந்தெடுக்கப் போறீங்க?''

"அதெல்லாம் யுக்தா பார்த்துக்குவாங்க!"

"விளையாட்டுப் போட்டி வைத்தாயிற்றா? அல்லது இனிமேலா?"

"இனிமேல்தான்! யுக்தா இருக்க நமக்கென்னங்க கவலை! பொறுப்பா எல்லாத்தையும் நடத்தி முடிச்சிடு வாள்!

"பாட்டு, பரதம்னு நல்லா ப்ராக்டீஸ் கொடுக்கச் சொல், நம் யுக்தாவை!"

"நீங்க கவலையேப் படவேண்டாம்! யுக்தா தூள் கிளப் பிடுவாள்!"

"விழா இரவு - பேரண்ட்ஸ், குழந்தைகளுக்கு சாப்பிட என்ன அரேஞ்ச் பண்ணியிருக்கீங்க...?"

"கிச்சடி, கேசரி, இட்லி, ஒரு கோக், மினரல் வாட்டர் பாக்கெட்டுன்னு எல்லாம் லிஸ்ட் போட்டாச்சுங்க!"

"எதுக்கு தேவையில்லாத செலவு?" என்று சித்தார்த்தன் இடைப் புகுந்து வேகமாய் கேட்க...

"என்னப்பா சொல்றே? செலவா? நாம சேவைக்காக செய்யறோம், இந்த கல்வி நிறுவனத்தை! குழந்தைகளும், பெற்றோர்களும் பசியோடு இருப்பாங்களா? பாவ மில்லையா? பங்ஷன் முடிய பதினொன்று, பனிரெண்டு மணின்னு - மிட்நைட் வரை இழுத்தடிச்சிடும்! அதுவரை எப்படிப்பா எல்லோரையும் பட்டினிபோட? வருடா வருடம் செய்வதுதானே! " அம்மா விளக்க...

"அப்படியா? இதெல்லாம் யாரோட ஐடியா?"

"நம்ம யுக்தாமுகியோட ப்ளான்தான்!"



"அது யார் யுக்தா...? நம்ம காசையெல்லாம் இப்படி தெண்டமா செலவு வச்சி அழிச்சிடுவா போல! அவளை வந்து பேசிக்கிறேன்!" சித்தார்த்தன் கோபமாய் கூற...

"ஏய் சித்து... நம்ம பள்ளியில ஐந்நூறா இருந்த ஸ்டூ டண்ட்ஸ்ஸை... இன்று ஐந்தாயிரமா உயர்த்த... உயர... நம்ம யுக்தாவும் ஒரு காரணம், தெரியுமா? அவள் தந்த நல்ல பல திட்டங்கள்தான்... இன்று பள்ளி வளரக் காரணம்! அதை செயல்படுத்த... நம்ம பள்ளி பிரபல மாயிடிச்சி! இந்தப் பெருமையில யுக்தாவுக்கும் பங்கு உண்டு!"

"அப்படி பள்ளியில என்னதான் செய்யறீங்க?"

"நம்ம பள்ளி தனியார் பள்ளியா இருந்தாலும்... ஹாஸ்டல் பிள்ளைகளுக்குபோல... தினம் வந்து போகும் ஸ்டூடண்டுக்கு இலவச மதிய உணவு... மாலையில பால், பழம், ஸ்நாக்ஸ்... தொண்ணூறு சதவீதத்துக்கு மேல மார்க் எடுக்கும் பிள்ளைகளுக்கு இலவச கல்வி.... அடுத் ததா கராத்தே, யோகா, பரதம், பாட்டு, இசை கருவிகள் வாசிப்பு, நீச்சல், குதிரை ஏற்றம்ன்னு எல்லாவற்றிலும் குறைவான கட்டணத்தில் பயிற்சி என்று ஏகப்பட்ட சலுகைகளை உடைய பள்ளி இது! ஒவ்வொரு ஐடியாக் களையும் சொன்னவள், நம் யுக்தா!" என்று அப்பா கூற...

"பள்ளி ஆரம்பித்த நாளிலேயே... நமக்கு புதையலாய் கிடைத்த பொக்கிஷம், யுக்தா! என்னோட வலது கையின்னே சொல்லலாம்!" என்று மீனாட்சி புகழ...

"உங்களை நல்லா மயக்கி, சொக்குப்பொடி போட்டு வச்சிருக்கா, அந்த யுக்தாமுகி!"

''போடாப் போக்கிரி! யுக்தா... பற்றி உனக்கென்ன தெரியும்? எங்க யுக்தா பொண்ணோடத் திறமையை நாள் முழுக்க சொல்லிட்டுப் போனாலும் முடியவே முடியாது! அதுபோல பெண்ணை, இல்ல நாள் முழுக்க உழைக்கும் கம்ப்யூட்டரை இதுவரை பார்த்திருக்கமாட்டே!''

''அப்படியா? அதையும் வந்து பார்க்கிறேன்! இதுக்கு மேல யுக்தா புராணம் பாடினீங்க... என்னால் தாங்கவே முடியாது! அலறி அடிச்சிட்டு தூர ஓடிடுவேன்!'' என்று காதைப் பொத்தி நக்கலாய்ச் சிரித்தான்.

அவனும் இனி 'யுக்தாமுகி புராணம்' பாடப் போவது தெரியாமல்.

## 2

'சித்தார்த் வித்யாஸ்ரம் ஸ்கூல்.''

'சேவையே உயரியக் கொள்கை' என்று ஆங்கிலத்தில் தங்கமாய் மினுமினுத்துக் கொண்டிருந்தது எழுத்துக்கள்.

பள்ளியின் முகப்புத் தோற்றமே மிக பிரம்மாண்டமாய் இருக்கும்!

நான்கு மாடி கட்டிடங்கள், மூன்று புற/மும் 'ப' வடிவில் சூழ்ந்திருக்கும்! முன்புறம் பெரிய பள்ளி வளாகம்!

நடுநாயகமாய் வீற்றிருந்த கட்டிடத்தில் பெரிய போர்டிகோ! அதைத் தொடர்ந்து நீள வராண்டாக்கள்!



பெரிய போட்டோக்களில் ஸ்ரீ அரவிந்தரும், ஸ்ரீஅன்னையும் இன்முகத்துடன் வரவேற்கும் காட்சி - நம் மனதை கவரும்!

அழகான பரந்த பித்தளை பாத்திரத்தில் நீர் ஊற்றி அதில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் ரோஜாக்களை மிதக்க விட்டிருப்பார்கள்.

முதல் அறை தாளாளர் மீனாட்சியின் அறை! கோவில் கற்பக கிருகத்தில் நுழைந்த உணர்வு வரும்! லட்சுமி, சரஸ்வதி, விநாயகர், முருகன், வெங்கடாஜலபதி போன்ற தெய்வங்களின் பித்தளை சிலைகள் அழகாய் வைக்கப் பட்டிருக்கும். அருகிலேயே பிரின்ஸ்பால் லட்சுமியம்மாள் அறை! மூன்றாவதாய் ஆசிரியர்களின் ஓய்வறை! இருபுறமும் பெரிய பெரிய வகுப்பறைகள்!

வகுப்புகளின் விஸ்தீரணம், உயர்ரக டைல்ஸ் ஒவ்வொரு மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியே போடப் பட்ட மேஜை, நாற்காலி... நீளமான கரும்பலகை... தேசத் தலைவர்களின் படங்கள் என்று வகுப்பறை காட்சியளிப்பது... எந்த பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் பிடித்துப் போகும்!

பள்ளிக்கு இன்னும் சிறப்பு சேர்ப்பது... பெரிய நூலகமும், கம்ப்யூட்டர் லேப்பும், இயற்பியல், வேதியியல் லேப்பும், தாராளமான மாடிப்படிகளும்... அடுத்ததாய் முடியாத மாணவர்கள் ஏறி இறங்க ஏற்படுத்தப்பட்ட லிப்ட் வசதியும்!

அடுத்ததாய் விளையாட்டு மைதானமும், அந்த பெரிய நீச்சல் குளமும் கூடுதல் வசீகரம்!

அறிவும், அசாத்திய துணிச்சலும் மிக்க ஆசிரிய, ஆசிரியர்கள்...

வகுப்பிற்கு இருபது மாணவர்கள் என்ற லிமிட்டோடு வெகு அற்புதமாய், நேர்த்தியாய் பள்ளி செயல்பட்டு வருகிறது.

பள்ளியின் அருகிலேயே ஹாஸ்டல்!

விருப்பமான ஆசிரியர், ஆசிரியர்களுக்கு அங்கேயே தங்குமிடமும், உணவும் இலவசம்!

ஒரு அறையில் மூவர் என தங்கியிருந்தனர். யுக்தா, திவ்யா, புஷ்பா என மூவரும் அறை தோழிகள்!

ஹாஸ்டலிலிருந்து, பள்ளிக்கு வந்து மீனாட்சியின் அறைக்குள் நுழைந்து, வணங்கி நிற்க...

மூவரையும் பார்த்து ''உட்காருங்கம்மா!'' என்று கூற...

''நோ... மேம்! சொல்லுங்க, மேம்?'' என்று பணிவோடு நிற்க...

''இந்த மரியாதைதாம்மா உங்ககிட்ட ரொம்பப் பிடிச்சது!'' என மீனாட்சி மெச்ச...

''எதுக்கு மேம் கூப்பிட்டீங்க? இன்னும் பத்து நிமிடம் தான் இருக்கு... இறை வணக்கம் ஆரம்பிக்க! சீக்கிரம் விஷயத்தைச் சொன்னால்... போய் மாணவர்களை ஒழுங்குபடுத்துவோம்! மேம்.... முதலமைச்சர் சார்கிட்ட தேதி வாங்கறதாச் சொன்னீங்களே... சார் போனாங்களா?'' என்று யுக்தா அக்கறையாய் கேட்க....

''அதுல ஒரு சின்ன மாற்றம்மா!''

''என்ன மேம்?'' புரியாமல் யுக்தா விழிக்க...



''இந்த வருடம் தலைமை தாங்க முதல்வரை அழைக்கப் போறதில்லே!''

''பின்ன யார், மேம்?''

''என் மகன் சித்தார்த்தன்தான் தலைமை தாங்க விழாவுக்கு வருவான்!'' சட்டென்று சொல்ல...

''சின்னவரா...?'' திவ்யா வாய் பிளக்க...

''அவனை நீ பார்த்ததில்லே... யுக்தா! அவனை இந்த ஆறு மாதத்தில் எத்தனையோ முறை வற்புறுத்தி அழைச்சி இருக்கேன்! வந்தபாடில்லை! அப்படி வரவே வராதவன்... சட்டுன்னு என் தலைமைன்னால் வர்றேன்னு சொல்ல... பெரியவருக்கு சந்தோசம்! எனக்கு சொல்லவே வேண்டாம்! ரொம்ப ரொம்ப சந்தோசம்!'' என்றவள்... பின்னர்,

''யுக்தாவா? யார் அவள்? நம்ம பணத்துக்கு ரொம்ப செலவு வைப்பாபோல! வந்து பேசிக்கொள்கிறேன்னு சொன்னாம்மா!'' என்று பெருமையாய் சொல்ல...

''ஐயோ மேம்...! என்னைப் பற்றி அவர்கிட்ட என்னெல்லாம் சொல்லி மிரட்டியிருக்கீங்க? என் புராணம் பாடினீங்களா?''

''ஆமாம்மா! பெரியவரும் நானும் உன்னைப் பற்றிப் பெருமையா பேசிட்டு இருக்க... சித்துவுக்கு உன்னைப் பார்க்க ஆசை! சரி ப்ராக்டீஸ் எல்லாம் எப்படிம்மா இருக்கு?''

''நல்லா செய்யறாங்க, மேம்! அதைப்பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம்! நாங்க பார்த்துக்கிறோம்!''

''என் பையன் கோபக்காரன்! எதிலையும் குறையிருந்தா அவனுக்குப் பிடிக்காதும்மா!''

''கவலையே வேண்டாம், மேம்!''

''சரி நீங்க போங்கம்மா!'' என்று அனுப்பி வைத்தாள், மீனாட்சி!

கொஞ்ச நேரத்தில் மாணவர்கள் அனைவரும் மைதானத்தில் கூட... காலை வணக்கக் கூட்டம் நடந்தது.

ஒன்பது, பத்து, பதினொன்று, பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் மட்டும் மைதானத்தில் கூடுவர். மீதிப்பேர் அந்தந்த அறையிலேயே நிற்க... ப்ரேயரில் சொல்வது அனைத்தும் ஒலிபெருக்கியில் கேட்கும்.

மீனாட்சி பேசினாள்.

*அன்புள்ள மாணவ, மாணவிகளே... ஆசிரிய, ஆசிரியைகளே... உங்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை உரித்தாக்குகிறேன்! தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதனால், நேரத்தை வீணடிக்காமல் படிக்கவும். உங்களுக்கு ஏற்படும் ஐயங்களை... உங்கள் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொள்ளவும்...*

*''ஆன்வல் பங்ஷனில்... தனித்தனியாகவோ, குழுவாகவோ உங்களின் திறமைகளை காட்டப் போகும் அனைவரும்... சிறப்பான பயிற்சிகளை மேற்கொள்ளவும்.*

*''ஆசிரிய பெருமக்கள் அனைவரும் குழுகுழு வாய் பிரித்துக் கொடுத்த வேலைகளைச் சிறப்பாகச் செய்யவும்...*



*''அடுத்ததாய் ஒரு சிறப்புச் செய்தி! இந்த ஆண்டு விழாவிற்கு தலைமையேற்க, எனது மகன் சித்தார்த்தன் வரப்போகிறார். எதிலும் குறைகளும், குற்றங்களும் இல்லாமல் சிறப்பாய் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர் நம் 'சின்னவர்'! அதனால் கொஞ்சம் சிரத்தை எடுத்து பயிற்சி அளிக்கவும்! மாணவர்களும் சிறப்புடன் பயிற்சியினை மேற்கொள்ளவும்! நன்றி!''*

மீனாட்சியம்மாள் தெளிவாய், அழுத்தம் திருத்தத்தோடு, பிசிறில்லாமல் ஆங்கிலத்தில் பேசி முடித்தார்.

ஆசிரியைகளின் முகத்தில் கூடுதல் மிளிர்ச்சி! புன்னகை!

'காரணம்?'

'சித்தார்த்தன்' தான்! ஒருசிலர் அவனை அங்கே, இங்கே கண்டுள்ளனர்.

மாணவர்கள் அனைவரும் வகுப்பிற்குச் செல்ல... யுக்தாவும், திவ்யாவும் இணையாய் நடந்தனர்.

''ஏய் யுக்தா... நம் சின்னவர் ரொம்ப அழகு, தெரியுமா?'' திவ்யா கண்கள் மின்ன கூற...

''இருக்கட்டுமே!'' என யுக்தா அலட்சியமாய் கூற...

''சாமியாரினிகிட்ட சொன்னேன் பார்! என் புத்தியை எதால் அடிக்கலாம்?'' என்றாள், சலிப்புடன்.

''சரி சொல்லித் தொலை! கேட்டு வைக்கிறேன்!''

''ரொம்பத்தான் அலுத்துக்காதே, யுக்தாமுகி!

''அவரைக் கண்டால்... அவர் அழகில் நீயுமே மயங்கி விடுவாய்!''

''நானா? நோ... நெவர்! அது இந்த ஜென்மத்தில் நடக்காது! உன்னைப் போல அழகுக்கும், ஆஸ்திக்கும், அந்தஸ்துக்கும், பணத்துக்கும், சொத்துக்கும் மயங்கற ஆள் நானில்லே! புரிஞ்சிக்கோ, திவ்யா!'' என்று யுக்தா காட்டமாய் கூற...

''அப்படியா...? அழகில்லாம... பணமில்லாத ஒரு வனை கொண்டு வந்து... உன் முன்பு நிறுத்தினால்... கட்டிக் கொள்வாயா?''

''நல்லவனாய்... ஒழுக்கமுள்ளவனாய் இருந்தால்... எனக்கு ஓ.கே...!''

''போடி பைத்தியமே! நீயெல்லாம் ஒரு ஐந்நூறு வருடங்களுக்கு முன் பிறந்திருக்கணும்! தவறிப் போய், பிரம்மன் இந்த நூற்றாண்டில் படைச்சிட்டான்! பாவம்! பிழை செய்துட்டான், இறைவன்!''

''ஒழுக்கம் மனிதனுக்கு உயிர் போல! தெரியுமா?''

''போதும் உன் ஒழுக்க புராணம்! நம் சின்னவர் உயரமும், கலரும்... அவர் எங்கே இருந்தாலும் தனித்தே தெரிவார்! உடற்பயிற்சி செய்த உடலும்... வலுவான அகன்ற தோளும்... அடடா... என்ன நேர்த்தி! அவரோட எந்த நேரமும் ஒரு கூட்டமிருக்கும்...!

''மேலைநாட்டு கல்வி! அளவுக்கு அதிகமான கணக்கு வழக்கில்லாத சொத்து! ம்... எவளுக்குக் கொடுத்து வச் சிருக்கோ! எவளுக்கு பம்பர் பரிசாய் அந்த தேவன் கிடைக் கப் போறாரோ! அவரைக் கட்டிக்கப் போறவ... ரொம்ப அதிர்ஷ்டசாலிடி, யுக்தா!'' என்று திவ்யா கனவுகளோடு சொல்ல...

''ஏன்... நீ ட்ரை பண்ணுவது?'' நக்கலாய் கேட்க...



''என்ன விளையாடறீயா?''

''ஏன் உனக்கு என்ன குறை?''

''போடி லூசே! அவர் என்னையெல்லாம் திரும்பிப் பார்ப்பாரா? நான் கலர் குறைவு! தலைமுடியும் அவ்வளவு நீளமில்லே! கொஞ்சம் குண்டுகூட! என்னைப் போய் திரும்பிப் பார்ப்பாராடி, கிறுக்கி? சொல்றீயே!'' கவலை யுடன் கூற...

''நீயே உன்னை குறைச்சி எடைப்போட்டுக்காதே! உனக்கென்னடி குறை? நீயும் அழகுதான்! மாநிறமா னாலும் அம்சமான முகம்! பூசனாப்பல உடம்பு! இது ஒண்ணும் குண்டில்லே!''

''உன் அழகுல பத்து பர்சண்ட் தேறுவேனா, யுக்தா?''

''அழகுன்னா எதுடி? வெறும் வெளிப்புறத் தோற்றமா? சிவப்பு தோலா? கவர்ச்சியான இடையா? தலைமுடியா? இதெல்லாம் அழகில்லடி!'' என்றவள், பின்னர் அழகாய் சொன்னாள்.

''அன்புதான் அழகு! பாசம்தான் அழகு! திறமைதான் அழகு! புத்திசாலித்தனம் தான் அழகு! படிப்புதான் அழகு! பொறுமைதான் அழகு! ஒழுக்கம்தான் அழகு! பண் பாடுதான் அழகு! நல்ல தோழமைதான் அழகு! கருணை தான் அழகு! இரக்கம்தான் அழகு! சுயநலம் பாராமல் பிறர் நலம் பார்க்கிறாயே அதெல்லாம் அழகு! இதுயெல்லாமே உன்கிட்ட இருக்கு! திவ்யா, நீ எவ்வளவு நல்லவள்! பாசமானவள்!'' யுக்தா உணர்ச்சிப் பெருக்கில் கண்களில் நீர் மின்ன கூற...

''அழகா பேசறடி! நீ எத்தனை சொன்னாலும் உன்கிட்ட நின்னால் நான் இருப்பதே தெரியாது. தெரியுமா?''

''அன்றைக்கு என்கிட்டவே வராதே, திவ்யா! ஓடிப் போய் சின்னவர்கிட்டேயே நில்! அவர் பார்வை படும் இடத்தில்...!''

''என்ன நக்கலா, யுக்தா?''

''பின்னே சின்னவர்... சின்னவர்ன்னு ஐஸ்கிரீமா உருகுகிறாய்? ஆள் எப்படி? குணம் எப்படி? என்று உனக்குத் தெரியுமா? பொறுப்பில்லாமல் சுத்தறார்ன்னு மேம் பலமுறை சொல்லி என்கிட்ட புலம்பியிருக்காங்க! இந்த பணக்கார பசங்களே... கொஞ்சம் சொல்லும்படியா... இருக்கமாட்டாங்க!...''

திவ்யா அவளை விழியகற்றாமல் பார்க்க...

''இத்தனை நாள் ஆச்சே, படிப்பு முடிஞ்சி வந்து! ஒரு நாளாவது உங்க சின்னவர் வந்தாரா? இதிலிருந்தே அவர் எப்படிப்பட்டவர்ன்னு தெரிஞ்சிக்கலாமே! எத்தனை பொறுப்புள்ள மனுஷன்னுப் புரிஞ்சிக்கலாமே!'' என்று கிண்டலாய் அழுத்திக் கூற...

''நீ சொல்வது உண்மைதான்டி! கொஞ்சமென்ன இல்லை பெரிய செலவாளிதானாம்! பெரியவரோட பிஸினஸ் பார்க்கவும் போகலே! ஊர் சுத்துவார் நல்லா! நான் பார்த்திருக்கேன்! அதுவும் பார்ல.. இருந்து வெளியே வரும்போது...!

''ஆண் தோழர்களோட... சில பெண் தோழிகளும் இருந்தார்கள். எல்லாக் கெட்டப்பழக்கமும் இருக்கும்போல! பெரியவர் எவ்வளவு நேர்மையானவர்! கெட்டப் பழக்கம் இல்லாதவர்! மீனாட்சி அம்மாளை சொல்லவே வேண்டாம்! தங்கமானவர்! இப்படிப்பட்ட இவர்களுக்குப்



பிள்ளை சரியில்லை போல! பாவம் நம்ம மேம்!'' திவ்யா பரிதாபத்துடன் கூறினாள்.

''ஆமாம்... உனக்கெப்படி விஷயம் தெரியும்? அவரைப் பற்றி துப்பு துலங்கினாயா?''

''காற்றுவாக்கில் காதில் வந்து விழுந்த செய்திகள்! அதை நிரூபிப்பதுபோல... நிறைய முறை... தோளில் பெண் தோழிகள் தொங்கிக் கொண்டு சென்றதைப் பார்த்திருக்கேன்! நீதான் எங்கேயும் வரமாட்டே! யுக்தாவோட உலகம் இந்த பள்ளி, ஹாஸ்டல், சமூக சேவை, ஸ்ரீ அன்னை, ஸ்ரீஅரவிந்தர் ஆஸ்ரமம், பஞ்சவடி ஆஞ்சநேயர் கோவிலும்தானே! நான் என்ன உன்னைப் போலா? விடுமுறையானால் புதுச்சேரியை ஒரு இடம் விடாமல் சுத்தறேன் இல்லையா? அப்போது கண்ணில் பட்டிருக்கார்!''

''வகுப்புக்கு போகாமல்... என்னடி திவ்யா அநாவசியமான பேச்சு? வா போகலாம்!'' என்று யுக்தாமுகி கோபமாய் கூற...

''இருடி! வகுப்பு வகுப்புன்னு ஏன் கட்டிட்டு அழறே? சின்னவர் வர சந்தோசத்தை அனுபவிக்க விடாமல்...!''

''போடி இவளே... வாயில எதுனா வந்துடப் போகுது!''

''நீயும் அவரைக் கண்டால்... அவரைப் பற்றியே நினைத்துப் பேசியும் சந்தோசப்படுவாய்!''

''ச்சே... உன் புத்தி ஏன் இப்படி போகுது? அவரைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டேன், தெரியுமா? சேலஞ்டி!''

''சேலஞ்செல்லாம் வேண்டாம். யுக்தா! அவரைப் பார்த்தே... அவருடைய அழகில் தலைசுற்றி குப்புற

விழுந்துடுவே! அப்புறம் எழவே முடியாது, என்னைப் போல!''

''அசிங்கமா பேசாதே! யுக்தாவைப் பற்றி மட்டமா எடைபோடாதே!'' கோபமாய்க் கத்தினாள், யுக்தாமுகி!

''நிச்சயமாச் சொல்றேன்... நீ அவரை திரும்பிப் பார்க் கலைன்னாலும்... சின்னவர் உன்னையே திரும்பத் திரும்ப விழியகற்றாமல் பார்த்துட்டு இருக்கப் போறார்!''

''திவ்யா... உயிரை வாங்காதேடி!'' எரிந்துவிழ...

''உன் அழகுமேல், எனக்கு அபார நம்பிக்கை, யுக்தா!''

''வாயை மூடுடி...!''

''அப்படி ஒரு நல்ல சான்ஸ் கிடைத்தால், விட்டு விடாமல் இருக்கி புடிச்சிக்கோடி! அவர் மயங்கினால் கைக்குள்ளே போட்டுக்கோடி!''

''ஏய்... ஏய்... என்னை கோபப்படுத்தாதே! நல்ல தில்லே!'' என்று எரிமலையாய் சீறினாள், யுக்தாமுகி.

''உலகம் தெரியாதவளா இருக்கியே! எத்தனை பணம்! எத்தனை சொத்து! எத்தனை அழகு! எத்தனை கம்பீரம்!'' ரசனையுடன் சொல்லிக் கொண்டே போக இடைமறித் தாள்.

''வாயைப் பிளக்காதே! டைனோசரே உள்ளே புகுந் துடும் போல! ஒரு மனிதன் உயிர்வாழ பணம் மட்டும் பிரதானமில்லே! ஒழுக்கம் வேண்டும்! பண்பாடு வேண் டும்! நல்ல குணங்கள் வேண்டும்! பெண்ணுக்கு எப்படி கற்போ... அதுபோல ஆணுக்கும் கற்பு உண்டுடி! அதைத் தான் மகாகவி பாரதியார்...



'பெண்ணுக்கு மட்டும்தான் கற்பா? ஆணுக்கும் வேண்டும்!' என்று வலியுறுத்தினான்.

'கற்புநிலை' என்று சொல்ல வந்தால் அதை இரு கட்சிக் கும் பொதுவில் வைப்போம்!' என்றான். முண்டாசு கவிஞ னின் வார்த்தைகளில் அவ்வளவு வீரியமிருக்கு! கருத் திருக்கு! படிச்சதில்லே நீ? 'ப்ளேபாய்' போல் வரன்முறை இல்லாமல் சுத்தறவரை... நான் போய் திரும்பிப் பார்ப் பேனா? அது இந்த ஜென்மத்துல நடக்காது! அப்படி ஒரு கீழ்த்தரமான செயலை செய்யமாட்டேன்! இல்லாதவனாய் இருந்தாலும்... நல்லவனாய் இருந்தால் கல்யாணம் பண் ணிப்பேன்! புரியுதா?''

''சரவணன்போல இருப்பவனையா?''

''அவனை ஏன் வம்புக்கு இழுக்கறே? நம்மைப் போல பணிபுரியும் ஒரு ஆசிரியன்!''

''அது தெரியும்! அவன் உன்னைப் பார்க்கிற பார்வை யில் ஏதோ அர்த்தம் இருக்காப்போல தெரியுது! உன்னை கண்டவுடன்... அவன் முகம் பூவாய் மலர்ந்துடுது! ஆனாலும்... நம்ம ஆசிரியர்கள் மத்தியில், மனதில்... நீதான்டி ராணி!''

''அபத்தமாய் பேசாதே! வகுப்புக்கு நேரமாகுது!''

''எந்த கற்புள்ளவன்... அந்தச் சீதாராமனைப் போல ஒருவன் வந்து மாலையிடப் போறானோ, உன்னை!''

''நீ சொன்னாலும் சொல்லாட்டியும்... அந்தச் சீதாராமன் போல ஒருவன் வருவான்! மாலையிடுவான்! எனக்கு கற்பு முக்கியம்! அது ஆண்களுக்கானாலும், பெண்களுக் கானாலும், தெரியுமா?'

கண்களில் ஆயிரம் கனவுகள் மின்ன... அந்த தேவதை சொன்னாள்.

அவள் நினைவுகளும், கனவுகளும் கானல் நீராகப் போகிறது என்று தெரியாமல்!

# 3

சோர்வடைந்த கதிரவனை மேற்கு தொடர்ச்சிமலை தன் மடியில் போட்டு... தட்டி... தாலாட்டுப்பாடிய, மாலைப்பொழுது!

ஜிலுஜிலுவெனத் தென்றல் காற்று வீசியது.

அந்தப் பள்ளி தன்னை அழகிய இளம்பெண்ணாய் அலங்கரித்து... அழகாய் நின்று காட்சியளித்தது.

எங்கு பார்த்தாலும் சீரியல் பல்புகள்!

வண்ணக் காகிதங்கள்! ஜிகினா காகிதங்கள்! மைதானத்தில் பிரம்மாண்டமான மேடையமைத்து... வண்ண விளக்குகளால் அலங்கரித்திருந்தனர்.

ஹாஸ்டல் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மதியம் வடை, பாயாசத்தோடு பெரிய விருந்தே வைக்கப்பட்டது.

கார்களிலும், இரு சக்கர வாகனங்களிலும்... தன் பெற்றோரோடும், சுற்றத்தினரோடும் வந்த குழந்தைகள் சந்தோசமாய் காட்சியளித்தனர்.



மைதானத்தில் போடப்பட்ட இருக்கைகளில் அனைவரும் அமர்ந்தனர்.

அனைவருக்கும் தரமான காபி வழங்கப்பட்டது.

குழந்தைகளின் மழலைக் குரலில் பள்ளியே கோலாகலமாய் இருந்தது.

ஆசிரிய, ஆசிரியைகள் காலில் சக்கரம் கட்டாத குறையாய்... ஓடியாடி... தங்களுடைய வேலைகளைப் பார்த்துக் கொண்டனர்.

திவ்யா வரவேற்பில் இருந்தாள்.

யுக்தா... சிவப்பும், பச்சை பார்டருமான யூனிபார்ம் சேலையிலேயே... தேவதையாய் காட்சியளித்தாள்.

எந்த அலங்காரமும் இல்லாமல் பளிங்கு சிலையாய் வலம் வந்தாள். நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி... குழந்தைகளை மேடைக்கு அருகில் உள்ள அறையில் தயாராய், வரிசையில் அமர்த்தியிருந்தாள். அந்தந்த வகுப்பு ஆசிரியர்களும் குழந்தைகளோடு ரெடியாய் இருந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பாளினி நம் யுக்தாமுகிதான்! கையில் அட்டையோடு சுற்றிக் கொண்டிருந்தாள்.

மீனாட்சி அம்மாளும், சிவநாதனும் வரவேற்பில் இருந்தனர். யுக்தாமுகி ஓட்டமாய், அவர்கள் அருகில் வந்து சொன்னாள்.

"மேம்.... முக்கியமானவர்கள் வந்துவிட்டார்கள். நேரம் வேறு ஓடிக் கொண்டிருக்கிறது! நிகழ்ச்சி வேற நிறைய இருக்கு. மேம்! அழைப்பிதழில் குறிப்பிட்ட நேரத்திற்கு..... சின்னவர் வந்துடுவாரா, மேம்? என்ன மேம் இன்னும்

சாரை காணலையே! கொஞ்சம் போன் பண்ணுங்களேன்!'' மீனாட்சியைப் பார்த்து கெஞ்சலோடு சொல்ல...

''செய்யறேம்மா! அவன் நேரம் காலம் தவறமாட்டான்! வந்துடுவான்! நீ போய் வேலைகளைக் கவனிம்மா!''

''தறுதலை! வீட்டுல அப்படி என்ன வெட்டி முறிக் கிறான்? நேரத்துல வராமல் எங்கே சுத்திட்டு இருக் கானோ? அல்லது வீட்ல இருக்கானோ? இல்லையோ போன் போடேன்!'' சிவநாதன் கோபத்தோடு சொல்ல....

அவள் போன் செய்தாள்.

''சித்து... எங்கே இருக்கே? என்ன செய்யறே? நேர மாயிட்டே போகுது!''

''வரேம்மா! வந்துட்டே இருக்கேன்!''

''அப்பா என்னிடம் முறைக்கிறார்! கவலையா இருக்கு! வந்துடுவியா... கண்ணா?''

''கவலையா? தேவையே இல்லை! வரேன்!'' என்றதும் போனை ஆப் செய்து, சிவநாதனிடம்...

''வந்துட்டே இருக்கானாம்!'' என்றாள்.

''எல்லோரையும்.... எதிர்பார்த்து, ஏங்க வச்சிட்டுத் தான்... துரை வருவானாமா? பெரிய ஹீரோன்னு நினைப்பு! வானரப் படைகளோடு வந்து, மானத்தை வாங்கறானோ... என்னவோ?''

''அவன் அப்படியெல்லாம் செய்யமாட்டான்! அவ னுக்கு அறிவிருக்காதாங்க?'' என்று மகனுக்குப் பரிந்துக் கொண்டு வர...

''பெரிய அறிவாளிதான்! பேசறாப்பாரு! கொஞ்சம் கூட பொறுப்பில்லாமல் ஊரைச் சுத்திட்டு திரிபவனை...



தூக்கித் தலையில வச்சிட்டுக் கொண்டாடு! உன்னா லேயே இன்னும் கெட்டுக்குட்டிச்சுவராயிடுவான்! நீ ஒருத்திப் போதும்... அவனைக் கெடுப்பதற்கு!''

''சும்மா இருங்க! என் அப்பா வர்றார்!'' என்று மீனாட்சி கூற...

''வாங்க மாமா... வாங்க அத்தே!'' என்று சிவநாதன் தனது மாமனார், மாமியாரை வரவேற்றார்.

கொஞ்ச நேரத்தில்... அந்த வெளிநாட்டுக் காரில்... சித்தார்த்தன் அம்சமாய் வந்திறங்கினான்.

''வாப்பா...'' என்று அம்மா ஓடி வந்து அழைக்க....

வரவேற்புக்காய் நின்றிருந்த மிஸ்கள் புன்னகைத்து, வணங்கி, பன்னீர் தெளித்து, கற்கண்டு, சந்தனம் நீட்ட...

கொஞ்சமாய் எடுத்துக் கொண்டு... மேடைக்குச் செல்ல...

எல்லோரும் வணங்க... மீனாட்சியம்மாவோடு வந்த சித்தார்த்தனை... மேடையில் ஓரமாய் நின்றிருந்த யுக்தா அவனை நிமிர்ந்து பாராமலேயே வணங்கிவிட்டுத் திரும் பிக்கொண்டாள்.

ஆனால், ராஜதோரணையில்... கம்பீரமாய், கோட்டும் சூட்டுமாய் வந்த சித்தார்த்தன்.... அவளை நோக்கினான். வைத்த விழி அகற்றாமல் நோக்கினான்.

கண்களில் ஆச்சரியத்தை தேக்கி 'வாவ்.... எத்தனை அழகி!' என்று வியந்தான்.

யுக்தாமுகி........ அழகின் இலக்கணமாய் தோன்றினாள். அழகிய வதனம்! கயல் விழிகள்! பிறை நெற்றி! அளவான நாசி! தாமரை உதடுகள்! வரிசையான முல்லைப்பற்கள்! லேசாய் சிரித்தாலே குழிவிழும் கன்னக்கதுப்புகள்! சுருள்

கருமையான கேசம்! அதனை படிய வாரி கொண்டையாய் சுற்றியிருந்த நேர்த்தி... வெகு அருமை! அச்சு அசல் 'சித்திரம் பேசுதடி' நாயகி பாவனாவை நினைவு படுத்தினாள், சித்தார்த்தனுக்கு!

மேடையின் நடுநாயகமாய் போட்டிருந்த நாற்காலியில் சித்தார்த்தன் அமர... அவனின் இருபுறமும் சிவநாதனும், மீனாட்சியும் அமர்ந்தனர்.

"ஏய் சித்து... என்ன?" அம்மா கேட்க....

"உங்கள் யுக்தாமுகி?" என்று அவளைக் கைகாட்டிச் சொல்ல...

"கரெக்ட்! எப்படிக் கண்டுபிடிச்சே?" வியக்க...

"திறமைசாலி, புத்திசாலின்னு எல்லாம் எழுதி... அவள் நெற்றியிலே ஒட்டியிருக்கே!" என்று சிரிக்க...

"சித்தார்த்தா... நீ அவள் திறமையை இன்று பார்க்கத் தானே போகிறாய்!" என்ற மீனாட்சி...

மைக்கருகே சென்றாள்.

எல்லோரையும் வரவேற்று... பள்ளிக்கு அளித்த ஆதரவை அன்போடு கூறி அமர்ந்தாள்.

அடுத்ததாய் சிவநாதன்!

மூன்றாவதாய் சித்தார்த்தன் பேசினான்.

மேலைநாட்டு ஆங்கிலத்தில் இத்தனை தெளிவாய், அழகாய், நேர்த்தியாய் சித்தார்த்தன் பேசுவான் என்று சிவநாதனும், மீனாட்சியும் எதிர்பார்க்கவில்லை!

இளைஞிகளோ... ஆசையுடன், அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



திவ்யாவிற்கு சொல்லவே வேண்டாம். கடைவாயில் ஜொள்ளு ஒழுகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

யுக்தா மேடைக்கு பின்புறம் போட்டிருந்த திரை மறைவுக்குச் சென்றுவிட்டாள்.

அவளை அடுத்து, பள்ளி முதல்வர் லட்சுமி... அந்த ஆண்டின் சாதனைகளை விளக்கினாள்.

மாணவர்களுக்கு சித்தார்த்தன் கையால் பரிசு வழங்கப் பட்டது.

அதனை ஓரமாய் நின்று கையில் மைக்குடன் வாசித் தவள், யுக்தாமுகி.

சும்மாகூடத் திரும்பி அவன் முகத்தைப் பார்க்க வில்லை, யுக்தா (அத்தனை வெறுப்பு, அவன் மேல்!)

பின்னர் மேடையின் எதிரே போடப்பட்ட ஷோபாவில் விருந்தினர்கள், மீனாட்சி, சிவநாதன், சித்தார்த்தன் அனைவரும் அமர்ந்தனர்.

நடுநாயகமாய் கால்மேல் கால் போட்டு வீற்றிருந் தான்.... இளவரசன் கணக்காய், சித்தார்த்தன்!

அவளைப் பார்த்தான்! பார்த்துக் கொண்டே இருந்தான்!

எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இத்தனை ஒரு அழகு ஒருவளிடத்திலே கொட்டிக் கிடந்து பார்த்தது இல்லை!

யுக்தாவின் அழகிய வதனம்... அவனை வதைத்து, வாட்டியது!

அந்த எடுப்பான மார்பும்.... சிறுத்த கொடியிடையும்... அவனைப் போதை கொள்ள வைத்தது!

மொத்தத்தில் ஓங்கி வளர்ந்த... அவளின் உருவம்... அவன் மனதில் புயலடிக்க வைத்து... நிலை தடுமாறச் செய்தது!

அவள் குரலோ... குயிலின் கானமாய்... வீணையின் நாதமாய்... காதிற்குள் இனிமையாய் இறங்கி... நெஞ்சில் நிறைந்து நின்றது!

''எங்கள் 'சித்தார்த் வித்யாஸ்ரம் பள்ளி' வியாபார நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதல்ல! பணம் சம்பாதிக்கும் குறுக்கு வழிக்காக கட்டப்பட்டதல்ல! எத்தனையோ கயவர்கள்... தனியார் பள்ளி என்ற பெயரில் கத்தி எடுக்காமல், துப்பாக்கி தூக்காமல், வன்முறையை அரங்கேற்றாமல்... அகிம்சா வழியிலேயே கொள்ளையடித்து... கோடி கோடியாய் சுருட்டி ஈனவாழ்க்கை நடத்துகின்றனர்! ஏழைகளின் இரத்தங்கள் உறிஞ்சப்பட்டு... பள்ளி கட்டிடமாயும், பேங்க் பேலன்ஸாயும் உருமாற்றம் ஆகிறது...!

''ஆனால்... எங்கள் நிறுவனம், உங்களுக்குச் சேவை செய்வதற்காகவே கட்டப்பட்டது! ஆரம்பிக்கப்பட்டது! உங்கள் இளம் குருத்துக்களின் ஆசைகளையும்... உங்கள் கனவுகளையும், கற்பனைகளையும் நிறைவேற்றி... தலைசிறந்த குடிமகனாக... உங்கள் பிள்ளைகளை உருவாக்குவதே, எங்கள் கடமையாகும்...!

''ஏராளமாய் தங்களிடம் உள்ள பணத்தை... உங்கள் சேவைக்காய் செலவழிக்கும் நல்ல உள்ளங்கள் எங்கள் பெரியவரும், மீனாட்சியம்மாளும்!...

''புதுச்சேரி மாநிலத்திலேயே நெம்பர் ஒன் பள்ளியாய் உயர்த்துவதே, எங்கள் குறிக்கோள்! இத்தனை நல்ல பள்ளியில் உங்கள் குழந்தைகளை சேர்த்த... அத்தனை



நல்ல உள்ளங்களுக்கும்... எங்களது நன்றியை உங்களிடம் மனப்பூர்வமாய் சமர்ப்பிக்கிறோம்!''

யுக்தாமுகி முடிக்க... கைத்தட்டலால் அரங்கமே அதிர்ந்தது.

நிகழ்ச்சிகள் ஆரம்பமானது.

யுக்தாவின் இனிய குரலில்... பக்திப்பாடலுடன் ஆரம்பமானது!

'பக்தி பாடல்கூட இத்தனை அளவு நம் உள்ளத்தை தென்றலாய் தீண்டிச் செல்லுமா?' என்று சித்தார்த்தன் வியந்தான்.

மழலையர்கள் அருமையாய் ஆடினர்! பாடினர்! நாடகங்கள் நடித்தனர்! யோகா செய்து காட்டினர். வீணை, வயலின், மிருதங்கம், ட்ரம்ஸ் என்று வாசித்துக் காட்டினர்.

வயதுக்கு அதிகப்படியான திறமைகளை மாணவ, மாணவிகள் வெளிப்படுத்த... கூட்டம் ஆர்ப்பரித்தது!

பலமாய் கைத்தட்டியது!

இடையே மக்கள் வெள்ளத்தை உற்சாகப்படுத்த... ஒரு இந்திப் பாடலைப் பாடினாள், யுக்தா!

அந்த குரலின் நெளிவு, சுளிவு, குழைவு.... சித்தார்த்தனின் மனதை கட்டிப் போட்டது. சித்தார்த்தன் மனதிற்குள் புலம்பினான்.

'ஏய் அழகி... என்னைப் பாரேன்டி!'

'ஏய் காரிகையே... உன்னிடமிருந்து எனக்கு ஒரு கடைக்கண் பார்வைக்கேப் பஞ்சமா?'

'உன் பார்வை பட... எனக்குத் தகுதியில்லையா?'

'அல்லது நான் உன்னைக் கவரவில்லையா?'

'என் அழகு, ஆண்மை, கம்பீரம்... உன்னை வசீகரிக்க வில்லையா?'

'என் இனியவளே... ஒரே ஒரு முறை... உன் பார்வையை, என் மீது செலுத்திவிடேன்! தென்றல் தீண்டிய கணக்காய்... நான் கிறங்கிப்போவேன்!'

'என்னைத் தீண்டிச் சிலிர்க்க வைத்த முகிலே... உன்னிடம் நான் மயங்குகிறேன்!'

'ஆசையாய்... உன் ஓரவிழிப்பார்வை பட தவித்திருக்கும் என் உள்ளம் புரியவில்லையா?'

'என் உள்ளம் கவர்ந்த கள்ளியே... யுக்தா... யுக்தாமுகி' என்று ஆசையாய் அவன் மனம் புலம்பியது.

ஒரு நிலைக்குமேல் அவனுடைய தவிப்பு... கோபமாய் மாறியது!

'என்ன பெண் இவள்?'

'எப்படிப்பட்ட நெஞ்சழுத்தக்காரி?'

'என்னை கவர்வதற்காக... இப்படி அலட்சியப்படுத்துகிறாளா?'

'அல்லது தன்னுடைய காரியத்தில் கண்ணும், கருத்துமாய் இருக்கிறாளா?'

'அதுயென்ன பார்வை... என் காலிலிருந்து கழுத்து வரை மட்டும்?'

'என் முகம் அவளுக்கு அத்தனை சகிக்கவில்லையா?'

அந்த சிப்பியாய் திறந்து மூடும் இமையை மலர்த்தி....



அவளுடைய நீண்ட நயனங்களால்... கள்ளவிழிப் பார்வை ஒன்றை என்மீது செலுத்தக்கூடாதா?

அவன் கோபம்... குரோதமாய் விஸ்வரூபமெடுத்தது.

'எழுந்துபோய் அவள் முகத்தை... இருகைகளிலும் ஏந்தி... விழியோடு விழி நோக்கலாமா?'

'அவள் இதழோடு... என் இதழ் அணைத்து, எதிர்பாராமல்... அவளை கலவரப்படுத்தலாமா?'

'அவள் உடலோடு என் உடலணைத்து... இறுக்கி... இத்தனைப் பேர் முன்னிலையில் அவமானப்படுத்தலாமா?'

'அல்லது பட்டென்று கன்னம் வலிக்க அறையலாமா?'

சித்தார்த்தன் மனம் என்னென்னவோ நினைத்து கொல்லன்பட்டறை உலைக்களமாய் பத்தி எரிந்தது.

அவள் அவனை நேருக்கு நேராய், ஏறெடுத்துப் பாராததை அவமானமாய் உணர...

சித்தார்த்தனைத் திரும்பிப் பார்த்த அம்மா மீனாட்சி கலவரமானாள். அவனின் கோபம் கொண்ட முகத்தைக் கண்டு பதறினாள்.

''என்ன? என்னப்பா சித்து? நிகழ்ச்சி எதுனாப் பிடிக்கலையா?'' என்று கேட்க...

உடனடியாய் முகத்தை இயல்பாக்கி... புன்னகைக்க முயன்றான். பின் சொன்னான்.

''அதெல்லாம் இல்லேம்மா! நிகழ்ச்சி ஒவ்வொன்றும் தேனாய் இனிக்கிறது. குறிப்பா... யுக்தாவோட பாடல்கள் சூப்பர்ம்மா! எல்லா நிகழ்ச்சிக்கும் காரணகர்த்தா... ஐடியா கொடுத்தவள், உங்கள் யுக்தாவா?''

''ஆமாம், சித்தார்த்! படுசுட்டி! திறமைசாலி! மாணவர்களை எப்படி கவருவது என்ற வித்தை தெரிந்தவள்!''

'மாணவர்களை மட்டுமா? என்னையும் கவரும் வித்தை தெரிந்த வித்தகியாச்சே! சரியான அரக்கி!' பல்லைக் கடித்தான்.

''என்னப்பா? ஏன் மௌனமாயிட்டே! பசிக்குதா என்ன? பசிச்சா ஹாஸ்டலுக்குப் போய் சாப்பிட்டுட்டு வர்றியா?'' அம்மா அக்கறையாய் கேட்க...

''அதெல்லாம் வேண்டாம்! நிகழ்ச்சி முடியட்டும்!''

''ரொம்ப நேரமாகும்! லேட் நைட் ஆயிடும்! நீ பசி தாங்கமாட்டே, சித்து!''

''பரவாயில்லேம்மா!''

சின்ன ப்ளாஸ்டிக் தட்டில் கேசரி, இட்லி என விநியோகிக்க குழந்தைகளும், பெற்றோர்களும் உண்டு கொண்டிருந்தனர்.

மீனாட்சி... திவ்யாவை கையாட்டி அழைக்க...

''யெஸ் மேம்!'' என்று சிட்டாய் பறந்து வந்து கேட்டாள்.

''சாரை அழைச்சிட்டு போய்... சாப்பிடச் செய்யும்மா!''

''வாங்க சார்!'' என்று பவ்யமாய் கேட்டவளிடம்...

''உங்க புரோகிராம் ஒவ்வொன்றும் அருமை! மிஸ் பண்ண விரும்பலே, மிஸ்! நீங்க போங்க!''

''ப்ளீஸ் சார்...''



''வேண்டுமானால் ஒன்று செய்யுங்கள்! ஒரு கூல் ட்ரிங்க்ஸ் கொண்டு வாங்க போதும்!''

திவ்யா நகர முயல...

''உங்கள் தோழி... யுக்தாவிற்கும் ஒன்று எடுத்துப் போய் கொடுங்கள்! ரொம்பவே பேசிப்பேசி கலைத்து விட்டார்கள்!''

சித்தார்த்தன் அக்கறையாய் கூற...

திவ்யா கண்களில் கேள்விக் குறியுடன் நோக்கி விட்டுப் போய்... கோக் எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

அடுத்ததாய் யுக்தாவிடம் ஒன்றை நீட்ட வாங்கி அருந்தியவள்...

''நாக்கு வறண்டுப் போச்சி! கலைப்பு வேற! உன் கோக்... எனக்கு உயிர் கொடுத்து இருக்குடி! ரொம்பவே நன்றிடி, திவ்யா!'' என்று கண்களில் நன்றியுடன் கூற...

''உன் நன்றியை எனக்குச் சொல்லாதே!''

''வேற யாருக்கு?''

''நம்ம சின்னவர் சித்தார்த் சாருக்கு சொல்! அவர்தான் உனக்கு கொடுக்கச் சொல்லி, அக்கறையாய் அறிவுறுத்தினார். என்னடி நம்ம ஹீரோவை, தலைமகனைப் பார்த்தாயா?''

''என்னடி உலறல்?'' உன் புத்தி ஏன் கோணலாப் போகுது? பெண்ணாய் பிறந்தவள்... கண்டவர்களையெல்லாம்... கண்டு ரசிக்கக்கூடாது, தெரியுமா? நமக்கு சொந்தமாகப் போகும் ஆணைத்தான், கணவனைத்தான் ரசிக்கணும்! தெரிஞ்சிக்கோ!'' என்று கோபமாய் சீற...

"போடி, கிறுக்கி! நீ இந்த காலத்தில் பிறந்துட்டு ஏன்டி அல்லாடறே? நீயெல்லாம் கண்ணகி, நளாயினி செட்டா பிறந்திருக்கணும்! அதை விடுத்து... இந்த நவநாகரீக காலத்தில் பிறந்து ஏன் இப்படி மண்ணாந்தையாய் இருக்கே?"

"ச்சே... போ திவ்யா! வேலையிருக்கு! உன்னைத் திருத்தவே முடியாதுடி!"

"என்னை நீ திருத்த வேண்டாம்! நம் ஹீரோவைப் பார்த்தாயா? அந்த அழகும், கம்பீரமும் உள்ள மன்மதன் இந்த ரதியை மயக்கவில்லையா? நம் மன்மதன் சூப்பர் தானே?"

"நம் மன்மதன்னு சொல்லாதே! உன் மன்மதன்னு சொல்லிக்கோ! ஒண்ணு சொன்னால் அடிக்க வரமாட்டியே?"

"சொல்? என்ன?"

"உன் மன்மதனை நான் இன்னும் ஏறெடுத்தேப் பார்க்கலை! காலிலிருந்து கழுத்துவரைப் பார்த்தேன்! முகத்தை இன்னும் பார்க்கலே! பார்க்கனும்ன்னும் தோணலே!"

அலட்சியமாய் யுக்தா சொல்ல...

"யுக்தா.... ஏய்.... ஏய்...." என்று திவ்யா அடிக்க கை ஓங்க... அவளை தள்ளிவிட்டுவிட்டு... புன்னகையுடன் அடுத்த நிகழ்ச்சிக்கு வர்ணனையைத் தொடர்ந்தாள்.

அவள் சிரிக்கும் அழகை ரசித்துக் கொண்டே இருந்தான்.

'ஒரு பெண்ணின் சிரிப்பு இத்தனை அழகாய் இருக்குமா? முல்லை மொட்டு... தன் மொட்டவிழ்ந்தாற்போல!



அந்த கன்னக்குழியும்... காதோரம் சொருகியிருந்த ஒற்றை சிவப்பு ரோஜாவும்... மது அருந்தாமலேயே போதையை ஏற்றியது.

சித்தார்த்தன் தடுமாறினான்.

அவனுக்கு, அவள் மேலான ஆசை கரைபுரண்டு ஓடியது! காட்டாறு வெள்ளமாய்... நொப்பும் நுரையுமாய்... பொங்கி, எழும்பி அலையலையாய் வீறுநடைப் போட்டது.

கடைசியாய் யுக்தாவின் சொந்த நடையில் எழுதப்பட்ட கவிதை ஒன்று வாசிக்கப்பட்டது.

**"ஆசைதனை பெரிதும் கொண்டும்**
**அறிவுதனை சிறிதும் கொண்டும்**
**ஊரினை ஏய்க்க வந்த**
**ஊதாரி ஜென்மங்கள் வேண்டா - இந்த**
**ஒப்பற்ற பாரினுக்கே!**

**பிறமக்கள் உழைப்பை சுரண்டும்**
**பிற்பட்டப் புத்திக் கொண்டும்**
**வாழ்க்கைப்படகை ஓட்ட நினைக்கும்**
**சமுதாய விரோதிகள் வேண்டா - இந்த**
**ஒப்பற்ற புவிதாய்தனுக்கே!**

**எழுதத் தெரியாதவன் எழுச்சிக்கவிஞனாம்...**
**ஏமாற்ற தெரிந்தவன் இலக்கியவாதியாம்...**
**சாதனை செய்யாதவன் சரித்திரம் படைத்தவனாம்...**
**இச்சாக் கடை மனம் கொண்டவன் வேண்டா.. இந்த**
**சிறப்பான பாரதத்தினுக்கே!**

மண்ணில் மறைந்ததென்றோ சாதிதனை
மானுடனுக்கு விளக்க நினைக்கும்...
மறைந்த நல்தலைவர்களை மதிக்காத
மட்டமான மனித ஜென்மங்கள் வேண்டா - இந்த
மாசற்ற இந்தியாவினுக்கே!''

யுக்தா முடிக்க கைத்தட்டல் விண்ணையே பிளந்தது!

தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி முடிய....

'இத்தனை சீக்கிரம் நிகழ்ச்சி... ஏன் முடிந்தது?' என அலுத்துக் கொண்டான், சித்தார்த்தன்.

'இனி, அந்த அழகியின் வதனத்தைக் கண்டு ரசிக்க முடியாதே!' என்று நெடிய மூச்சினை வெளிப்படுத்தினான்.

அவன் பார்வையில் விழுந்த அவளுக்கு... இனி விடுதலை உண்டா...?



# 4

வானத்தில் நிலவுப் பெண்... நட்சத்திர இளைஞர்களின்... காதலோடு கூடிய கண்சிமிட்டலுக்குப் பயந்து... மேகக் கூட்டத்தினுள் மறைந்து மறைந்து... நாணத்துடன் அழகாய் நடைப்போட்ட.... நள்ளிரவு!



விழா முடிந்ததும்... வாகனமில்லாத பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளோடு அவரவர்கள் இருப்பிடம் போய் சேர பஸ்கள் அனைத்தும் இயக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளை பத்திரமாய் அவரவர் பெற்றோரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

யுக்தா, திவ்யா, புஷ்பா இன்னும் சில ஆசிரியர்கள் குழு சேர்ந்து... ஹாஸ்டல் பிள்ளைகளை மிரட்டி... மீண்டும் உணவு உண்ணச் செய்து... அவரவர் அறையில் விட்டனர்.

''எக்ஸ்சலண்ட் மம்மி! உங்கள் விழா... இத்தனை ஆரவாரமாய்... இனிமையாய் இருக்கும் என்று... நான் கற்பனைகூடச் செய்து பார்க்கவில்லை! இந்த குட்டிக் குட்டி வாண்டுகளை இத்தனை நேர்த்தியாய், நளினமாய், அச்சுப்பிறழாமல், ஆடவும் பாடவும் வைத்திருக்கிறார்களே. வெரிகுட் மம்மி! இவ்வளவு புகழ்ச்சிக்கும் காரணம் உங்க யுக்தா மிஸ்தானா?''

மீனாட்சியிடம் சொல்லி... சித்தார்த்தன் வியந்து போனான்.

''யுக்தா பெண் நமக்கு கிடைத்தது... பெரிய வரம் சித்து!''

''எந்த ஊர்? புதுச்சேரியா?''

''டெல்லியில பிறந்து வளர்ந்தவள்! பூர்வீகம் தமிழ் நாட்டுல கும்பகோணம்! அம்மா, அப்பா இல்லை!

ஒரு சித்தப்பாவும், சித்தியும், புதுச்சேரியில இருக்காங்க! அவ்வளவா போக்குவரத்து இல்லை! நம் ஹாஸ்டலிலேயே தங்கியிருக்கிறாள். அட... இத்தனை ஆர்வமா, அபூர்வமா... உனக்குகூட கேட்கத் தெரியுமா, சித்தார்த்?

என்னடா? என்ன விஷயம்? நல்லப் பெண்! அவளிட...
உன் சேட்டையை வைத்துக் கொள்ள எண்ணாதே!''

''ச்சை... என்ன மம்மி என் மூடை கெடுக்கறீங்க? சரி
நான் அவளைப் பார்க்கணும்! எங்கே, யுக்தா?'' என்று
கண்களில் மின்னலுடன் கேட்க...

''அவள் அதை விரும்பமாட்டாள்! நீ கிளம்பு! நான்
சொல்லிக் கொண்டு டாடியோடு வருகிறேன்.!''

''நான் அவளைப் பாராட்டணும்!''

''பாராட்டு, புகழ்ச்சிக்கெல்லாம் மயங்கும் பெண்ணில்லே,
அவள்! முக்கியமா, ஆண்களிடம் பேச்சே வச்சிக்க மாட்
டாள்!''

''ஒரு நிமிடம் பார்த்து... கைகுலுக்கி, பாராட்டிவிட்டு
சென்றுவிடுகிறேனே!'' என்று கெஞ்ச...

''வேண்டாம்! சொன்னால் கேள், சித்தார்த்! உன்
குறும்புகளை வெளிப்பெண்களிடம் வைத்துக் கொள்வ
தோடு நிறுத்து!''

''என்னம்மா பேசறீங்க?''

''எனக்கு தெரியாதுன்னு நினைக்கிறாயா? நீ குடிப்
பதும்... பெண்களோடு கூத்தடிப்பதும்! வேணாம். சித்து!
உன் அப்பா ஒழுக்க சீலர்! அப்படிப்பட்டவருக்கு இப்படி
ஒரு பிள்ளையா?''

''மம்மி... புத்தி சொல்ல நேரம் காலம் வேண்டாமா?''
என்று சிணுங்க...

''உன்னை நினைக்கவே கஷ்டமாயிருக்கு!



இந்த ஊர்ல மானம், மரியாதையோடு வாழறவங்க, நாம்!

நம்மை எல்லோருக்கும் தெரியும்!

வெளிநாட்டுல படிக்கும்போது... நீ எப்படி வேணா இருந்திருக்கலாம்!

ஆனால் இது இந்தியாப்பா!

ஒருவனுக்கு ஒருத்தின்னு வாழற... சொர்க்க பூமி!

இப்படிப்பட்ட பூமியில நீ இப்படி ஒழுக்கம் தவறி நடப்பது சரியில்லே!

உன்னை பெற்ற தாயா... நீ என்னை நினைக்க வேண்டாம்!

அட்லிஸ்ட் உன் நலம்விரும்பியா, தோழியா நினைத்து என் வார்த்தைகளை யோசித்துப்பார், சித்து கண்ணா!''

''மம்மி... போர் அடிக்காதீங்க!''

''நீ கிளம்பு! நான் யுக்தா முதலியவர்களிடம் சொல்லிட்டுக் கிளம்ப வேணாமா?''

அவனைப் பிடிவாதமாய் அனுப்பி வைக்க. கிளம்ப மனசே இல்லாதவனாய்... அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கிளம்பினான்.

இவனால் யுக்தாவிற்கு என்ன தீங்கு வரப்போகிறதோ?

***

மறுநாள் மாணவர்களின் நலன் கருதி விடுமுறை விடப்பட்டது.

அடுத்த நாள்...

யுக்தா வகுப்பறையிலிருந்து வெளிவந்து நீள வராண் டாவில் நடக்க... எதிரே வந்த சரவணன் நின்றான். சொன் னான்.

"நேற்றைய நிகழ்ச்சியில்... உங்க பாடலும், கவிதை யும் மணிமகுடம், மிஸ்!" என்று புகழ....

"தேங்க்யூ மாஸ்டர்!"

"முறையா பாட்டு கத்துட்டீங்களா?"

"ம்...!"

"அதான் நல்லா பாடறீங்க! குயிலோட குரலை தோற் கடிச்சிடும் அளவு இனிமையா இருந்தது... உங்க வாய்ஸ்! வாழ்த்துக்கள் மிஸ்!

"தேங்க்யூ மாஸ்டர்!"

"உங்களோட கொஞ்சம் பேசணும், மிஸ்!"

"அபிஷியலா? பர்சனலா?" பட்டென்று கேட்க...

"பர்சனல்!" என்றான்.

"என்கிட்ட என்ன பர்சனல் பேச இருக்கு? நான் வரேன், மாஸ்டர்!"

யுக்தா அமைதியாய் ஒதுங்கி நடக்க...

சரவணன் அப்படியே நின்றுவிட்டான், மன வருத்தத் துடன்!

சரவணனுக்கு யுக்தாமுகியிடம் ஒரு ஈடுபாடு உண்டு!

இதுவரை அங்கே, இங்கே நின்று பார்ப்பவன்... இன்று விழாவை சாக்கிட்டு வந்து பேசினான்!



நல்லவன்! அவன்மேல் யுக்தாவிற்கு மரியாதை உண்டு! அதனால்தான் நின்று இதுவரை பேசினாள். சில பொறுக்கியாய் பிஹேவ் பண்ணும் மாஸ்டர்களிடம் முகம் திருப்பிக் கொண்டு போய்விடுவாள்.

பிரெஞ்சு, இந்தி சப்ஜெட் எடுக்கும் ஆசிரியை, யுக்தா முகி!

'அன்பு' என்றால் யுக்தா! 'யுக்தா' என்றால் 'அன்பு!' என்று மாணவர்களிடையேயும், மற்றவர்களிடையேயும் நிலவும் எண்ணத்திற்கு உரிமையுடையவள்!

அவளுக்குத் தெரிந்ததெல்லாம் அன்பு... அன்பு ஒன்று மட்டுமே!

யுக்தா... எந்த ஒரு செயலைச் செய்தாலும்... மற்றவர் களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் செயல் படுவாள். சுயநலமான வாழ்க்கை, சுயநலமான எண்ணம், சுய விருப்பு, சுயவெறுப்பு, சுயபச்சாதாபம் அற்றவள்!

சமூக சேவையே அவள் உயிர்மூச்சு!

ஒவ்வொரு நிமிடத்தையும் மற்றவர்களின் நலனிற்கு எவ்வாறு செலவிடலாம் என்று சிந்தித்துக் கொண் டிருக்கும்... காந்தியின் மறுபிறவி! மறுஜென்மம்!

போலியோ சொட்டு மருந்து முகாமிற்கு சென்று சேவை யாற்றுவாள்...!

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சி முகாமுக்கு செல்லு வாள்...! எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சியையும், எய்ட்ஸ் வராமல் தன்னை எவ்வாறு காத்துக் கொள்வதென்றும், அப்படியே வந்து விட்டாலும் அதிலிருந்து எவ்வாறு தன்னை வென்று, வாழ்க்கையில் வெற்றிநடை போடுவ

தென்றும், அவள் விளக்கினாள்.... கேட்டுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் உள்ள முக்கால்வாசிப் பேர் திருந்தி விடுவர்! பிறன் மனையை நோக்குபவனும்... மாசற்றவனாய் மாறிவிடுவான்! நெறிபிழற் நடத்தையுடைய இளைஞன்... நல்ல நடத்தையுள்ளவனாய் மாறி... வாழ்க்கையை வென்று, வீறுநடை போடுவான்!

'நண்பர்கள் சேவை மையத்தில்' அவளும் ஓர் உறுப்பினர்.

பாதி ராத்தியில்கூட ரத்தம் வேண்டும் என்று போன் வந்தால் ஓடிவிடுவாள்!

மூன்று மாதத்திற்கு ஒருமுறை ரத்ததானம்... மறக்காமல் செய்வாள்.

கண்தானத்திற்கும், பிற உறுப்புகளின் தானத்திற்கும் எழுதி கொடுத்துவிட்டாள்.

தான் வாழ்வதே... இந்த சமுதாயத்திற்கு என்பது போல இருக்கும்... அவளின் ஒவ்வொரு செயல்களும், நிகழ்வுகளும்!

புதுச்சேரி முதல்வரே... அவளை அழைத்து பாராட்டி இருக்கிறார்! அவளின் பாட்டிற்கு அவரும் அடிமை! இரண்டு வருட பங்ஷனுக்கு தவறாமல் வந்தவருக்கு, யுக்தா நல்ல பரிட்சயம்!

யுக்தாவிற்கு தெரிந்ததெல்லாம் அன்பு, பாசம், பண்பு, இரக்கம், கருணைதான்!

முடிந்தவரை துஷ்டரைக்கண்டால் தூரே விலகிவிடுவாள்!



வேண்டாத விவகாரங்களிலும், வீண் முயற்சிகளிலும் காலத்தை வீணடிக்கமாட்டாள்.

விடுமுறை நாட்களில் சேவை, சேவை என்று சிட்டாய் பறந்து விடுவாள்.

பள்ளி மாணவர்களின் மனதை கொள்ளை கொண்ட ஆசிரியை!

'குழந்தைகளா நானும் உங்களின் தாய்தான்! வீட்டில் உன்னை பெற்றவள், தாய்! பள்ளியில், உன்னை பெறாத ஆசிரியைகள் அனைவரும் தாயே! உங்களுக்கு என்னை எப்படிக் கூப்பிட வேண்டும் என்று ஆசையுள்ளதோ அவ்வாறு அழைக்கலாம்!....'

'மிஸ், ஜி, அம்மா, மம்மி... இதில் எப்படி அழைக்க விருப்பமோ அப்படி அழைக்கலாம்! நீங்கள், என்னை ஒரு ஆசிரியையாக பார்ப்பதைவிட... தாயாய் பார்ப்பதைத் தான்... நான் விரும்புகிறேன்! உங்களை வயிற்றிலே சுமக்கவில்லையானாலும்... என் நெஞ்சிலே சுமக்கிறேன்! உங்களுக்கு ஒரு நல்ல தாயாய், உற்ற ஆசிரியராய் இருந்து வழிகாட்டவே பிரியப்படுகிறேன்! நீ உன் தாயின் அருகாமையில் உள்ள நேரத்தைவிட... எங்களிடம் இருக்கும், செலவிடும் நேரம்தான் அதிகம்! பெற்ற தாயிடம் எப்படிப் பயமில்லாமல்... எந்த சந்தேகத்தையும் கேட்டு... நிவர்த்தி செய்து கொள்கிறாயோ அதுபோல... என்னிடமும் அச்சமில்லாமல் அணுகலாம்! உங்களுக்காக உழைக்கக் காத்திருக்கும்... உங்களின் யுக்தா மிஸ்... ஸாரி... மம்மி!' என்று வகுப்பில் அறிமுகப்படுத்திக் கொள்ள...

நிஜமாகவே தாயில்லாமல் தவித்த பிள்ளைகள் 'மம்மி' என்று அழைக்க... அதனையெல்லாம் கண்ட அத்தனை மாணவர்களும் 'மம்மி' என்றே அழைத்தனர்.

நிஜத்தாயாகவே மாறி ஊழியம் செய்தாள்!

ஹாஸ்டல் பிள்ளைகளை எழுப்பி, குளிக்கச் சொல்லி, ஸ்டடி ஹாலில் அமர்த்திப் படிக்கச் சொல்வதிலிருந்து காலையில் அவள் பணி தொடங்கினால்... இரவு படுக்கப் பத்தாகிவிடும்.

ஹாஸ்டலின் தரம் உயர்ந்து... யுக்தாவின் அன்பால் ஈர்க்கப்பட்ட அருகில் உள்ள மாணவர்கள்கூட... ஹாஸ்டலில் தஞ்சம் புகுந்தனர்.

அவள் மேல் ஆசை கொண்ட, கல்யாணமாகாத ஆசிரியர்கள்... அவளிடம் திருமணம் பற்றிக் கேட்கலாமா என்று கேட்கவே தயக்கம்!

ஏனென்றால், யாரையும் தன்னருகே... குறிப்பாய் ஆண்களை அண்டவிடாமல் 'கால் முளைத்த நெருப்பாய்' வலம் வந்து கொண்டிருந்தாள், அந்த யுக்தாமுகி!

## 5

சித்தார்த்தன் இரவும், பகலும் யுக்தாவின் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டான்! வஞ்சிக்கப்பட்டான்.



கண்ணை மூடினால் கற்பனையிலும்... தூங்கினால் கனவிலும்... கண் விழித்திருந்தால் எதிரிலும்... என யுக்தா அவனுக்கு கண்ணாமூச்சுக் காட்ட... அவளை துரத்திப் பிடிக்க முடியாமல் ஓய்ந்து போனான்.

அவன் மனம் முழுக்க யுக்தாமுகி... யுக்தாதான்!

அழகிய அந்த தேவதை, இல்லையில்லை அந்த ராட்சச பிசாசு... அவனை ஆட்டிப் படைத்தாள்.

அந்த சித்திரவதையைத் தாங்க முடியாமல் கஷ்டப்பட்டான்!

அவளின் 'மென்னகை' அவனின் உயிருக்குள் புகுந்து, உருக்குலைய வைத்தது!

இரண்டு மூன்று நாட்களுக்குத் தாக்குப் பிடித்து நாட்களை நகர்த்தியவன்... அதற்கு மேல் முடியாமல் போக... நேரே பள்ளிக்குச் சென்றுவிட்டான்.

கற்பனையிலே அவளைக் கட்டியணைத்து... கண்டபடி முத்தமிட்டு... அப்படியும் ஆசையடங்காமல் போகவே... மண்டையைப் பிய்த்துக் கொண்டு வந்துவிட்டான்.

பள்ளிவிட்டு மாணவர்கள் அனைவரும் சென்ற பின் டல் ஸ்டூடண்டுக்கு ஒரு வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தாள்.

அவளின் குரல்... தேனாய் வழுக்கிக் கொண்டு போய்... நெஞ்சில் நின்று தித்தித்தது.

அவளின் அக்கறையுணர்ச்சியால் பிரெஞ்சு, இந்தியில் நிறைய மார்க் எடுப்பார்கள், மாணவர்கள்!

சன்னல் வழியே சித்தார்த்தன் அவளைப் பார்த்து... கண்களால் ரசித்து, பருகிக் கொண்டிருக்க... அதனைக் கண்டவள்...

"மிஸ்டர்.. யார் நீங்க? என்ன வேணும்? பேரென்ன.. ..." என்று கேட்டாள்.

வேலையாய் வெளிநாடு சென்ற சில குழந்தைகளின் தகப்பன்களை அவளுக்குத் தெரியாது! இவனும் அப்படித் தானோ என்று நினைத்துக் கேட்க...

சித்தார்த்தன் வகுப்பறையில் நுழைந்தான்.

"சொல்ல இல்லே? பேசால் தெரியாதா? அறிவிருக்க வேண்டாம்! பார்த்தால் படிச்சவர் போல இருக்கீங்க. கேட்டு உள்ளே வரணும் என்ற பண்பாடுகூடத் தெரியாதா மிஸ்டர்?" என்று கோபத்துடன் மேலிருந்து கீழாய் நோக்க...

சித்தார்த்தன் அசிங்கமான வாசகங்கள் அடங்கிய பனியனும், சாயம் போன வெளிர் நீல ஜீன்ஸுமாய்... அசல் பொறுக்கி போல காட்சியளிக்க... இது எரிகிற நெருப்பில் இன்னும் எண்ணெய் ஊற்றியது போலானது.

"மம்மி... மம்மி..." என்ற மாணவர்களை அடக்கி...

"ஏய்... என்ன சத்தம்? பேசாம இருக்க மாட்டீங்க? யார் மிஸ்டர் நீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்? யார் வேண்டும்?"

'நீ தான் வேண்டும்!' சொல்ல நினைத்தவன் சொல்லவில்லை.

"என்னைத் தெரியலையா?" அவளை விழியகற்றாமல் நோக்கிக் கொண்டு கேட்க...

"நீங்க என்ன புதுச்சேரி முதல்வரா? இல்ல இந்தியப் பிரதமரா? அட்லீஸ்ட் இந்த பள்ளியோட தாளாளரா... உங்களைத் தெரிஞ்சிக்க? ம்?" என்று அலட்சியமாய் யுக்தாமுகி கேட்க...



"வருங்காலத்தில் நீ விரும்பினால், உனக்கு ஆசையானால்... நான் புதுச்சேரி முதல்வராகக்கூட ஜெயிப்பேன்! இப்போ இந்த நிமிடமே இப்பள்ளியின் தாளாளராகக் கூட எனக்கு சம்மதம்! உனக்கு சம்மதமா?"

"விளையாடறீங்களா? நான் யார் தெரியுமா?"

"யுக்தாமுகி!"

"என் பெயர் எப்படி தெரியும்? ஆனால், தெரிஞ்சுக்கங்க, மிஸ்டர்! நான் நெருப்பு! போய் எல்லோரையும் கேட்டுப்பாருங்க! உங்க பொறுக்கித்தனத்தை வேறு யாரிடமாவது காட்டுங்க! என்கிட்ட வேண்டாம்! கோ! கோ அவுட், மிஸ்டர்!"

"இவ்வளவு கோபத்திலும், வெறுப்பிலும் பண்பாடு மாறாமல்... மரியாதையா பேசற! உனது பண்பு பிடிச்சிருக்கு! ஐ லைக் இட்!"

"போங்க, மிஸ்டர்!" சீறினாள்.

"முடியாது!"

"எங்க மேடமிடம் கம்ப்ளைண்ட் பண்ண வேண்டி வரும்!"

"எனக்கு ஆட்சேபணையில்லை!" திமிராய் சொல்ல...

"பெரிய இடத்துப் பிள்ளை போல தெரியறீங்க! மரியாதையாய் போயிடுங்க! இல்லே எங்க வாட்ச்மேன் உங்க கழுத்தைப் பிடிச்சி வெளியே தள்ளவேண்டிய நிலைக்கு ஆளாவீங்க!"

"அப்படியா? போ... போய்... அதை முதல்ல செய்யுங்க... சந்தோசப்படுவேன்!" அவன் அலட்சியமாய் நிற்க...

"பைத்தியமா, மிஸ்டர் நீங்க?"

"மேடத்துகிட்ட போவேன்னு சொன்னியே... போகு கம்மா!"

அவன் மீண்டும் அலட்சியப்படுத்தி எரிச்சலடைய வைக்க... தாங்க முடியாமல் ஓடினாள். அவளின் பின்னழகை ரசித்துக் கொண்டே... பின்னாடி வந்தான், சித்தார்த்தன்!

நீள வராண்டாவில் மீனாட்சி வர...

"மேம்... மேம்..." என்று பின்னாடி வந்தவனை சுட்டிக் காட்ட...

"எய் சித்து குட்டி... எப்போடா வந்தே? என்னடா இது சர்ப்ரைஸ்? உனக்கு பள்ளிக்கு வரணும்ன்னு அக்கறை கூட இருக்கா? என்ன ஆச்சரியம்? என் பிள்ளைதானா நீ? இது கனவில்லையே!" என்று மகிழ்ச்சியில் துள்ள...

"மம்மி... ஐ லவ் யூ, மம்மி! கிஸ் மீ, மம்மி!" என்று கன்னத்தைக் காட்ட... மீனாட்சி முத்தமிட...

அவனை அலாக்காக தூக்கி... தட்டாமாலைச் சுற்றி... முத்தமிட்டு இறக்கிவிட்டான், சித்தார்த்தன்!

யுக்தாவின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போலானது!

"யுக்தா... இது சித்தும்மா! என் பிள்ளை சித்தார்த்தன்! மறந்துட்டியா என்ன?" மீனாட்சி சொல்ல... யுக்தா முழிக்க... அவன் கண் சிமிட்டிச் சிரிக்க...

"நோ... நோ... மேம்! ஸாரி.... ஸாரி... மேம்!" என்று திரும்பி தலைத் தெறிக்க ஓடினாள்.

சித்தார்த்தன் மலர்ந்து சிரித்தான்.



அவனின் மலர்ந்த சிரிப்பு காய்ந்து, சருகாகப் போகிறது, எனத் தெரியாமல்!

# 6



அதிக கோபம் கொண்ட ராட்சசனாய்... சூரியன் நகரையே தன் வெப்பத்தால் சுட்டு எரித்துக் கொண்டிருந்த மதியப் பொழுது!

தாவரங்கள் இந்த வெப்பத்தினை தாங்க முடியாமல்... வாடி வதங்கி... இலையெல்லாம் சுருண்டு காட்சியளித்தது.

பறவைகள் ஓடிப்போய், உழைப்பை மறந்து, துறந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன.

மதிய இடைவேளைக்குப் பின்... யுக்தா ஆறாம் வகுப்பில் இந்தி பாடம் எடுத்துக் கொண்டிருந்தாள்.

இளம் நீல ஆகாய வண்ணச் சட்டையும், கறுப்பு நிற பேண்டும் அணிந்து, டீசண்டாய்... அழகிய தேவனாய் சித்தார்த்தன் வந்து நின்று...

"நமஸ்தே ஜீ!" என்று புன்னகைக்க...

யுக்தாவின் மலர்முகம் சட்டென்று கூம்பிவிட்டது.

"ஒருவர் வணங்கினால்... திரும்ப வணங்கணும்ங்கிற முறைகூட... உங்க ஜீக்கு தெரியாதாடா, பிள்ளைகளா?" என்று மாணவர்களை அவன் பார்த்துக் கேட்க...

''உங்களுக்கு என்ன வேணும்?'' முறைப்புடன் கேட்க...

''உன்கிட்ட ஒரு பாக்கி இருக்கு! அதை வசூலிச்சிட்டு போகலாம்ன்னு வந்தேன்!''

''என்கிட்டயா? நான் உங்களுக்கு என்ன பாக்கி வைத்தேன்? மிஸ்டர் இது வகுப்பு நேரம்! நோ டிஸ்டப் மீ! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது!'' என்று தாழ்மையுடன் யுக்தா சொன்னாள்.

''எது எல்லாம்?'' புருவம் உயர்த்தி கவர்ச்சியாய் கேட்க...

''வேற்று ஆண்களிடம் பேசுவது!''

''நல்ல பழக்கம்தான்! அதை நான் ஆமோதிக்கிறேன்!'' நக்கலாய் சொல்ல...

''நீ அன்று அப்படி பேசியதற்கு ஸாரி கேட்கலையே! ஸாரி சொன்னால் போயிடுவேன்!'' பட்டென்று சொல்ல...

''நேற்று அப்படி பேசியதற்கு... என்னை மன்னிக்க வேண்டுகிறேன். சார்!'' அரும்பாய், கைகூப்பி வணங்கினாள்.

''டெல்லியில வளர்ந்து இருந்தாலும்... உன் தன்னடக்கம், பணிவு எனக்கு ரொம்பவேப் பிடிச்சிருக்கு! ஐ லைக் இட்! ஒண்ணு சொல்ல அனுமதியுண்டா?''

அவன் மெல்ல கேட்க... அவள் புரியாமல் விழிக்க..

''நீ ரொம்ப அழகி! தேவதைதான் மேடைக்கு வந்துட்டாளோன்னு... உன்னைப் பார்த்த நொடி ஏமாந்துட்டேன்! உன் அமுல் பேபி பேஸ் ப்யூட்டிபுல்! உன் ஸ்ட்ரெக்சர் என்ன நேர்த்தி! என்ன நளினம்! உன்னைப்



படைக்க பிரம்மன் கூடுதல் கவனமும், நேரமும் எடுத்துட்டு இருப்பான்னு நினைக்கிறேன்!'' ரசனையுடன் அவளைப் பார்த்துச் சொல்ல... அவமானமாய் உணர்ந்தாள்.

''உங்ககிட்ட கைக்கட்டி வேலை செய்தால்... இப்படி மரியாதையில்லாமல் நீ, வா, போன்னு பேசணுமா? இப்படி அடுத்தவர்களை... அனுமதியில்லாமல், அசிங்கமா வர்ணிக்கிறீங்களே! ச்சே! எனக்குப் பிடிக்கலே!''

''பின்னே எப்படிப் பேச? என்னைவிட வயதில் சிறியவள்தானே! அழகை ரசிக்க, வர்ணிக்க அனுமதி பெற வேண்டுமா? என்ன கொடுமை இது?'' சிரிக்காமல் சீரியஸாய் சொல்ல...

''போயிடுங்க சார்! நான் மேடமிடம் கம்ப்ளைண்ட் பண்ணிடுவேன்!''

''என்னன்னு கம்ப்ளைண்ட் பண்ணுவாய்? உங்க வீட்டு தடியன் வம்பு பண்றான்னா?''

'தடியனா... ஐயோ... எத்தனை அளவாய், பொலிவாய், கட்டுமஸ்தாவாய் உடம்பை வைத்திருக்கிறான்! தினந்தோறும் உடற்பயிற்சி செய்வானோ? நல்லவனாய் இருந்தால் நானுமே் இவனுடைய அழகில், ஆண்மையில், தோற்றப் பொலிவில் மயங்கியிருப்பேனோ? சொக்கியிருப்பேனோ?'

'ச்சே! ஏய் மனமே! என்ன இது மானங்கெட்டதனம்? அசிங்கமாய் கண்டதையெல்லாம் கற்பனை செய்து கொண்டு' மனதிடம் சண்டைக்குப் போனாள்.

"என்ன இது பார்வை? ம்? உன் காந்தப் பார்வை என்மீது இப்படி ஆழமாய்ப்படும் போது உலகமே என்வசமானது போல இருக்கு! அடுத்ததா.

'கண்ணில் பாவையர் கடைக்கண் காட்டிவிட்டால்

மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்!'

- என்ற தமிழ் காதல் இலக்கியத்தின் காந்த வரிகள்... எனக்கு ஞாபகம் வருது, யுக்தா! ஆமாம் நான் தடியன் இல்லே தானே? அதைத்தானே நினைத்தாய்? சொல் யுக்தாமுகி?" என்று ஆர்வமாய் கேட்க...

"உங்களுக்கு என்ன சார் வேண்டும்?" முகம் ரத்தமாய் சிவக்க கேட்டாள்.

'நீ... நீதான்டி ரதியே' நினைத்துக் கொண்டான்.

"பசங்க முன்னாடி ஏதாவது அசிங்கமா பேசி திட்டிடப் போறேன்! அதுக்கு முன்னே போயிடுங்க சார்! ப்ளீஸ்..." கையெடுத்து கும்பிட்டு கெஞ்ச...

"உன் கோபம்கூட... உனக்கு கூடுதல் அழகுதான் யுக்தா! என் தொல்லைகளுக்கு தொடரும் போட்டு...

இப்போ நல்லப்பிள்ளையாய் கிளம்புகிறேன்! வரேன், யுக்தா!" அவன் சொல்லிவிட்டுச் செல்ல...

'யுக்தாவாம்... யுக்தா....' தனக்குள்ளே கடுகடுத்தாள்.

கொஞ்ச நேரத்தில் மீனாட்சி மேடம் கூப்பிடுவதாய் பியூன் வந்து சொல்ல... யுக்தா அங்கே செல்ல... சித்தார்த்தன் அங்கே அமர்ந்திருந்தான்.

"வாம்மா, யுக்தா! நம் பள்ளியின் விளம்பரப்படம் எடுத்தோமில்ல... அதை சித்துகிட்ட போட்டுக் காட்டும்மா! நான் ஒரு ரவுண்ட்ஸ் போயிட்டு வரேன்!"



மீனாட்சி அவ்விடம் விட்டு அகன்றாள்.

புலி கூண்டுக்குள் அகப்பட்ட மானாய் தவித்தாள். இரையை விழுங்க காத்திருக்கும் புலியாய், அவன்!

கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்தாள்.

யுக்தா கம்ப்யூட்டரை ஆன் பண்ணி மவுசை இயக்க... சித்தார்த் அவளருகே இருந்த சேரில் அமர்ந்து... கண்ட கண்ட இடங்களில்... பார்வையை மேயவிட... யுக்தாமுகி நடுங்கிவிட்டாள்.

சித்தார்த்தன்... அவளருகே முகத்தை கொண்டுபோய் வாசம் பிடித்து சொன்னான்.

"நல்ல வாசம்! இதுதான் பெண்மையின் வாசமோ! உன் அழகு என்னை மயக்குது, யுக்தா! உன் கவர்ச்சி என்னை உன்னில் கரைய வைக்குது, யுக்தா! உன் கன்னம்தான் என்ன பளபளப்பு... வழுவழுப்பு..." ரசனையுடன் கூறி.. அவள் கன்னம் வருட கை நீட்டிப் போக...

"சார்... சார்..." என்று அவள் அலறி எழுந்துக் கொள்ள...

"ஈஸி யுக்தா! உட்கார்! ஸாரி... என்னால் என்னையே கட்டுப்படுத்த முடியல! இந்த இந்தியப் பெண்கள் ஏன்தான் இத்தனை மோசமாய் உள்ளார்களோ! ச்சே! இதுவே லண்டனாய் இருந்தால்... பிடிச்சிருந்தால்... உதட்டோட உதடு வச்சி கிஸ்கூட பண்ண அனுமதித்திருப்பார்கள்! என்ன நீ இவ்வளவு கட்டுப்பெட்டியாய் இருக்கே?" அவன் பேசப் பேச...

வெண்ணிலவு முகம் கருநிலவாய் மாறியது.

'இந்த மேம்... இப்படி ஒரு பைத்தியத்தோடு விட்டுட்டு... போயிட்டார்களே!' மனதிற்குள் புலம்பினாள்.

படம் கம்ப்யூட்டர் திரையில் ஓட... அதனை கண்களில் ஆர்வம் பொங்க பார்த்துவிட்டு...

"வாவ்... ரொம்ப நல்லாயிருக்கு! நீயா வடிவமைத்தாய்? நீயா இசையைக் கூட்டினாய்? அருமையா வந்திருக்கே! இன்னொரு முறை போடேன்!" என்றவன்...

மவுசை பிடித்திருந்த யுக்தாவின் கை மீது தன் கையை வைத்து அழுத்த... அவன் பெரிய கைக்குள் அவளின் சிறிய கை சிறைப்பட்டு விட்டது.

அந்தக் கையை ரசனையுடன் எடுத்து... சொன்னான்.

"'காந்தள் மெல்விரல்'... குறுந்தொகையில் தலைவன் தலைவியின் கையை இப்படித்தானே வர்ணிப்பான்."

யுக்தா அவசரமாய் கையை உதறினாள். ஆனால் அவன் விடவேயில்லை! தளிருடல் அவன் தொடுகையில் நடுங்கியது.

"சார்... சார்... விடுங்க சார்! என்ன சார் இது அசிங்கமாய்? மேடத்தோட பிள்ளை இப்படி கீழ்த்தரமா நடந்துப்பீங் கன்னு... நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலே!" என்றவள் கையை உருவிக் கொண்டு ஓட்டமாய் ஓடினாள்.

யுக்தாவை தொட்டக் கையை உதட்டருகே கொண்டு போய் முத்தமிட்டான்! முத்தமிட்டுக் கொண்டே இருந்தான்!

# 7

அன்று ஞாயிற்று கிழமை!



இனிய மாலை நேரம்!

ஹாஸ்டல் மாணவர்களுக்கு... பள்ளியின் மினி தியேட்டரில் 'உலகம் சுற்றும் வாலிபன்' என்ற படத்தைப் போட மாணவர்கள் சுவாரசியமாய் பார்த்துக் கொண்டிருந் தனர்.

யுக்தா மெல்ல நடந்து... நீச்சல் குளத்தருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து... மாலைத் தென்றலை அனுப வித்துக் கொண்டிருந்தாள்.

அவளின் முன்பு சித்தார்த்தன் வந்து... அழுத்தமான காலடிகளுடன் நிற்க... பதறி எழுந்துவிட்டாள்.

பள்ளியின் பின்புறம், விளையாட்டு மைதானத்தின் கடைசியில் நீச்சல் குளம் இருந்தது.

சுற்றிலும் யாருமில்லாத தனிமையில் அவனைச் சந்திக்க உடல் உதறியது.

"சா... சார்..." என்று திக்க...

"நான் என்ன சிங்கமா? புலியா? என்னிடம் எதற்கு இத்தனை பயம்? ம்?" என்று மென்மையாய் கேட்க...

'சிங்கம், புலியாய் இருந்தாலும் எனக்குப் பயமில்லே! பொறுக்கியான உன்னிடம்தான்... எனக்கு அதிகம் பயம்!' சொல்லாமல் நினைத்துக் கொண்டாள்.

"யுக்தா... விஷயத்திற்கு நேரே வரேன்! உன் அழகு... உன் அறிவு... உன் திறமை... உன் உடல்... எல்லாமுமாய் சேர்ந்து எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!"

யுக்தா பயத்துடன் விழியகல பார்க்க...

"எனக்கு நீ வேண்டும், யுக்தா! மறுக்க மாட்டயே! 'எப்போ டேட்டிங்' வச்சிக்கலாம்? நீ சரின்னு சொன்னால்... நாளையே

என் கடற்கரையோர ஹவுஸுக்கு போகலாம்! உனக்கு வசதிபடுமா?''

சித்தார்த்தன் இயல்பாய் கேட்க... யுக்தா அதிர்ந்து, மயங்கி விழாத குறைதான்!

''உனக்கு எப்போ நேரம் கிடைக்கும்? உன் வசதிப் போலவே வச்சிக்கலாம்!'' மீண்டும் சர்வசாதாரணமாய் கூற....

யுக்தா எரிமலையாய் பொங்கினாள்.

''ச்சே... இப்படிப் பேச, கேட்க... உங்களுக்கு வெட்கமா இல்லையா? நான் அதுபோல ஆள் இல்லே! வேற ஆள் பாருங்க...''

சொல்லிவிட்டு நகரப் போனவளை... கைநீட்டி மறித்தான்.

''எனக்கு வேறு எவளும் வேண்டாம்! எனக்கு இப்போ உன்னைத்தான் பிடிச்சிருக்கு! உன் நினைவுகள் என்னை இம்சிக்குது! உன் உடல் என் பசியை தூண்டுது!''

''சார்... மேடத்துமேல எனக்கு நிறைய மரியாதையும், மதிப்பும் இருக்கு! அவங்களோட பிள்ளைன்னு கொஞ்சம் வச்சிப்பார்க்கிறேன்! இல்லே நடப்பதே வேறு! என்னை கோபப்படுத்தாதீங்க! மரியாதையா போயிடுங்க! நீங்க நினைக்கறாப்போல பெண்ணில்லை, நான்!'' வெடித்தாள்.

''என் கண்ணசைவுக்கே... ஆயிரம், லட்சம் பொண்ணுங்க க்யூவுல நிப்பாளுங்க! நீ என்னடி அலட்டறே? நான் உன்னைத் தொட கொடுத்து வச்சிருக்கணும்! இந்த



மன்மதனின் கைப்பட புண்ணியம் செய்திருக்கணும், போன பிறவியில் நீ!''

''ஐயோ அசிங்கமா பேசாதீங்க!'' காதைப் பொத்தினாள்.

அவள் கண்கள் அந்தி வானமாய் சிவந்துவிட்டது.

''போயிடுங்க! போங்க! உங்க கண்ணசைவுக்கு க்யூவுல நிற்கற பெண்ணோட பேட்டிக்கோ... எந்த எழவோ வச்சிக்கங்க! சந்தோசமா இருங்க! அதை விடுத்து இனி ஒருமுறை என்னிடம் அசிங்கமாக் கேட்டு வந்து நின்றால் அவமானப்படுவீங்க, சார்! வேண்டாம்!'' கையெடுத்துக் கும்பிட்டாள்.

''எனக்கு உன்னைத்தான் பிடித்திருக்கு! எனக்கு நீ மட்டுமே வேண்டும்!''

''நான் அதுபோல பெண்ணில்லை, சார் நான் பொறந்தது... வளர்ந்தது... படித்தது... எல்லாமே டெல்லி என்றாலும்... என் பூர்வீகம் கும்பகோணம்! நல்ல பேமிலியில பிறந்த பெண்! கற்பை, மானத்தை இரு கண்ணாய் நினைக்கறவங்க! எங்களோட சொத்தே இந்த நல்லொழுக்கம்தான் ப்ளீஸ் தொல்லைப் பண்ணாமல் போயிடுங்களேன்!'' கெஞ்சினாள்.

கண்களில் லேசாய் கண்ணீர் பூத்தது.

''யாராவது நீங்க என்னோட பேசிட்டு இருப்பதைப் பார்த்தால்... எனக்குத்தான் அசிங்கம்!'' பதற்றமாய் சொல்ல...

''ஏன்?'' புரியாமல் கேட்டான், சித்தார்த்தன்.

''உங்களைப் பற்றி இங்கு வேலைப் பார்க்கும் மிஸ்ஸுங்களுக்கு பெரும்பாலும் தெரியும், தெரியுமா?'' அப்பாவியாய் சொல்ல...

''என்னன்னு?''

''நீங்க ஒரு பொம்பளைப் பொறுக்கின்னு!'' பட்டென்று சொல்ல...

''ஏய்.... உனக்கு-தில் ஜாஸ்திதான்டி! இல்லேன்னா... இந்த சித்தார்த்தன் கிட்டேயே நெஞ்சை நிமிர்த்தி... தைரியமா.... 'நீங்க ஒரு பொம்பளைப் பொறுக்கி'ன்னு சொல்லுவியா? வெல்! உன் இந்த வெளிப்படையான பேச்சும், உன் தைரியமும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு...!

''நானா யாரையும் பொறுக்கப்போனதில்லே! என் அழகுல மயங்கி... என் மேல விழுந்துட்டு வந்தவளையும் விலக்கிலே! முதன் முதலாய் நான் விரும்பியது, உன்னைத்தான்! என்னை மயக்கிய முதல் பெண், நீதான்! என்னை அடிமைப்படுத்திய முதல் சிறுக்கி, நீதான்! ஏய் ராட்சசி! விழுந்துட்டேன்! உன் அழகுல விழுந்துட்டேன்! உன் அறிவுல புதைஞ்சிட்டேன்! உன் திறமையில் தடுமாறிட்டேன்! என்னை உன்னிடம் இதற்குமேல் எப்படி விளக்குவது? ம்?'' என்றவன் நிறுத்தி பின் வலுவாய் சொன்னான்.

''உன் மேலான ஆசை... நீ மறுக்க மறுக்க... மேலும் கூடிட்டே போகுது, தெரியுமா? என்கிட்ட இருந்து நீ தப்பலான்னு மட்டும் நினைச்சிடாதே! அது ஒருநாளும் முடியாதுடி! நான் நினைச்சி இதுவரை கிடைக்காமல் போனது... எதுவுமே இல்லை! மரியாதையாச் சொல்! உனக்கு எவ்வளவு வேண்டும்? ஒரு பத்தாயிரம்...? ஒரு லட்சம்?''

யுக்தாமுகி அவனை எரித்துவிடுவது போலப் பார்த்தாள்.



''பத்து லட்சம்? ஒரு கோடி? பத்து கோடி? அல்லது விலைமதிக்க முடியாத, இந்த பள்ளி? எதுவேணும்? உனக்கு ஈடாக! உன் கற்புக்கு கூலியாக!''

யுக்தா பத்ரகாளியாய் மாறி... கண்ணிமைக்கும் நேரத்தில் ஓங்கி அறைந்து விட்டாள்!

அவன் இதை எதிர்பார்க்கவில்லை!

''ராஸ்கல்! நான் அதுபோல காசுக்காக... எதை வேண்டுமானாலும் இளிச்சிட்டு செய்யும் பெண்ணில்லே! அதை முதல்ல தெரிஞ்சிக்கோ!''

''ஏய்... என்னை அறைஞ்சிட்டே இல்ல? உன்னை கவனிச்சிக்கிறேன்டி!'' என்று கூறி... அவள் அருகில் சித்தார்த்தன் வர...

''என்னடா...? என்னடா செய்வே? உன் மிரட்டலுக்கு பயப்படறவ இந்த யுக்தாமுகி இல்லே! அதைத் தெரிஞ்சுக்கோ! உன் பணம், சொத்து, சுகமெல்லாம் யாருக்கு வேணும்?''

சித்தார்த்தனுக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்தது.

''ஏய் மரியாதை... மரியாதை! எனக்கு இப்படி மரியாதையில்லாம பேசினாப் பிடிக்காது!''

''நீ மரியாதையா பேசறீயா? நான் என்ன உன் பொண்டாட்டியா? டிடின்னு ஆயிரத்தெட்டு டி போடறே? உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா? பிடிக்கலேன்னு சொல்றேன்! மீண்டும் வற்புறுத்தறீயே!'' முகம் சிவக்கக் கத்தினாள்.

''உனக்கு என்னதான்டி வேணும்?'' சித்தார்த்தன் வேகமாய்க் கேட்க...

''ஒழுக்கம்... ஒழுக்கம்டா! ஒழுக்கமான ஆம்பளை வேணும்!

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்,**

**உயிரினும் ஓம்பப் படும்!'**

திருவள்ளுவர் எழுதி வச்சிருப்பதை படிச்சதில்லே? முகம் அசிங்கமா இருந்தாலும்... கற்பை போற்றுபவன் வேணும்! சுமாரான படிப்பு... வருமானம் குறைவான வேலையில இருந்தாலும் பரவாயில்லை! நான் அதை வச்சி அழகா குடித்தனம் பண்ணுவேன்! எனக்கு அப்படி ஒரு ஆம்பளை வேணும்! அவனைத்தான் திரும்பிப் பார்ப்பேன்! இப்படி வரன்முறையே இல்லாமல் அலை பவனை திரும்பிப் பார்ப்பதே பாவம்ன்னு நினைக்கிறவள், நான்! நீ என்னன்னா... என்னை உன்னோட படுக்கக் கூப்பிடறீயே! உன்னைப்போல பொறுக்கிகளுக்குன்னே... எவளாவது எய்ட்ஸ் நோயோட சுத்திட்டு இருப்பா! போய் அனுபவிச்சி... நீயும் நோயை வாங்கிக் கட்டிக்கோ! உன்னைப் போல தறுதலைகளாலதான்... இந்தியா எய்ட்ஸ் நோய்ல ரெண்டாம் இடத்துல இருக்கு! ஞாபகம்!'' என்று நக்கலாய் புன்னகைக்க...

''என்னடி சொன்னே?''

சித்தார்த்தன் ஓங்கி அறைந்துவிட்டான்.

கண் மங்கி விட்டது. கன்னத்தில் வலி உயிரே போய் விட்டது!



# 8

யுக்தாமுகிக்கு கண்கள் கலங்கிவிட்டது.

அவன் முன்பு கண்ணீர்விட மனமின்றி... கண்களை படபடவென கொட்டி... கண்ணீரை மறைத்து... நெஞ்சை நிமிர்த்தி பேசினாள்.

''நான் ஒண்ணும் தப்பா சொல்லலையே! ஆயிரம் முறை கூடச் சொல்வேன்! எனக்கென்ன பயம்? சொல்லட்டா?''

''உன் வாய் கொழுப்புக்கு என்கிட்ட வாங்கி கட்டிக்கப் போறே! மரியாதையா பேசு!''

''சரி! உங்களால் என்னை என்ன செய்ய முடியும்?''

''என்ன... என்ன வேணுமானாலும் செய்ய முடியும்?'' அழுத்தம் கூட்டிச் சொன்னான்.

''உங்களால் முடிஞ்சதை செய்யுங்க! என்னால் முடிந் தால்... என்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன்!''

''ஏய்... உன் இந்த திமிர்தான்டி பிடிச்சிருக்கு! ஏன்டி மேலும் மேலும்... என்னை உன்னிடம் அடிமைப்படுத்து கிறாய்? சொன்னாக் கேள்! எனக்கு உன்னை அடையணும்! அனுபவிக்கணும்!''

''அப்படியா... கூடிய சீக்கிரமே ஏமாறப் போறீங்க?

''எப்படி? எப்படி?'' அவசரமாய் கேட்க...

''அதை உங்ககிட்ட விளக்கணும்ன்னு அவசியமில்லே!''

யுக்தா... அவனை அலட்சியப்படுத்த... அழகாய் நடந்து போனாள்.

வீட்டிற்கு வந்தான்.

சித்தார்த்தனின் மனம் நெருப்புக் குழம்பாய் கொதித்துக் கொண்டிருந்தது.

'இவளை என்ன செய்யலாம்?'

'இவளை எப்படி அடக்கலாம்?'

'இவளை எவ்வாறு அடையலாம்?'

'சண்டிக் குதிரையில் பயணம் செய்வதைவிட... முரட்டுக் குதிரையை அடக்கி... அதில் பயணம் செய்வதுதான் வீரமல்லவா?'

'இந்த யுக்தா... முரட்டுக்குதிரை!'

'சேணம், வார்பட்டை பூட்டாத முரட்டுக் குதிரை!'

இவளை அடக்கக் கூடிய வீரம் செறிந்த மறவன்... இந்த சித்தார்த்தனாய்தான் இருக்க வேண்டும்!

நான்கைந்து நாட்களாய் உறக்கம் வராமல்... உறுமலோடு... புலியாய் வீட்டையே கோபத்தோடு சுற்றி வந்தான்.

இரவில் களைத்து உறங்கும் சில மணிநேரம் தவிர... மீதி நேரமெல்லாம் யுக்தாவை எப்படி அடக்கலாம் என்றே சிந்தித்தான்.

சித்தார்த்தனின் மனம் திரியை தூண்டிய விளக்காய்... ஓங்காரமாய்... சுடர்விட்டு எரிந்தது.

'தூண்டுகோல், யுக்தா முகி!'



'யுக்தா வேண்டும்! அதற்காக...'

'அன்பே, ஆருயிரே என்று உருகி நிற்கலாமா?'

'கண்ணே, கண்ணின் மணியே என்று காதல் பேசலாமா?'

'என் செல்லமே, என் தங்கமே, என்னவளே, என்னுயிரே என்று கல்யாணம் பேசி நிற்கலாமா?'

'எதை செய்தாவது அவளை அடைய வேண்டும்!'

'காதல் பேசினால் நம்பமாட்டாள்!'

'ஒருவேளை மணந்து கொள்கிறேன் என்று கல்யாணம் பேசினால்...?'

'கல்யாணம் என்றால் எட்டிக்காயாய் கசந்தவன் அவள் கிடைக்க... கல்யாணம் என்ற சிறைக்குள் செல்லவும் விருப்பமே! திருமணம் என்ற கூண்டுக்குள் சிறைப்பட்டு... அடைப்பட்டு மூச்சு திணறவும்... அவனுக்கு இப்போது சந்தோசமே!

'அவள் இவன் வாழ்க்கையில் வந்துவிட்டால்... அனைத்து கெட்டப் பழக்கங்களையும்... அவள் காலடியில் போட்டுவிட்டு.. ஒருவனுக்கு ஒருத்தியாய்... இந்தியப் பண்பாட்டோடு வாழவும், ரெடி!'

'அவள் ஒத்துக் கொள்வாளா?'

'ஒழுக்கம்... ஒழுக்கமானவன்' என்று புலம்பும்... அவள், இவனை மாலையிட சம்மதிப்பாளா?'

'ச்சே... ஏன் வெளிநாடு போய் படித்தேன்! வரன்முறைக்கெட்டு அலைந்தேன்!' தன்னையே நொந்து கொண்டான், சித்தார்த்தன்!

'அப்படி ஒன்றும் பெண்பித்தனாய் அலையவில்லையே, நான்! எப்போதாவதுதானே...? ஆனாலும்

அது தவறு என்று உணரவில்லையே! உறைக்கவில்லையே!'

அவனையே அவனுக்கு உணர வைத்தவள், யுக்தாமுகி!

யுக்தா மட்டும் அவனை மறுக்காமல் ஏற்றுக் கொண்டால்... வாழ்க்கையில், இனி அவளைத் தவிர... ஒரு பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்!

அம்மாவின் திருமண ஆசையை நிறைவேற்றுவான்! அப்பாவோடு பிசினஸ் பார்க்கப் போவான்! குடிக்க மாட்டான்! ஊர் சுற்றப் போகமாட்டான்! யுக்தாமுகிக்கு நல்ல, பொறுப்பான கணவனாய் இருப்பான்!

யுக்தாவிடம் நான் போய் கேட்கலாமா? அல்லது தாய், தந்தையை அனுப்பலாமா? நானே கேட்கிறேன்! சம்மதிக்கவில்லையென்றால்... அவளுக்குப் பிடித்தமான மீனாட்சி மேடத்தையே அனுப்பலாம்!

அவன் ஞாயிற்றுகிழமைக்காகக் காத்திருந்தான். தினமும் விடியலில் எழுந்து குளித்து சாமி அறைக்கு சென்று வணங்கினான்.

'யுக்தா என்னை மறுக்காமல் மணக்க வேண்டும்!' வேண்டிக் கொண்டான்.

அம்மாவுக்கு அவனின் மாற்றம் ஆச்சரியம்! பணம் கேட்டு தொல்லை கொடுக்கவில்லை! ஊர் சுற்றி லேட் நைட் வந்து கதவு தட்டவில்லை!

சித்தார்த்தனின் இந்த மன மாற்றத்திற்கு என்ன காரணம்? யார்? எதனால்? ஏன்?

விடை தெரியாமல் பெற்றவர்கள் குழம்பினர்.



ஞாயிறு மாலை!

பூங்காவில் அமர்ந்திருந்தாள், யுக்தாமுகி!

புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

அவளருகில் ஒரு ஜோடி ஷூக்கள் அணிந்த கால்கள் நிலம் ஊன்றி நிற்க... பயத்துடன் நிமிர்ந்தவள்... சரவணனைக் கண்டு நிம்மதியானாள்.

அவள் கையிலிருந்த புத்தகத் தலைப்பை கண்டு...

''வெரி இண்ட்ரஸ்டிங் ஸ்டோரி! படிச்சிருக்கேன்!'' என்றவன்...

''மிஸ்... உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்! அனுமதிப்பீங்களா?'' என்று மிருதுவாய் கேட்க...

''ம்...'' என்று தலையாட்டினாள்.

''தப்பா நினைக்கக் கூடாது! உங்களை எனக்கு பிடிச்சிருக்கு! அதுக்காக காதல்ன்னு தப்பா எடுத்துக்க வேண்டாம்! கல்யாணம் செய்துக்க விரும்பறேன்! என்னோட சம்பளம், உங்க சம்பளம் எல்லாமுமாய் சேர்ந்தால்... வாழறது எளிது! சின்னதா ஒரு வீடு! டூ வீலர் ஒண்ணு! ரெண்டு அழகான உங்களைப் போல குழந்தைங்க! நம் எதிர்காலம் மகிழ்ச்சியா இருக்கும்! உங்களுக்கும் என்னை பிடிச்சிருந்தால்... சம்மதத்தை மெதுவாய் சொல்லலாம்! யோசிங்க, யுக்தா!''

சரவணன் படபடவென பேசிவிட்டு அகன்றுவிட்டான்.

'காதல் இல்லாமல் கல்யாணமா?'

'ஒருவேளை கல்யாணமானால்... காதல்தானே வந்து விடுமா?'

'அதுகூட சரி!'

'இதுயென்ன இவன் கல்யாணத்தை வியாபார நோக்கத்தோடு பார்க்கிறான்!'

'எதிர் காலத்தை... இதுயென்ன பெண்ணின் வருமானத்தையும் கொண்டு திட்டமிடுகிறான்!' என்று யுக்தாமுகி பலவித சிந்தனையோடு இருக்க... அழுத்தமான காலடிகளோடு வந்து நின்ற சித்தார்த்தனை... அவள் கவனிக்கவில்லை.

# 9

"கைதேர்ந்த சிற்பி ஒருவனால்... செதுக்கப்பட்ட சிலையாய்... என்ன ஒரு அழகு! வாவ்... தலைமுடி எத்தனை நீளம்! மண் ஒட்டிக் கொள்ளப்போகிறது! தரையில் புரளுதே, யுக்தா! வாரி சுருட்டி கட்டக்கூடாதா? தலை குளித்தாயா? உலர்ந்துடிச்சா, இல்லையா? சுரம் வந்துடப் போகுதுடா!" என தொட்டுப் பார்க்க வர...

யுக்தாமுகி நகர....

"மேகங்களில் மறைந்து விளையாடும் பௌர்ணமி நிலவாய்... உன வதனம் ஜொலிக்கிறதே, கண்ணே!" என்று ரசனையோடு கூற...

கண்களில் வெறுப்பை உமிழ்ந்து, வேறுபுறம் திரும்பிக் கொண்டாள் யுக்தா!



"அலட்சியம் கூட எனக்கு பிடிக்காது, யுக்தா!" என்றவன் அவளைப் பிடித்து தன்புறம் திருப்பினான்.

யுக்தா அவசரமாய்... தோளில் தவழ்ந்த அவனுடைய கையை தட்டி விட்டாள்.

இள மஞ்சள் சேலையில் கறுப்பு பூக்கள் மேலும் அழகை அள்ளி தெளிக்க... அவள் வானத்து தேவதையாய் காட்சி தர... கண்களில் அவளை நிரப்பிக் கொண்டான்.

அவள் அமர்ந்து... புத்தகத்தில் ஏடு திருப்ப... பிடுங்கி... அதனைப் பார்த்தான்.

"கொடுங்க.... கொடுங்க, சார்!" என்று அவன் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்க போக... அவன் புத்தகத்தை தூக்கி பிடித்தான். அவள் அதனை பிடுங்க மல்லுக்கு நிற்க... அவன் தூக்கி பிடித்து... அந்த கைக்கும் இந்தக் கைக்கும் மாற்ற...

அவள் அதனைப் பிடுங்க மல்லுக்கு நிற்க... மார்பு சேலை நழுவ... சித்தார்த்தனின் பார்வை போன திசையை கவனித்து... நழுவிய சேலையை இழுத்துவிட்டுக் கொண்டாள், அவசரமாய்!

அப்போது சித்தார்த்தனுக்கு பாரதிதாசனின் கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வந்தது.

'ஆடைத் திருத்தி நின்றால்

அவன் ஆயிரம் ஏடு திருப்புகிறான்!'

கவிஞன் நிஜத்தை தான் சொல்லியிருக்கிறான். நானும் கூட அந்த நாயகன் போலாகிவிட்டேன்.

"இதைப்பிடி! அமைதியாய் உட்கார். நான் உன்னை ஒண்ணும் செய்யமாட்டேன்!" என்று அவன் தன்மையாய்

கூற, அமர்ந்தாள். அவளின் எதிரே அவனும் அமர்ந்தான்.

''மில்ஸ் அண்டு பூன்' புத்தகங்களை விரும்பி படிப்பாயா? உங்க 'மில்ஸ் அண்டு பூன்' புத்தகங்களுக்கு 100 வயசாகிறது! பிரிட்டனில் 1908-ம் ஆண்டில் ஜெரால்டு மில்ஸ் மற்றும் சார்லஸ் பூன் ஆகியோரால் லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட பதிப்பகம்.

''அந்த புத்தகங்களுக்கு முழுக்க முழுக்க பெண் வாசகர்கள் மட்டுமே! 1970 ஆண்டு வட அமெரிக்காவைச் சேர்ந்த காதல் கதைகளை வெளியிடும் 'ஹார்லிகுன்' பதிப்பகத்துடன் மில்ஸ் அண்டு பூன்' இணைந்தது. அது முதற்கொண்டு 94 நாடுகளில் வெளிவருகின்றது! 24 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்படுகிறது!....''

யுக்தா முகி கண்சிமிட்டாமல் வியந்து அவனை நோக்கினாள்.

'''மில்ஸ் அண்டு பூன்' கதைகளில்... கதாநாயகன் என்பவர் ஒன்று கோடீஸ்வரராக இருப்பார்! அல்லது இரண்டு மூன்று குழந்தைகளின் தகப்பனாக, மனைவி இல்லாமல் கஷ்டப்படுபவராக, திருத்தவே முடியாத தீயவனாக இருப்பார். அவர் கதாநாயகி மீது விருப்பம் கொள்வார். கதாநாயகியை துரத்தித் துரத்தி காதலிப்பார். நாயகி மறுப்பு தெரிவிப்பாள். இறுதியில் நாயகனின் காதல் கண்டு புரிந்து அவனை ஏற்றுக் கொள்வாள்! மொத்தத்தில் எல்லா நாவல்களிலும் சுபமுடிவுகளே! கதை முழுக்க, காதல் வர்ணனைகளும், முத்தக்காட்சிகளும் ஏராளமாய் விஞ்சி நிற்கும்'' அவன் முடித்தான்.

''எப்படி இவ்வளவு விளக்கங்கள் தெரியும்?''



''சமீபமாய் ஒரு நாளிதழில் கட்டுரையா வந்திருந்தது. படித்தேன்! அடுத்ததா தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் அத்தனையுமே நானும் கொஞ்சம் அறிவேன்!''

''சாதாரண புத்தகத்திற்கு இவ்வளவு சரியாய் விளக்கம் கொடுப்பவர்... உங்கள் வாழ்க்கைக்கு எவ்வளவு அர்த்தம் இருக்குன்னு தெரியாமலும்... பண்பாடு.. ஒழுக்கம் பற்றி புரியாமலும் நாகரீகமே இல்லாமல் இப்படி நடந்துகிறீங்களே! இது கொஞ்சம் கூட நல்லாயில்லைங்க, சார்!'' என்று யுக்தா மெதுவாய் கூற...

''நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்!'' பட்டென்று சொல்ல...

''என்ன முடிவு? இனி என்னை தொல்லைப் பண்ணாமல் ஒதுங்கிறதா முடிவு பண்ணியிருக்கீங்களா?'' வேகமாய் யுக்தா கேட்க...

''ம்கூம்! எப்படி முடியும்? உன்னைவிட்டு ஒதுங்குவதா? அதுமட்டும் முடியாதே, பெண்ணே! நீ 'டேட்டிங்' கொடுக்க வேண்டாம்! நான் இனி அதுபோல அசிங்கமா கேட்கவே மாட்டேன், யுக்தாம்மா!'' என்று உருக...

''பின்னே?''

''என்னைத் திருமணம் செய்துக்க சம்மதமாடா, யுக்தா? உன்னைத் திருமணம் செய்து கொள்ள... எனக்குப் பரிபூரண சம்மதமே!'' மெல்ல சித்தார்த்தன் கேட்க...

அவன் சொன்னதைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள், யுக்தா.

அந்தச் சிரிப்பு... அவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது.

"உன் சிரிப்புக்கு என்ன அர்த்தம், யுக்தா...?" சித்தார்த்தன் கண்கள் சிவக்க கேட்டான்.

"கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றீங்களே! பின்னே சிரிக்காமல்?" மீண்டும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு வேகமாய் சிரிக்க...

"ஏய் யுக்தா... சிரிக்காதேடி! சீரியஸா சொல்றேன்! உன்னை திருமணம் செய்துக்க விருப்பம்டி! என்ன சொல்றே?"

"தினம் ஒரு பெண்ணோடு உறவு கொள்பவர், நீங்க! அப்படிப்பட்ட உங்களுக்கு கல்யாணமெல்லாம் சரி வராது சார், போங்க! போய் வேலையைப் பாருங்க!"

"நீ நினைக்கறாப்போல... அந்த அளவு நான் மோசமானவன் இல்லை! இந்த பழக்கம் கூட சமீபமாய் வந்தது தான்! பாரீன்ல படிச்சதால இதெல்லாம் தப்புன்னு தெரியாது. யுக்தா! இந்தியாவுல இப்படி ஒரு கலாச்சாரம் இருப்பதே நிச்சயமாத் தெரியாது! பாரீன்ல யாருக்கு யாரை பிடிக்குதோ... அவங்களோட..."

அவன் பேசிக் கொண்டே போக காதைப் பொத்தினாள்.

"ஏதோ தவறு செய்துட்டேன்! மம்மிகூட இதெல்லாம் தப்புன்னு இப்போதான் சொல்றாங்க! உன் மூலமா திருந்த ஒரு வாய்ப்பை கொடேன், யுக்தா! ப்ளீஸ்..." என்று கெஞ்சினான்.

அப்போது அவன் பையில் இருந்த செல்போன் சிணுங்கியது!

"இந்த பரத் மடையனுக்கு நேரம் காலமே தெரியாது! ச்சே!" என்று செல்லை ஆன் செய்து, ஸ்பீக்கரையும் ஆன் செய்தான்.



"என்னடா? எனக்கு முக்கியமானவங்க கிட்ட பேசிட்டு இருக்கேன்! அப்புறமா பேசு!"

"ஏய் சித்தார்த்... ஆப் பண்ணிடாதேடா! உனக்கு சந்தோசம் கொடுக்கக் கூடிய விஷயம்டா!"

"சொல்லித் தொலை!"

"அழகான பெண் மான் சிக்கியிருக்குடா! உன்னை எங்கோ பார்த்தாளாம்! பிடிச்சிப்போய் வந்துட்டா! என்ன அழகு! என்ன மச்சம்! கன்னம் ரெண்டும் ஆப்பிள்டா! அவள் நெளிவு, சுளிவுகளும்.. மேடுபள்ளங்களும்.. கொடியிடையும் அருமைடா, சித்து! வயசோ பதினெட்டு! கேரளத்து சிட்டு! காலேஜ்ல பஸ்ட் இயர் படிக்குதாம்! பார்த்தாலே போதை வருது! மயங்கிடுவே நீ! அப்படியே சித்தன்ன வாசல் ஓவியம் உயிர்கொண்டாப் போல் இருக்காள்! ஹோட்டல் ப்ரின்ஸ்ல இருக்கோம்! உடனே வர்றியாடா?"

சித்தார்த்தன் பதில் சொல்லாமல் பல்லை கடித்தான்.

"நீ ஆசைப்படறியே யுக்தா... அவள் அமைதியான தென்றலென்றால்... இவள் ஆர்ப்பாட்டமான புயல்... பூகம்பம்! வாடா.!"

யுக்தாவின் முகம் போனப் போக்கைக் கவனித்தவன்...

"ஏய் மடையா... வையுடா போனை! உங்களோடு சுத்தி ஒரு வாரமாச்சி! உங்களோட ஒட்டோ உறவோ எனக்கு இனி வேண்டாம்! இனி அதுபோல எல்லாம் வழிதவற மாட்டேன்! இனி பொம்பளை மேட்டரை எடுத்துட்டு போன் பண்ணாதே!" சித்தார்த்தன் சீற...

"டேய்... டேய்.., உனக்கு என்னடா ஆச்சி? அந்த யுக்தா மோகினி பிடிச்சி ஆட்டறாளா? நீ எங்கே இருக்கே!"

சித்தார்த்தன் பட்டென்று போனை ஆப் செய்தான்.

"பார்த்தாயா, யுக்தா கண்ணே? நான் எப்படி மாறிட்டேன்! நான் வழி தவற... என் ப்ரண்ட்ஸ்களும் காரணம் தெரியுமா?" சிறுபிள்ளையாய் கூற...

"உங்களுக்குன்னு சுய அறிவே இல்லையா?"

"அதான் இப்போ மாறிட்டேனே! இனி ஒழுங்கா இருப்பேன்! என்னை கட்டிக்கொள்ள விருப்பமா?"

"நான் என்ன மடச்சியா? உங்களை கட்டிக்க! எனக்கு ஒழுக்கம் முக்கியம்ன்னு சொன்னேனே!"

"என்னத்தான் சொல்ல வரே?"

"எனக்கு வரும் கணவன் ராமனாய்... அந்த சீதாவின் ராமனாய், ஒழுக்கமுள்ளவனாய் இருக்க வேண்டும்! தசரதனாய் நாளுக்கொரு மனைவியை மணந்தவனாய் இருக்கக் கூடாது!"

"யுக்தா... யுக்தாம்மா... என்னைக் கோபப்படுத்தாதே! பணக்கார பிள்ளைகளிடம் ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது... சரியான முட்டாள்தனம்! அளவுக்கதிகமான பணம், மேலைநாட்டு கல்வி, மேலைநாட்டு கலாச்சாரம், கெட்ட நண்பர்கள், உன்னைப் போன்ற பெண்ணினம் என் ஆண்மை கண்டு, அழகு கண்டு... மேலே விழுந்து மொய்த்தது... என்று எல்லாமுமாய் சேர்ந்து... கொஞ்சம் தப்பு பண்ணிட்டேன்! தடம் மாறிட்டேன்! ஆனால், உன்னை கண்ட நாள் முதலாய்... எவளையுமே தொடலே! ஏன் திரும்பிக்கூடப் பார்க்கலே...!

"உன் நினைவுகளே என்னை இப்படி மாற்றிடிச் சின்னால்... மாற வச்சிடிச்சின்னால்... நீ என் அருகில்



இருந்தால்... நானும் ராமனாய் மாறிடுவேன்! யுக்தாம்மா... உன்னை மணந்த பின் தப்பு பண்ணினால் தட்டிக் கேளுடா!" என்று அடித்து சொல்ல...

"யாராவது கொள்ளிக்கட்டைன்னு தெரிஞ்சே மண்டையை சொறிஞ்சிக்குவாங்களா?"

"யுக்தா... ப்ளீஸ்..."

"எனக்கு உங்களை பிடிக்கலே! எனக்காக நீங்க அனைத்துவித கெட்டப் பழக்கங்களையும் விட்டுட்டு... தவமே இருந்தாலும்... உங்களை பண்ணிக்கமாட்டேன்!"

"யுக்தாமுகி... வேண்டாம்! சொன்னா கேளும்மா! நான் பெரிய கோபக்காரன்! என்னை அடக்கிக் கொண்டுதான் உன்னிடம் கெஞ்சுகிறேன்! என்னை சோதிக்காதே, யுக்தாம்மா!"

அவன் பேச... அவள் முகம் சுளிக்க... கோபமானான்.

"இங்க பார்டி! நான் சாமியே கும்பிட்டது இல்லை! ஆனால் நீ கிடைக்கணும்ன்னு சாமிகிட்ட மனம் உருகி வேண்டிகிட்டேன்! என்னை மணந்துட்டா... இளவரசி மாதிரி இருக்கலாம்! உன்னை கண்ணுக்குள்ளே வச்சி தாங்குவேன்! திருமணத்துக்குப் பிறகு நான் உன் அடிமை! நீ என் முதலாளி! நீ என்ன செய்யணும்ன்னு நினைக்கிறாயோ சொல்லு? செய்யறேன்! உன் அழகு, அறிவு, திறமை... என் ஆண்மை, கம்பீரத்தோட இணையட்டும்! என்னிடமுள்ள அளவுக்கதிகமான பணத்தை... நீ என்ன மாதிரி நல்லது செய்தால் மக்களுக்கு பயன்படும்ன்னு நினைக்கிறாயோ... அதுபோல செய்!"

யுக்தா அலட்சியமாய் உதட்டை பிதுக்க...

"யுக்தா... கல்யாணம்கிற மாயவலையில் விழாமல்... இப்படியே தனியா ஜாலியா இருக்கணும்ன்னு நினைச்சேன்! நீ எனக்கு கல்யாணம் மூலமாத்தான் கிடைப்பேன்னு தெரிஞ்சி என் கொள்கையையே மாத்திட்டேன்! என் எதிர்காலத்தை உன்கிட்ட அடிமைபடுத்த தயார்!....

"என்னோட ஆசையை, என் பெற்றவர்களிடம் சொன்னால் பூரித்துப் போவார்கள்! யுக்தா... நான் என்ன செய்யணும்? குடிப்பேன்! அதை விடணுமா? பொம்பளை பழக்கம் இருந்தது! உன்னை கண்ட நாள் முதல் அதையும் விட்டுட்டேன்! அப்புறமா சிகரெட் பிடிப்பேன்! அதை மறக்கணுமா? இல்ல குறைக்கணுமா? உதவாக்கரையாய் ஊர் சுத்திட்டு இருப்பேன்! அதையும் விட்டுடறேன்! அப்பாவுக்கு ஓய்வு கொடுத்துட்டு பிசினஸ் பார்க்கறேன்! கெட்ட நண்பர்களை மறந்துடறேன்! இன்னும் நான் எப்படி மாறணும்? உனக்கு பிடிக்காததை செய்யவே மாட்டேன். இனியவளே! என்னை புரிஞ்சிக்கடா, என்னுயிரே! மறுத்துடாதே, என் மரகதமே! ப்ளீஸ்... யுக்தாம்மா... மனசுக்கு பிடிச்ச பெண்ணிடம் கெஞ்சுவதில் தப்பே இல்லைன்னு நினைக்கறேன்டா! இதற்கு மேலும் என்னால் என்னை விளக்கமுடியலே, கண்ணே!"

"நீங்க திரும்ப மாறமாட்டீங்கன்னு என்ன நிச்சயம்?"

"மாட்டேன்டா! சத்தியமா!"

"என்னை அடைய இந்த அளவு இறங்கணுமா? நல்லவன் வேஷம் போடணுமா? இவ்வளவு பணம் இருக்க... நீங்களே புரடியூஸ் பண்ணி... பேசாமல் படம் நடிக்கலாம்! உங்களுக்கு நல்லா நடிக்க வருது! விஜய், அஜீத், விக்ரமையெல்லாம்... நீங்க நடிக்க வந்தால்... ஓரங்கட்ட



வச்சிடலாம், கட்டாயமாக!" சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

"விளையாடற நேரமில்லே, யுக்தா! நான் பொய் சொல்லலே! ப்ளீஸ்..."

"நீங்க என்ன கெஞ்சினாலும் என் பதில் நோ தான்!"

அவள் சொற்களால்... இதயம் வலித்தது.

"முகி... இங்கே... இங்கே வலிக்குதுடி!" நெஞ்சைத் தொட்டு காட்டினான்.

"என்னை புரிஞ்சிக்கோடா! என்னால தாங்க முடியலே! எனக்கு நீ வேணும்டா!" சின்னக் குழந்தையாய் கெஞ்சினான்.

"நான் என்ன பொம்மையா? அடம்பிடிச்சி அம்மாகிட்ட வாங்கி தரச் சொல்ல? நான் ரத்தமும், சதையுமான மனுஷி! எனக்குன்னு விருப்பு வெறுப்பில்லையா?"

"யுத்தா கண்ணே..."

"நம்ம பள்ளியில் வேலைப்பார்க்கும் மாஸ்டர் சரவணன் தெரியுமா? உங்களுக்கு தெரிய வாய்ப்பில்லே!"

"அவனுக்கென்ன?" பதற்றத்துடன் கேட்க...

"கொஞ்ச நேரத்திற்கு முன் என்னை மணக்கக் கேட்டார்."

"முட்டாள்!"

"நாளைக்கு பதில் சொல்லணும்!"

"ஏய்... என்னன்னு?" திடுக்கிட்டான்.

"உங்களை மணந்துக்க சம்மதம், சரவணாவென்று!"

''ஷிட்! என்ன விளையாடறீயா? எதுனா தப்பான முடிவு எடுத்துடாதே! உன் வாய்கொழுப்புக்கு அறையணும் போல வெறி வருது! 'என் பொம்பளை'யை கைநீட்டி அடிக்கக் கூடாதுன்னு பார்க்கிறேன்! உன் கும்பகோணம் குறும்பை என்னிடம் காட்டிடாதே!''

''பத்திரிகை தரேன்! வந்து வாழ்த்திட்டு போங்க!''

''என்னை சீண்டினால் சிதறிவிடுவாய்! ஏய்... ஏய்... என்னை டென்சன் படுத்தாதே! என்னால தாங்க முடியலே! இதுவரை நான் நினைச்சி நிறைவேறாதது, கிடைக்காதது எதுவுமேயில்லே!'' உடம்பு நடுங்கியது, சித்தார்த்தனுக்கு!

''இப்போ... இதிலே ஏமாறப் போறீங்க!''

அனல் கக்கும் எரிமலையானான்.

''அழிச்சிடுவேன்! எனக்கு கிடைக்காத ஒண்ணை அடுத்தவனுக்கு கிடைக்காமல் அழிச்சிடுவேன்! உன்னை கொல்லவும் தயங்கமாட்டேன்!''

அவள் கழுத்தை நெறிக்கப போக...

''இப்படி ஒரு சைக்கோவை கட்டிக்க... நான் என்ன முட்டாளா?''

சட்டென்று அவள் கழுத்துக்கு கொண்டுபோன கையை தளர்த்தி... அவள் முகத்தைத் தாங்கிப் பிடித்து கெஞ்சினான்.

''இங்க பார் முகிம்மா! நான் இதுவரை யாரிடமும் இப்படி கெஞ்சிப் போனதில்லே! இதற்கெல்லாம் காரணம்... நான் உன் மேல் வைத்த ஆசையாலும், விருப்பத்தாலும்தான்!''



''ஆசையா? ஆசை அறுவது நாள்! மோகம் முப்பது நாள்! எனக்குத் தெரியாதா?''

''இங்க பார்டா... உன்னிடம் கொண்ட ஆசை என்றுமே குறையாதுடா! ப்ளீஸ்... யுக்தாமுகி...! ஏய்... ஏதாவது தப்பான முடிவெடுத்து என்னை சாகடிச்சிடாதேடி! என்னிடம் முதல் முதலாய் தோன்றிய ஆசைக்கு வெந்நீர் பாய்ச்சி... என்னை சாய்ச்சுடாதேடி! அந்த வேதனையை என்னால் தாங்கவே முடியாது!''

யுக்தாமுகி அவன் பேச்சை சட்டை செய்யாமல்... இளவரசி கணக்காய் நடைபோட...

''ஏய்... இந்த திமிருக்கெல்லாம் ஒருநாள், என் காலில் விழுந்து கெஞ்சப் போகிறாய்!''

''மாட்டேன்!'' நின்று சொன்னாள்.

''அப்போ நான் மிஞ்சுவேன்! காதுல விழுதா?''

''அதையும் பார்க்கலாம். சித்தார்த்தா!'' நக்கலாய் கூறிச் சிரித்தாள்.

இந்தச் சிரிப்பு நிலைக்காது எனத் தெரியாமல்!

# 10

சித்தார்த்தன் நிலை கொள்ளாமல் தவித்தான். 'இத்தனை திமிரானவ்ளை... வீம்புக்காரியை... அலட்சியக்

காரியை நினைக்கவேக் கூடாது! அவள் எனக்கு வேண்டாம்!' என்று மனதிற்கு அவன் கடிவாளம் போட்டாலும்...

'யுக்தாமுகி... யுக்தா... யுக்தாம்மா...!' என்று அவன் மனம்... அவளையே மனனம் செய்தது!

கொஞ்ச நாள் ஆறப்போட்டு... அவள் கோபம் தீர்ந்ததும்... அம்மாவிடம் கூறி.. அவளை மணந்து கொள்ளலாம்! என்று கடைசியாய் முடிவெடுத்தான்.

இதுவரை அவனாய் ஆசை கொண்டு எந்த பெண்ணிடமும் போனதில்லை! அவன் மேல் ஆசை கொண்டு வந்தவர்களை விட்டதுமில்லை!

அவன் முதன் முதலாய் ஆசை கொண்டது யுக்தாவின் மேல்தான்!

எந்தப் பெண்ணைக் கண்டும் சலனப்பட்டதில்லை! சஞ்சலப்பட்டதில்லை!

அவனை சலனப்படுத்திய முதல் பெண் யுக்தாமுகி!

அவனை சஞ்சலப்படுத்திய முதல் பெண் யுக்தாமுகி!

அவனை மயக்கம் கொள்ள வைத்த முதல் பெண் யுக்தாமுகி!

அவனை நிலைதடுமாற வைத்த முதல் பெண் யுக்தாமுகி!

திருமண ஆசையைத் தூண்டிய முதல் பெண் யுக்தாமுகி!

அவளிடம் உள்ள அபரிமிதமான அழகு! இயற்கையான பெண்மை! அலட்டல் இல்லாத அடக்கமான தோற்றம்! அந்த நீளக் கருங்கூந்தல்... வட்ட வடிவ குழந்தை முகம்!



மாசு மருவில்லாத தேகம்! அத்தனையுமே... அவனை அவளுள் போட்டு புதைத்துவிட்டது!

அவளின் இயற்கையான பெண்வாசம்... அவனை கிறக்கம் கொள்ள வைத்தது!

அந்த செர்ரீ உதடு... அவனை கனவிலும் துரத்தி வந்து இம்சித்தது!

அந்த பூந்தளிர் உடல்... அவனை புரட்டிப் போட்டு வேடிக்கை காட்டியது!

அந்த வேல்விழிகள்... அவனை தூங்கவிடாமல் வேதனையைக் கொடுத்தது!

மொத்தத்தில் அவள் அவனுக்கு தேவைப்பட்டாள்!

அவள் தன்னை மறுத்தாலும், அவமானப்படுத்தினாலும் கஜினி முகமதுவாய் மாறி... கடைசிவரை போராடுவான்!

அவனுக்கு வாழ்க்கை முழுக்க யுக்தாமுகி கண்டிப்பாய் வேண்டும்!

அவன் உள்ளத்தை களவாடி கொண்ட தேவதை... யுக்தாமுகி மட்டுமே வேண்டும்!

அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைக்கு அணை போட்டு... கொஞ்சம் ரோஷத்தோடு பள்ளிப் பக்கமே செல்லவில்லை, சித்தார்த்தன்!

* * *

உடனடியாய் சரவணனை கண்டு தன் சம்மதத்தை தெரிவித்தாள், யுக்தாமுகி!

“நன்றி... நன்றி யுக்தாமுகி! எங்கே நீங்க மறுத்துடுவீங்களோன்னு நினைச்சி பயந்துட்டே இருந்தேன்! என்

நெஞ்சுக்கு சந்தோசத்தை வார்த்துட்டீங்க! கல்யாணத்தை ரிஜிஸ்டர் ஆபீஸ்ல வச்சிட்டு... நம்ம பள்ளி ஸ்டாப்பு களுக்கு சின்னதா விருந்து ஒண்ணு வச்சிடலாம்! எதுக்கு வீண் செலவு?''

'கல்யாணம் வீண் செலவா? இந்த சரவணன் எந்த மாதிரி மனிதன்? சிக்கனவாளியா? காசின் அருமை தெரிந் தவனா? நான் தவறு செய்கிறேனா? சித்தார்த்தனுக்கு பயந்து... முட்டாள் தனமான காரியத்தில் இறங்குகிறேனா? என்னால் சரவணனோடு சந்தோசமாய் குடும்பம் நடத்த முடியுமா? இவனுடைய சில சொற்கள் என்னை கலங் கடிக்கிறதே! கவலை கொள்ள வைக்கிறதே!'

''உங்க சித்தப்பாகிட்ட அனுமதி கேட்க வேண்டாமா?''

''ம்கூம்! பத்திரிகை நீட்டினாலே போதும்!''

''உடனே ஒரு தேதியைப் பார்க்கட்டுமா? பத்திரிகை அடிக்கட்டுமா?''

''ம்...!''

''ஏன் யுக்தாமுகி பத்திரிகை செலவு தெண்டம் தானே? வாயால் சொன்னால் என்ன?''

யுக்தாமுகியின் உள்ளம் சோர்ந்துவிட்டது! முகம் கறுத்துவிட்டது!

''ஓ.கே. பத்திரிகை அடிக்கக் கொடுக்கிறேன்!''

இந்த கஞ்சனை கட்டிக்கொண்டு காலமெல்லாம்... எவ்வளவு சித்தரவதை படப்போகிறேனோ?

எல்லாம் சித்தார்த்தனால் வந்தது! சும்மா இருந்தவளை சீண்டிவிட்டு... புதை குழியில் தள்ளப் பார்க்கிறானா? அல்லது இவள் பூக்குவியலில் புதையப் போறாளா? கடவுளுக்கே வெளிச்சம்!



விதி அவளைப் பார்த்து 'மதி கெட்ட பெண்ணே!' என்று கைக்கொட்டிச் சிரித்தது.

முதலில் செய்தியை மீனாட்சியிடம் சொல்ல...

''என்னம்மா இப்படிச் செய்துவிட்டாய்? உன்னை என் பிள்ளைக்கு கட்டி வைத்து... இந்த பள்ளியின் பொறுப்பை உன் தலையில் தூக்கி வச்சிட்டு... வயசான காலத்துல வீட்டுல நீட்டி படுக்கலாம்ன்னு நினைச்சேன்! மூக்கணாம் கயிறு இல்லாமல் கட்டுத்தறியில் சிற்காமல்... காளையாய் சுற்றிக் கொண்டு இருக்கும் சித்துவை உன் மூலமா அடக்கலாம்னு நினைச்சேன்! என் ஆசையில கைப்பிடி மண்ணள்ளி போட்டுட்டியேம்மா!'' என்று கவலையுடன், முகம் வாடி கூறிய மீனாட்சியிடம்...

'உங்களுக்கு ஒரு பெண்ணிருந்து... சித்தார்த்தை போல மாப்பிள்ளைக்கு கேட்டால்... மணம் முடித்து கொடுப்பீர் களா?' என்று கேட்க நினைத்து... மனதை அடக்கி மௌன மாய் நின்றாள்.

அன்றுகாலை சித்தப்பா வீட்டிற்கு போய் பத்திரி கையை கொடுத்தாள். மாலை சித்தார்த்தன் பங்களாவிற்கு சென்றாள்.

'சித்தார்த்தனிடம் திருமணத்திற்கு சம்மதம் என்று தலையாட்டி இருந்தால்... இந்த விலைமதிக்க முடியாத, பிரம்மாண்டமான பங்களா... எனக்கு சொந்தமாகியிருக்கும்!'

'ச்சே....! என்ன இது அசிங்கமான கற்பனை!' மனதிற்கு கொட்டு வைத்து உள்ளே நுழைந்தாள்.

'ஆனாலும் வலிய வந்த ஸ்ரீதேவியை வேண்டாம் என்று சொன்ன பைத்தியக்காரியாய்... தன்னைத் தவிர வேறு யாருமே இருக்கமாட்டார்கள்!'

'இதுவே திவ்யாவா இருந்தால்...?'

திவ்யாவிடம் கூட சித்தார்த்தனைப் பற்றி மூச்சு விட வில்லை!

சித்தார்த்தன் மணக்கக் கேட்டான் என்று விஷயத்தை சொல்லியிருந்தால்... எதையாவது பேசி... சம்மதிக்க வைத்துவிடுவாளோ என்று பயம்!

'மனம்தான் ஒரு குரங்காச்சே!'

"அடடே... யுக்தாவா? வாம்மா!" அன்புடன் வரவேற்றார், சிவநாதன்.

அவரிடம் பத்திரிகையை நீட்ட...

"ரொம்ப சந்தோசம்மா! சரவணன் உனக்கு ஏத்தப் புருஷனாய் இருப்பான்!" என்றார்.

மீனாட்சி காபியை நீட்டினாள். யுக்தாமுகி வாங்கிக் கொண்டாள்.

"அவசரமா ஒரு பங்ஷனுக்கு போகவேண்டியிருக்கு!"

"நான் சித்தார்த்தன் சாரைப்பார்த்து, அழைப்பிதழ் கொடுக்கணும், மேம்!"

"மேலே நாலாவது அறை அவனுடையது! என்னவோ தெரியலேம்மா! எதற்கெடுத்தாலும் எரிஞ்சி எரிஞ்சி விழறான்! நெருங்கிய சொந்தத்தில்தான் பங்ஷன்! வர மறுத்துட்டு படுத்திருக்கான்! அவனை கீழே அழைத்தால் சத்தம் கூட போடலாம்! அதனால் நீயே மேலேப் போய் பார்! நாங்க கிளம்பறோம்மா!" என்று கூறிவிட்டு சிவநாதனும், மீனாட்சியும் சென்றுவிட்டனர்.



'புலியை அதன் குகைக்குள்ளே சந்திக்கப் போகிறாள்!'

மாடிப் படியேறி... அவனுடைய அறைக்கதவை தட்ட...

"நான் வர்லேன்னு எத்தனை முறை சொல்வது? ஏம்மா மனுஷனைப் படுத்தறீங்க? உங்க தொல்லைக்கு ஒரு அளவே இல்லையா?"

சித்தார்த்தன் சலித்துக் கொண்டே திறக்க... அங்கே யுக்தா நிற்க... அவளைக் கண்டதும்... நெஞ்சத்தில் பூஞ்சாரல் ஊஞ்சல்கட்டி... உற்சாகமாய் ஆடியது!

'ஒரு வேளை என்னை பார்க்காமல் இருக்கமுடியாது, என்னைத்தேடி வீட்டிற்கே வந்துவிட்டாளா?'

'அல்லது திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்க வந்திருக்கிறாளா?'

மொத்தத்தில் அவள் வருகை சந்தோஷத்தை கொடுத்தது!

வெற்று மார்போடு... வெறும் லுங்கியில் இருந்தவன் "வா யுக்தா! உன் வரவு நல்வரவாகட்டும்!" என்று அறையை திறந்துவிட்டவன்... அவசரமாய் வந்து... ஹேங்கரில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து மாட்டினான்.

சித்தார்த்தனின் அழகு... விரிந்து பரந்த தோள்கள்... நெஞ்சு முழுக்க அடர்ந்து, வளர்ந்து அவன் ஆண்மையை பறைசாற்றும் முடிக்கற்றைகள்... எல்லாமுமாய் சேர்ந்து... ஒரு நிமிடம் அவளைத் தடுமாறச் செய்தது.

'இவன் நல்லவனாய் இருந்திருந்தால்... எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!'

'ச்சே! ஏன் இப்படி மட்டமான திருட்டு நினைப்பு?'

'அதுயென்ன ஒழுக்கம், ஒழுக்கமான ஆம்பளை என்று இப்படிப்பட்ட ஆணழகனை கைநழுவ விட்டுவிட்டாயே!' அவள் உள்ளம் வேகமாய் அவளுடைய கன்னத்தில் அறைந்தது.

'ஒருவேளை நானும் என்னை அறியாமல் இந்த சித்தார்த்தனை விரும்புகிறேனா?'

'அப்படியெல்லாம் ஒரு நாளும் நடக்காது! நானா? போயும் போயும் சித்தார்த்தையா? நோ... நெவர்!'

"என்ன யுக்தா... நான் சொன்னதை யோசித்தாயா? நல்ல பதில்தானே சொல்லப் போகிறாய்? யுக்தா... உன் மௌனம் எனக்கு பயத்தை கொடுக்குதடி! என்னை ஏமாற்றமாட்டாய் தானே? யுக்தா... யுக்தாம்மா... உயிரே..." உருகினான், உண்மையாய்!

'இப்படி உருகுபவனை ஏமாற்றப்போகிறோமே!'

அவனுக்காக... அவளுடைய உள்ளம் வேதனைப் பட்டது.

'என்ன இது? இங்கு வந்ததிலிருந்து கண்டதை... வேண்டாததையெல்லாம் எண்ணுகிறேன்! மனமே... நீ இரு! உன்னை அப்புறமா ஒரு கைப்பார்த்துக் கொள்கிறேன்!'

யுக்தா பத்திரிகையை எடுத்து நீட்ட... அவசரமாய் வாங்கிப் பிரித்தவன் "ஓ.... நோ...!" அலறினான்.

"யுக்தா... யுக்தாமுகி என்னடி இப்படி செய்துட்டே? எத்தனைக் கனவுகளை சுமந்து இருந்தேன்! பாவி... பொய்யாக்கிட்டையே! உன்னை மணந்துகொள்ள...



எனக்கு தகுதியே இல்லையா? அந்த சரவணன் பயலுக்கு மட்டும் என்ன தகுதியிருக்கு?" கத்தினான்.

"ஒழுக்கமான ஆம்பளை என்ற தகுதி!"

பத்திரிகையை கிழித்து அவள் மேல் எறிந்தான்.

"நோ... நான் இந்தக் கல்யாணத்தை நடக்க விடமாட்டேன்!"

"உங்களால் என்ன செய்ய முடியும்?"

"இங்க பார்டி! அவனை விலக்கிட்டு... மரியாதையா என்னை மணந்துகொள்!"

"இல்லேன்னா என்ன செய்வீங்க?"

"யுக்தா இங்கேபார்டி! இப்போ... இங்கே யாருமே இல்லை! அப்பா, அம்மாகூட பங்ஷனுக்கு போயிட்டாங்க! நீ இருப்பது என் படுக்கையறையில்! நான் நெனைச்சேன்னால்.... உன் பூந்தளிர் உடலை கடிச்சி முகர முடியும்!

ஆனால் அப்படி கீழ்த்தரமாவெல்லாம் நடந்துக்க மாட்டேன்! நான் இப்போ திருந்தி இருக்கேன்! மரியாதையா இந்த திருமணத்தை கேன்சல் பண்ணுடி! இல்லே நான் முரடனா, தீயவனா மாறி தீங்கிழைச்சிடுவேன்!"

"சும்மா மிரட்டாதீங்க, சார்! எத்தனை ஜென்மம் எடுத்தாலும்... நான் உங்களுக்கு கிடைக்கமாட்டேன்! புரிஞ்சிக்கங்க!" அவளும் பதிலுக்கு சத்தம் போட்டாள்.

"ஏய் வேண்டாம்டி! என்னை கோபப்படுத்தாதே! விபரீதமா ஆயிடும்டி!"

"இந்த பூச்சாண்டி வேலைக்கெல்லாம் பயப்படறவள், நானில்லே! தெரிஞ்சிக்கங்க! எத்தனை முறை சொல்வது?

உங்களைப் பிடிக்கலே! என்னை மணந்துக்க உங்களுக்கு அருகதையில்லேன்னு! ம்?'' அலட்சியமாய் கூற...

''இந்த அலட்சியத்துக்கெல்லாம் கெஞ்சுவேடி! என் காலில் விழுந்து கெஞ்சுவே!'' கத்தினான், வேகமாய்!

''உங்களால் என்ன முடியும்? எங்க ரெண்டு பேரையும் வேலையில் இருந்து தூக்குவீங்க? அவ்வளவுதானே? அதுக்கெல்லாம் பயப்படறவள், நானில்லை! இதை நான் எதிர்பார்த்தேன்தான்! வரேன்!'' நகர...

''யுக்தா... போகாதடி! எனக்கு நல்ல பதிலைச் சொல்லி விட்டுப் போடி!'' கெஞ்சினான்!

''நல்ல பதில்தானே? கல்யாணத்துக்கு வந்து வாழ்த்திட்டு போங்க!'' நக்கலாய் கூறி விறுவிறுவென செல்ல...

சித்தார்த்தன் கலங்கிவிட்டான்!

என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான்!

யுக்தாவை வேறு ஒருவன் அபகரித்துப்போக, பார்க்க... அதனை எவ்வாறு தாங்குவான், சித்தார்த்தன்.

* * *

'சித்தப்பாவுக்கு சீரியஸ்' என்று போன்வர... அந்த பத்து மணிக்கு கார் டிரைவர் இல்லாததால்... திவ்யாவிடம் மட்டும் சொல்லிவிட்டு... நடந்தாள்.

பள்ளியருகே இருந்த சின்ன கிராமமான பொறையூரை கடந்து ஒரு கிலோ மீட்டர் வந்ததும் வில்லியனூர் வந்து விட்டது.

யுக்தாவிற்கு பயம் வந்தது. 'திவ்யாவை துணைக் கழைத்து வந்திருக்கலாமோ?' என்று நினைத்தாள்.



பஸ் நிறுத்தத்தில் யாருமே இல்லை!

ஒரே ஒரு டீக்கடை மட்டும் திறந்திருந்தது. அதன் உரிமையாளன் கூட பெஞ்சில் படுத்து உறங்கிக் கொண் டிருந்தான்.

புதுச்சேரிக்கு போகும் பஸ் வந்த பாடில்லை! கால் மாற்றி கால் நின்றாள். பயத்தில் உள்ளமெல்லாம் உதறியது.

தூரத்தில் ஒரு கார் வந்தது. அவளருகே நின்று கண் ணாடியை இறக்க... உள்ளே சித்தார்த்தன் இருந்தான்.

சித்தப்பாவை பற்றிய கவலையிலும்... சுற்றிலும் இருட்டு மிரட்டிய பயத்திலும் இருந்தவளுக்கு... சித்தார்த்தனைக் கண்டதும் நிம்மதியானது!

''சார்... சார் சித்தப்பாவுக்கு சீரியஸ்! அவசரமாய் என் சித்தி வரச் சொல்லியிருக்கிறாள். ஜிப்மர் போகணும்! பஸ்ஸைக் காணும்! எனக்கு பயமா இருக்கு! கொஞ்சம் என்னை ஜிப்மர்ல ட்ராப் பண்ண முடியுமா?'' கண்ணீ ரோடு கேட்டாள்.

''உனக்கு பண்ணாமல் யாருக்கு பண்ணப் போறேன்? ஏறிக்கோ யுக்தா...!'' கார் கதவை திறந்துவிட்டான். அவள் ஏறி அமர்ந்தாள்.

புதுச்சேரி வந்துவிட்டது.

ஜிப்மர் அருகே நிறுத்தாமல்... கார் விரைந்து செல்ல...

''சார்... சார்... காரை திருப்புங்க சார்! ஆஸ்பிட்டலுக்கு போகாமல் எங்கே... எங்கே போறீங்க? உயிர் சம்மந்தமான விஷயம்! விளையாடாதீங்க, சார்! ப்ளீஸ்...'' கெஞ்சினாள்.

சித்தார்த்தன் புன்னகைத்தான்.

''சித்தப்பாவுக்கு சீரியஸா? ஐயோ பாவமே! என் யுக்தா கண்ணு ஏமாந்துட்டாளே!''

யுக்தா அதிர்ச்சியடைந்தாள்.

''அப்படின்னு இந்த மடையன்தான் வாய்ஸ் மாற்றி போன் பண்ணினேன்! சித்தின்னு ஏமாந்துட்டியாடா?''

யாரோ பிடித்து புதைகுழியில் தள்ளிவிட்டக் கணக்காய் அலறினாள்.

''ஏன்? எதற்கு?'' அழுகையோடு கேட்டாள்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் நீயே புரிஞ்சிக்கலாம்! என்ன அவசரம்?''

''நான்... நான் போகணும்!''

''இத்தனை மாஸ்டர் ப்ளான் பண்ணி வரவழைச்சிருக்கேன்! உன்னை லேசில் விடுவேனா?''

''சித்தார்த்... கிறுக்குத்தனமா ஏதாவது உளறாதீங்க?''

''பள்ளிக்கூட கார் டிரைவரை வீட்டுக்கு அனுப்பி... இந்த வழியே வரவேண்டிய மூன்று தனியார் பஸ்களை வேறு வழியே திருப்பிப் போக வைத்து... அத்தான் ரொம்பவே கஷ்டப்பட்டுட்டேன்டா!'' இடது கையால் அவளை இழுத்து அணைக்க முயற்சிக்க...

''ச்சே! அசிங்கமா பேசாதீங்க! என்னை விடுங்க! இல்லேன்னால் கதவு திறந்து குதிச்சிடுவேன்!''

''குதி! குதிடி! ஆனால் கை, கால் தங்காது! எல்லாத்தையும் பொறுக்கி எடுத்துட்டுத்தான் போகணும்! தேவையா? இறந்துட்டா பரவாயில்லை! அதுவே உயிர் இருந்து... கை, கால் போய்... அந்த வேதனையெல்லாம்....



இந்த அழகுராணிக்குத் தேவையா?'' அவள் முகத்தை தொடப்போக....

''என்னை விடுடா! என்னை ஸ்கூலுக்கு கொண்டு போய் விடு! இது நல்லதில்லே! என்னைத் தொடாதே!''

அவன் அவளை இழுத்து அணைக்க... அவள் திமிறி அழ... அந்த கர்ச்சீப்பை எடுத்து மூக்கருகே வைக்க... மயங்கி சரிந்தவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஆஹா... என்ன சுகம்! பூச்செண்டைக் கட்டிக் கொள்வதுபோல... என்ன சுகந்தம்! இன்னும் கொஞ்ச நேரத்தில்... உனது இத்தனை ஆர்ப்பரிக்கும் அழகும் எனக்கே.. எனக்குதான்டி, யுக்தா!'' என்று கூறி... அவள் உதட்டில் வெறியோடு முத்தமிட்டு... வெற்றி பெற்ற மமதையில் சிரித்து... சிலிர்த்து... புன்னகைத்தான்!

கார் சீறிப் பாய்ந்தது.



# 11

குழந்தைகளுக்கு இன்பமும் துன்பமும் தெரிய வளர்க்க வேண்டும்.

எதையும் கேட்டதும், கிடைத்து இன்பமாக வளரும் குழந்தைகள்... பின்னர், பெரியவர்களாய் ஆகும்போது பிடிவாதக்காரர்களாகவும், அடங்காதவர்களாகவும், அடாவடித்தனக்காரர்களாகவும் வளர்ந்து விடுகிறார்கள்!

எதையும் வென்றே பழகியும் அந்த செயல் கேடு எனத் தெரிந்தாலும்... அதனை செய்ய துணிந்துவிடுகிறார்கள்.

அப்படித்தான் சித்தார்த்தன் வளர்ந்துவிட்டான். இன்று தன்னை விரும்பாத யுக்தாமுகியை தூக்கிப் போவது கெட்டது, தப்பு என ஒருபுறம் தெரிய வந்தாலும்... அவனுடைய பிடிவாதக்கார குணம்... நமக்கு கிடைக்காதது யாருக்குமே கிடைக்கக்கூடாது என்று தூண்டிய தூண்டலாய்... அவளை வஞ்சகமாய் தூக்கிவிட்டான்.

அவன் ஆசைப்பட்டதை... அவன் அடையும் முன்பே, அடுத்தவன் அடையலாமா? அனுபவிக்கலாமா?

கார் நின்றது. இறங்கினான். அப்படியே அவளை... பூவை அள்ளி தோளில் போட்டுக் கொள்வதுபோல போட்டு... வீரநடை நடந்தான்..

சிறிய மலையடிவாரத்திற்கு கீழே கடற்பரப்பு!

நீருக்கடியில் கான்க்ரீட் போட்டு... உயர்த்திக் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கட்டிடம்! பிரெஞ்சுக்காரனால், கலைநயத்தோடு பார்த்துப் பார்த்து கட்டப்பட்ட கட்டிடம்! விலைக்கு வர... அதை வாங்கி... சித்தார்த்தனின் இருபதாவது பிறந்த நாளின்போது... பிறந்தநாள் பரிசாய் கொடுக்கப்பட்ட அழகான குட்டி பங்களா!

தரையிலிருந்து அந்த பங்களாவுக்கு செல்ல அழகிய மூங்கில் பாலம்!

கரைக்கு ஓடிவந்து... கரையை கட்டி... அவசர அவசரமாய் முத்தமிட்டுவிட்டு போகும் அலைகளை... பகல் பொழுதானால் நாள் முழுக்க கண்சிமிட்டாமல் ரசித்துக் கொண்டிருக்கலாம்! அந்த அழகு அப்படியே நம் நெஞ்சை யள்ளும்!



தேக்கு மரத்தால் கதவுகளும், சன்னல்களும் பளபளத்தன.

கதவைத் திறந்து உள்ளே செல்ல, சுத்தமாய், பளிங்காய் தரையில் முகம் தெரிந்தது.

படுக்கையறையை திறந்தான், தேக்கு மரக்கட்டிலில் உயர்தர மெத்தை! அதில் யுக்தாமுகியை ஆத்திரமாய் தூக்கிப் போட்டான்.

பஞ்சுப் பொதிக்குள் அமிழ்ந்ததுபோல, அவளை உள் வாங்கிக் கொண்டது, மெத்தை! இன்னும் மயக்கம் தெளியவில்லை.

அவள் நெற்றியில் புரளும் கேசத்தை தள்ளிவிட்டான். கள்ளம், கபடு, மாசு, மருவற்று ஜொலித்த அவளின் வதனத்தை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

'யுக்தா... ஏன்டி இப்படி செய்தாய்? இது உனக்கே நியாயமா? உன்னைக் கண்டு நல்லவனாய் மாறியவனை... மீண்டும் தீயவனாய் மாற்றி தீங்கிழைத்துவிட்டாயே!'

'என்னை மன்னிச்சிக்கோ! உன்னை அடைய எனக்கு வேறவழியே தெரியவில்லை. கெஞ்சிப் பார்த்தேன்... கொஞ்சிப் பார்த்தேன்... நீ மசியவில்லை! மனமிரங்கவில்லை!

'ஒருவேளை உனக்கு வன்முறையும், வெறியாட்டமும்தான் பிடிக்குமா?'

'உனக்கு பிடித்த வன்முறையை அரங்கேற்ற காத்திருக்கும்... உனது ப்ரியமான சித்தார்த்தன்!' மெல்ல புன்னகைத்தான்.

'உன்னை இன்று மட்டும் தொட்டு விடுகிறேன்! பிறகு எவனையோ கட்டி... எப்படியோ இரு! எனக்கு கவலை இல்லை! நான் விளையாடிய பிறகுதான்... உன்னை எவனுக்குமே கொடுப்பேன்! நான் ஆசைப்பட்ட பொம்மையானாலும், பெண்ணானாலும்.

சட்டென்று எதன் மீதும் பிரியப்படமாட்டேன்! பிரியப் பட்டால் பிடித்து விட்டால் நான் அனுபவிக்காமல் விட மாட்டேன்!

'சித்தார்த்தன் பற்றி தெரியாமல்... கண்ணில் பட்டு, கருத்தில் பட்டு... என் ஆசைக்கிணங்க மறுத்து... வீணாய் உன் பெண்மைக்கே உலை வைத்துக்கொண்டாயே!'

'என்னை மறுக்காமல் இருந்திருந்தால்... எத்தனை அழகான மணவாழ்க்கையை உனக்கு காட்டியிருப்பேன்!'

மணம் புரிவதையே விரும்பாதவனின் மனதை மாற்றி... எவ்வளவு கீழறிங்கி வந்தேன்! கீழ்த்தரமாய் என்னை தூக்கிவீசி விட்டாயே! துடித்துப் போனேனே! நீயும் அனுபவிக்க வேண்டாம், அந்த நரக வேதனையை!

'எத்தனை பெரிய படிப்பு! பணம்! அந்தஸ்து! அழகு! எல்லாவற்றையும் ஒரு தூசாய் மதித்து தூக்கிபோட்டு... அந்த சரவணனை... ' பல்லை நறநறவென கடித்தான்.

'அடுத்த தேர்தலிலேயேகூட, இந்த புதுச்சேரியின் முதல்வராகும் தகுதி உள்ள ஒருவனை, ஒழுக்கமென்ற பெயரால் விலக்க நினைக்கும்... உன் ஒழுக்கத்தின் மேல்தான்டி எனக்கு இப்போது அதிக ஆசை!'

'அந்த கலப்படமற்ற ஒழுக்கத்தை, கற்பை எனக்கு ரொம்பவே பிடித்துள்ளது! அதை உன்னிடமிருந்து



எடுத்துக் கொண்டு... சந்தோசமாய் சரவணனுக்கு தாரை வார்க்கிறேன்!'

மது அருந்தவே நினைப்பு வரவில்லை... எதிரில் 'மதுக் கடலாய்' கட்டிலில் கிடக்கும் யுக்தாவைப் பார்க்கும்போது!

கொஞ்சநேரத்தில் விழிப்புக்கு வந்தவள் சூழ்நிலைப் புரிந்து அதிர்ச்சியுடன் எழுந்து அமர்ந்தாள்.

அவளையே வைத்தவிழி எடுக்காமல் பார்வையால் பருகிக் கொண்டிருந்தவனை பார்த்து கையெடுத்துக் கும் பிட்டாள்.

"என்னை விட்டுடுங்க! ப்ளீஸ்... என்னை எதுவும் செய்துடாதீங்க, சித்தார்த் நான் அப்படிப்பட்ட பெண்ணில்லே! மானத்தை உயிராய் மதிப்பவள்! கற்பு போயிட்டா என்னால்... என்னால் வாழவே முடியாது!"

யுக்தா கதறியழுதாள். கண்களில் கண்ணீர் குற்றால அருவியாய் கொட்டியது.

"உன்னை விடவா... இவ்வளவு தூரம் தூக்கி வந்தேன்! என்னென்ன பேசினாய்? ம்? இப்போது நினைத்தாலும்... என் ரத்தம் கொதிக்குதடி!" கோபமாய் சொன்னான்.

கண்கள் இரண்டும் செங்காந்தள் மலராய் சிவந்து விட்டது.

"யோசித்துப் பேசாதவள், என் தண்டனையை ஏத்துக் கத்தான் வேணும்! எவ்வளவு கெஞ்சினேன்! எப்படி அலட் சியப்படுத்தினாய்! இப்போ அனுபவி!"

அவள் முடியை கொத்தாய் பிடித்து... அவள் உதடு நோக்கி குனிய...

"வேண்டாம்... வேண்டாம்... அப்புறம் விபரீதமாயிடும்" மிரட்டினாள்.

"எல்லாத்துக்கும் துணிஞ்சிதான்டி... உன்னைத் தூக்கினேன்! அப்பா அம்மாகிட்ட போறீயா...? போ! போலீஸ்கிட்ட போறீயா? போ! இல்ல எங்க முதலமைச்சர் அங்கிள்கிட்ட போறீயா? போடி! எனக்கு கவலையில்லை! உன்னை அடைய எவ்வளவு அவமானத்தையும் கைநீட்டி வரவேற்க இந்த சித்தார்த்தன் காத்திருக்கேன்!"

"ஆம்பளையாடா நீ? பொறுக்கி! ஒரு பொம்பளைக் கிட்ட உன் போக்கிரித்தனத்தைக் காட்டறீயே! எல்லாம் பணம் இருக்கற திமிர்டா!"

"ஆஹா பொறுக்கி! போக்கிரி! எத்தனை அழகான பெயர்கள்! இப்படிப்பட்ட நல்ல பெயரை வைத்த உனக்கு... உன் அழகான உதட்டுக்கு... இனிமையான பரிசு கொடுக்க வேண்டாம்....?"

அவள் திமிரத் திமிர..... இழுத்து அணைத்து... அவள் செவ்விதழில் அழுந்த முத்தம் ஒன்று பதித்தான்!

"விடுடா..... விடு! சித்தார்த்... சித்தார்த்... ப்ளீஸ்.. ப்ளீஸ்... என் விருப்பத்தைத்தான் சொன்னேன்! எனக்குன்னு ஒரு மனசிருக்கு இல்லே! அதை நீங்க புரிஞ்சிக்கலையே! பிடிக்கலேன்னு சொல்ற பொம்பளையை விட்டுட வேணாமா?" கெஞ்சினாள்.

"ஆனால் எனக்கு பிடிச்சிருக்கேடி! எனக்குன்னு ஒரு மனசிருப்பதை நீ புரிஞ்சிக்காத போது... உனக்குன்னு ஒரு மனசிருப்பதை நான் ஏன் புரிஞ்சிக்கணும்?" கத்தினான்.

அவளைக் கட்டிலில் தள்ள....



"வேண்டாம்... வேண்டாம்... உங்க காலில் விழக் கூடத் தயார்! நான் பேசினது தப்புன்னா மன்னிச்சிடுங்க சித்தார்த்...! ப்ளீஸ் சித்தார்த்...! என்னை விட்டுடுங்க!"

பெருங்கதறலுடன் அவன் காலில் விழுந்து அழுதவளைத் தூக்கி...

"காலில் ஏன் விழறே? என் மடியில் விழு! என் மஞ்சத்தில் விழு! மகிழ்ச்சியாய் ஏந்திக்கிறேன், கண்மணி!" என்று சித்தார்த்தன் அவளை தூக்கி நிறுத்தி அணைக்க... அவனிடமிருந்து விடுபட்டு ஓடினாள்.

"இது என் இடம்! என் கோட்டை! சுற்றிலும் மலையும், காடும், கடலும்தான்! காலையிலே எழுந்து பார்த்தேனால் நானே எழுந்து போகச் சொன்னாலும்... போகமாட்டேன்னு அடம்பிடிப்பாய்! அத்தனை கொள்ளை அழகு கொண்ட இடம்! என் சந்தோசம், துக்கம் அத்தனையும் கண்ட இடம்! நான் கோவிலாய் நினைக்கும் இடம்! எவளையும் இங்கே அழைச்சி வந்து தப்பு பண்ணினதில்லே! உன்னை கட்டி... உன்னோட முதலிரவை இங்கே அனுபவிக்கணும்ன்னு பேராசைப்பட்டேன்! நீதான் அதுக்கு சான்ஸே கொடுக்கலையே!....."

"ஐய்யோ சித்தார்த்.... வேண்டாங்க... வேண்டாங்க...!"

முதலில் மிரட்டியவள் இப்போது பயத்தில் அவனுக்கு அகப்படாமல் அறைக்குள் ஓடினாள்.

"நீ என்ன கத்தினாலும்... கதறினாலும்... விழுந்து புரண்டாலும்... என் மனசு மாறாது! மனசை மாத்திட்டு நான் கெஞ்சினப்போ நீ மசிஞ்சயா? ஒத்துட்டையா? அந்த பொறம்போக்கு பயலோட தாலியை வாங்கிக்க ஆசைப் பட்ட இல்ல! இன்னும் கொஞ்ச நாளில் கல்யாணமா?

பத்திரிகையா நீட்டறே? நான் ஆசைப்பட்டவனை... வேறொருத்தனுக்கு விட்டுக் கொடுக்க... நளாயினி யோடோ மறுஜென்மமா நான்?''

'எத்தனை கற்றும் தற்காப்பு கலையை கற்கவில்லையே! இவனிடம் இருந்து எப்படி தப்புவது? உயிரினும் மேலான கற்பை எப்படி காப்பாற்றிக் கொள்வது?' எனக் கலங்கினாள்.

கடைசிவரை போராடவே மனதில் உறுதி பூண்டாள்.

''இந்த ஊடலும், கூடலும் கூட வெரி இண்டரஸ்டிங்தான்! பொசுக்குன்னு வந்து படுக்கறவ மத்தியில... இப்படி போராடற உன் மனசை ரொம்பவே பிடிச்சிருக்கு! அழகோட, அறிவோட, பணத்தோட, படிப்போட உன் காலடியில் விழுந்த என்னை... உதாசீனப்படுத்தின, உன் துணிச்சல் எனக்கு பிடிச்சிருக்கு! மொத்தமா சொல்லிடறேன்! கடலுக்கும், வானுக்கும் எல்லையில்லாதது போல... உன் மேலான ஆசைக்கும் எல்லையே இல்லே, யுக்தா கண்ணே! வாடி என் ஹனி!'' இழுத்தான்.

தன் பலம் கொண்ட மட்டும் போராடினாள்!

ஆக்டோபஸிடம் மாட்டிக் கொண்ட மீனானாள், யுக்தா முகி!

''நீ நல்லாவே இருக்கமாட்டே!'' என்று சபித்தவளின் உதடுகளை... தன் உதடுகளால் மூடினான்.

அவள் தவிப்பு, துடிப்பு, கத்தல், கதறல், மறுப்பு... அத்தனையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவளை வென்றான்.

அவள் முயற்சிகள் அத்தனையும் தோற்று... அவன் அவளுடைய மலருடலை கசக்கி முகர்ந்தான்.



யுக்தா தன்னை முற்றிலும் இழந்து... சித்தார்த்தனுடையவளானாள்.

அவனுடைய முரட்டுத்தனத்தை தாங்காத பூவை மயக்கமானாள்.

அவள் கற்பை களவாடி விட்டான்!

அவள் உயிரை பறித்துவிட்டான்!

அவன் மீண்டும் மீண்டும் அவளை நாட... அதைத் தாங்காத பூந்தளிர் உடல் சுட்டது.

விடியலில் சுரம் வந்தது.... குளிரில் நடுங்கி... தாங்க முடியாமல்... பற்றுக் கொடியை தேடிய முல்லைச் செடியாய்... அவளருகில் நிம்மதியாய் உறங்கிய சித்தார்த்தனை அணைத்துக் கொண்டாள், யுக்தாமுகி!

கண்விழித்து இந்த அதிசயத்தை கண்டவன்... அவளை ஆசையாசையாய் இன்னும் இறுக்கிக் கொண்டான்!

திடுக்கிட்டு கண்விழித்தவள்... கம்பளி ஊறிய வேதனையாய் தோன்ற... இனி இதுதான் விதி! விதியை மாற்ற இனி முடியுமா?

'கற்பை இழந்து வாழ முடியுமா?'

'இதுவே, கற்பை பறித்துக் கொண்டவனே... ஒரு தாலியை தந்துவிட்டால்... இந்த அவமானம் போய்விடும், அல்லவா?'

காலமெல்லாம் சித்தார்த்தனை சகித்துக் கொள்ள... யுக்தாமுகி முடிவெடுத்தாள்.

அந்த முடிவால்... நெஞ்சமெல்லாம் வேல் பாய்ந்தாற் போல வலித்தது!

''ஏய் யுக்தா... என்னைப் பிடிச்சிருக்கா?'' சித்தார்த்தன் கேட்க...

என்ன சொல்லுவாள், பேதை? ''பிடிக்கலடா...'' என்று சொல்லக்கூடிய தகுதியைத்தான் இழந்துவிட்டாளே!

''என்கிட்ட வந்த எவளுமே... என் மன்மதக்கலையில் மயங்கி... சரிஞ்சுடுவாளுங்க! நீ மட்டும் எம்மாத்திரம்?'' ஆணவத்தோடு சிரித்தான்.

''என்னடி உடம்பு அனலா கொதிக்குது? காய்ச்சலா?'' எழுந்து அமர்ந்து... அவள் நெற்றி, கன்னம், கழுத்தில் தொட்டுப் பார்த்து...

''என்ன செய்யலாம்? டேப்லட் போட்டுக்கிறீயா?''

''வேண்டாம்!'' என்று அவள் மறுக்க... அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் ஓடிப்போய் மாத்திரையும், நீரும் எடுத்துவந்து நீட்டினான். அவனிடமிருந்து வாங்காமல்..

''என்னை ஏமாத்திட மாட்டீங்களே?''

''என்ன செய்யணும்?''

''என்னை திருமணம் செய்துக்குவீங்களா?'' அழுகையோடு கேட்க...

ஒரு வெற்றி புன்னகையோடு... அவளை ஊடுருவியவனின் பார்வை... அவளை ஊசியாய் குத்திற்று!

''இந்த வாய்தான்... என்னை பிடிக்கலே! மாட்டேன்னு மறுத்தது! இப்போ என்ன ஆச்சரியம்?''



அவள் மவுனமாய் தலைகுனிந்து கண்ணீர் சொட்டினாள்.

''இங்கே பார் யுக்தா! நான் அன்னைக்கு கேட்டப்ப நீ ஒத்துட்டு இருந்தால்... கல்யாணம் பண்ணிட்டு இருப்பேன்! ஆனால் நீ லேட் பண்ணிட்டே! என் மனம் மாறிடிச்சி! நீ பத்திரிகையை நீட்டினே பார்... அந்த நிமிடத்திலிருந்து! கல்யாணமா? அதுக்கு பதில் நோ தான்!'' மிடுக்கோடு சொல்ல...

''ப்ளீஸ் சித்தார்த்.....'' கெஞ்சினாள்.

''ஒழுக்கம்... ஒழுக்கம்ன்னு அன்று வாய்கிழிய பேசினாயே... அந்த ஒழுக்கம் இப்போ மட்டும் உன்னிடம் இருக்கா?''

அவள் விம்மினாள்.

''அப்போ எனக்கு என்னதான் வழி?''

''நீ காலம் முழுக்கக்கூட என்னோட இருக்கலாம்! ஆனால் தாலி மட்டும் நோ தான்! அல்லது சந்தோசமா சரவணனைக்கட்டி வாழ்!''

''அவ்வளவு கீழ்த்தரமானவள் நாநில்லே! அடுத்ததா உங்ககிட்ட கற்பை இழந்துட்டு... அவ்னை எப்படி மணக்க இயலும்?''

''நான் தொட்ட பெண்களின் எண்ணிக்கை...''

முடிக்கும் முன்பே சொன்னாள்.

''கற்போட வந்தவள் எவளாவது உண்டா? உங்க நெஞ்சை தொட்டு சொல்லுங்க? நானும் அவளுங்களும் ஒண்ணா?''

''இல்லேத்தான்!'' அவன் ஒத்துக் கொண்டான்.

''எனக்கு உங்க சொத்தோ... பணமோ... உங்கமேல உரிமையோ... எதுவுமே எனக்கு வேண்டாம்! உங்க கையில ஒரு மஞ்சள் கயிறும், மனைவி என்ற அந்தஸ்தும் மட்டும் போதும்! ப்ளீஸ்... ப்ளீஸ்...''

''எனக்கு இந்த கல்யாணம் என்ற மாயவலையில் விழுவெல்லாம் பிடிக்கலே! என் மனசு மாறிடிச்சு. யுக்தா! என்னிடம் கெஞ்சுவேன்னு சொன்னேன். கெஞ்சறே பார்த்தையா, அசிங்கமா?'' முகம் சுளித்து சொல்ல...

''முடிவா... எனக்கு தாலிகட்ட முடியுமா? முடியாதா? கண்ணீரை துடைத்து... நிமிர்வாய் கேட்டாள்!

''முடியாது! அவனையே போய் கட்டிக்க!'' நக்கலாய் சொல்லி சிரிக்க...

''என் கழுத்துல நீங்க தாலி கட்டலேன்னாலும்... என் புருஷன் நீங்கதான்!''

''ஆஹா... புல்லரிக்குது போ!'' ரசித்துச் சொன்னான்.

''இந்த உயிர்மூச்சு... இந்த உடல் உள்ளவரை என் புருஷன்னா அது நீங்கதான்! நான் தமிழச்சி! சுத்த மான தமிழச்சி! இனி வேறு ஒருவனோடு வாழவே மாட்டேன்!''

சித்தார்த்தன் உதட்டைப் பிதுக்கினான்.

''அம்மி மிதிக்காமல்... அருந்ததி பார்க்காமல்... தாலி கட்டிக் கொள்ளாமல்... உங்ககிட்ட எப்போ என் கற்பை இழந்தேனோ... அந்த நிமிஷமே நான் உங்க பொண் டாட்டி ஆயிட்டேன்!''



''உன் பத்தினித்தனம் பிடிச்சிருக்கு! ஐ லைக் இட்!''

இழிவாய் சொல்ல...

''இனி உங்ககிட்ட கெஞ்சி நிற்மாட்டேன்! ஆனால் நான் இப்படி உங்க பொண்டாட்டின்னு சொல்லிட்ட காரணத்தை வச்சிட்டு... மீண்டும் என்னைத் தொட லாம்ன்னு பொறுக்கி தனமா வந்து நின்னீங்க... என் உயிரை அந்த நிமிடமே விட்டுடுவேன்...!''

''நல்ல மிரட்டல்!'' ரசித்துச் சொன்னான்.

''நீங்க என்னை கெடுத்ததை நான் யார்க்கிட்டேயும் சொல்லப் போறதில்லே! என் புருஷன்னா அது நீங்கதான்! ஒருநாள் எனக்காக ஏங்குவீங்க! கதறுவீங்க! கத்து வீங்க! என்னை விரும்பி வருவீங்க! என் பொண்டாட்டி இவதான்! இந்த யுத்தாமுகிதான்னு சொல்லுவீங்க! ஆனால் அப்போ சத்தியமா நான் உங்களை ஏத்துக்க மாட்டேன்! எனக்கும் தன்மானம் இருக்கு! சுயகௌரவம் இருக்கு!''

''உன்னை நினைச்சி ஏங்குவேனா? கத்துவேனா? கதறுவேனா? உனக்கு கற்பனை வளம் ஜாஸ்திடி! அது மட்டும் ஐயாகிட்ட நடக்காதுடி!'' ஆணவமாய் கூற...

''அது நாளையோ... நான்கு மாதம் கழித்தோ... நான்கு ஆண்டு கழித்தோ... நாற்பது வருடம் கழித்தோ... அல்லது நான் செத்த பிறகுகூட நடக்கலாம்! நிச்சயமா.. சத்தியமா....!''

''உன் நம்பிக்கை தூள்தூளாகப் போகுதுடி!''

கட்டிலை விட்டு எழுந்தாள்.

உடம்பு தள்ளாடியது.

"எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன்! ஆனாலும் உன்னிடம் உள்ள அழகு, இயல்பான பெண்மை, சுகம்... நான் இதுவரை பார்த்ததில்லேடி! ஏய்... என்ன? எங்கே போற? உடம்பு முடியாதவள்! பேசாமல் மாத்திரையைப் போட்டு படு! சிட்டியைத்தாண்டி ஐம்பது, அறுபது கிலோ மீட்டருக்கும் மேலான தூரத்தில் இருக்கோம்! தெரியுமா? இரு விடியட்டும்! போகலாம்! என்ன அவசரம்? ம்?" என்று அதட்டினான்.

சித்தார்த்தன் எழுந்து அவள் கைப்பிடித்து தடுக்க... அவன் கையை கோபமாய் உதறினாள்.

"தொட்டீங்க... நடக்கறதே வேற!"

"சரி... சரி... தொடலே... போகாதே... யுக்தா!

என்ன வழி? எப்படி போகணும்ன்னு உனக்கு தெரியாது! வீம்பு பண்ணாதே! நானே உன்னை காலையில ஸ்கூல்ல வந்து விடறேன்! என்ன?"

யுக்தாமுகி காதில் வாங்காமல் தள்ளாட்டத்துடன் நடந்தாள்.

"யுக்தா... சொன்னாக்கேளுடி! சரி இரு! நானும் வரேன்!" பங்களாவைப் பூட்டி அவள் பின்னே நடந்தான்.

அவன் காரைக் கண்டதும் அலட்சியப் படுத்தி நடந்தவளை... இழுத்து உள்ளேப் போட்டு... காரை ஓட்டினான்.

"யுக்தா... உன் சவாலை கொஞ்சம் பரிசீலனைப் பண்ணேன்! வேண்டுமானால் என்னோடு தாலியில் லாமல்..." என்றவன் அவள் முறைப்புக்கு பயந்து கப்பென்று வாயை மூடிக் கொண்டான்.



# 12



அன்னை ஆசிரமம் முன்பு காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டாள்.

யுக்தாமுகி இறங்கும்போது... கண்களில் கண்ணீர் வழிய... சித்தார்த்தனை நோக்கி... உள் வாங்கிக் கொண்டு... திரும்பி பாராமல் மெல்ல நடந்தாள்.

'இனி உன்னை நோக்கவே மாட்டேன் என்பது போல!'

அப்போது சித்தார்த்தனின் இதயத்தில் நெகிழ்ச்சி!

ஒரு நிமிடம்தான்! அடுத்த நிமிடமே இதயம் கல்லாகி 'உன் இந்த திமிருக்கு சரியான தண்டனைதான்டி!' என்று கூறிக் கொண்டே... காரை எடுத்துக்கொண்டு சென்றான்.

விடியல் தன் ஆதிக்கத்தை பூமியில் செலுத்த ஆரம்பித்துவிட்டது.

ஆசிரமம் உள்ளே நுழைந்து... ஒரு மூலையில் இருந்த... மரத்தடி பெஞ்சில் அமர்ந்தாள்.

இதுவரை கட்டுப் படுத்திய அழுகை காட்டாற்று வெள்ளமாய்... பிய்த்து, பீறிக் கொண்டு வந்தது. பிழியப் பிழிய அழுதாள்.

'அம்மா... என் தாயே... உன்னை என் தாயாக எண்ணி கினேனே! இப்படி என்னை காப்பாற்றாமல் விட்டுவிட் டாயே! தாயே... இந்த அவமானத்தோடு... கற்பு பறிபோய் எப்படி வாழ்வேன்? அழுது புரளக் கூட... எனக்கு ஒரு மடியும் இல்லையே! என் துக்கத்தை, துயரத்தை, துன்பத்தை சொல்ல எனக்கென்று ஒரு உறவும் இல் லையே! நான் என்ன பாவம் செய்தேன்? என்னை ஏன் இப்படி தண்டித்துவிட்டாய்?'

'சித்தார்த்தனின் கொள்ளிக் கண்ணில் பட வைத்து... என்னை வதைத்துவிட்டாயே! என் வாழ்க்கையே போயி டிச்சே! என் கற்பு கல்லறையாயிடிச்சே! என் கற்பு புனித மாக வெட்கத்தைவிட்டு... ஒரு முழம் மஞ்சள் கயிறு கேட்டதற்கு... எப்படி அவமானப்படுத்திவிட்டான்? அன்னையே... என்னை எப்படி தேற்றிக் கொள்வேன்? அம்மா... அம்மா... என் நெஞ்சு வலிக்குதே! என் உடம் பெல்லாம் தீப்பற்றிக் கொண்ட கணக்காய் எரியுதே!'

'இரவு முழுக்க அவன் எத்தனை முறை... ஐயோ... கசக்கி முகர்ந்து... என் உயிரை குடித்துவிட்டு... தூக்கி எறிந்துவிட்டானே! அவன் பள்ளியில் இனி எப்படி வேலை பார்ப்பேன்? அவனை இனி எவ்வாறு நோக்கு வேன்? அவன் விழியில் விழித்து... எப்படி உயிர் வாழ் வேன்?'

தன் வாழ்க்கை... இந்த அளவு கரடுமுரடாய்... முட்கள் நிறைந்த பாதையாய் இருக்கும் என்று கனவில் கூட யுக்தா நினைத்துப் பார்க்கவில்லை!

வண்ணத்துப் பூச்சியாய் பறந்து திரிந்தவளின் வாழ்க் கையில் முதல் அடி... தன் தாய் தனது பத்தாவது வய



தில் இறந்தது! அறியாத வயதில் அம்மா இன்றி தவித் தாள்.

தாயுக்கு தாயாய்... தந்தைக்கு தந்தையாய்... தாயு மானவனாய் மாறி... ஒரு குறையும் இல்லாமல்... உள்ளங்கையில் வைத்து தாங்கிய தந்தை... அவளுடைய இருபதாவது வயதில்... ரயில் நிலையத்தில் தீவிர வாதிகள் வைத்த குண்டு வெடித்து... பிணக்குவியல் களுக்கு மத்தியில் பார்த்தது, இரண்டாவது அடி!

பெரிய இடியை உள்வாங்கிக் கொண்டு... தந்தையின் அலுவலகம் கொடுத்த தொகைகளோடு... தன் சித்தப்பா வீட்டிற்கு வந்தாள்.

சித்தி சாதுரியமாய் பேசி அந்த தொகையை வாங்கி... தன் பெயரில் போட்டுக் கொண்டு... யுக்தாவை மரி யாதைக்குறைவாய் நடத்த... இந்த பள்ளியின் விளம்பரம் கண்டு ஆசிரியையாக விண்ணப்பித்தாள்.

இளங்கலைப்பட்டமென்றாலும் இவளின் ஆங்கில, இந்தி, பிரெஞ்சி புலமை கண்டு மீனாட்சி இவளை வேலைக்கு அமர்த்தினாள். அதன் பிறகு தொலைதூர கல்வியில் சேர்ந்து முதுகலையும் போன ஆண்டு முடித்து விட்டாள்.

வேலை கிடைத்து... கொஞ்சம் நிம்மதியாய் பெருமூச்சு விட்டு... தலைநிமிர்ந்து எதிர்கால கனவுகளையும், கற்பனைகளையும் கண்களில் தேக்கி... வாழ்க்கையில் நடைபோட்ட போது... சித்தார்த்தன் வந்து இடறிவிட் டான்.

இவனுடைய தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி வைக் கத்தான் சரவணனை மணக்க சம்மதித்தாள். முற்றும்

போட வேண்டிய நேரத்தில்... சித்தார்த்தன் வந்து தொடரும் போட்டுவிட்டான்! அவளின் உயிரினும் மேலான கற்பை பறித்துவிட்டான்?

மூன்றாவது அடிதான் அவளை இனி எழுவிடாமல் செய்யப்போகிறது!

தாய் இறப்பையும், தந்தை இறப்பும் கடினமான தானாலும்... ஓரளவு தாங்கிக் கொண்டாள்.

ஆனால், தன் கற்பு கறைப்பட்டு... காணாமல் போனதை... எவ்வாறு யுக்தா தாங்கிக் கொள்வாளோ? இந்த அவமானத்தை எப்படி ஏற்றுக் கொள்வது? இந்த துயரத்தை யாரிடம் சொல்வது? இந்த துக்கத்தை எப்படி போக்கிக் கொள்வது? விடை தெரியாமல் கண்ணீர்விட்டாள்.

'தன்னைக் கெடுத்தவனே மாலையிட்டால்... போன மானம் திரும்பும் என்று எண்ணி... அவனிடம் வெட்கத்தை விட்டு, தன் சுயமரியாதையை விட்டு, தன் சுய கௌரவத்தை விட்டு... காலில் விழுந்து கெஞ்சாத குறையாய் கேட்டும்... அந்த கல்நெஞ்சன் இறங்கவில்லையே!'

'இத்தனை இரும்பான இருதயம் கொண்டவர்கள்கூட இருப்பார்களா?'

'இத்தனை அகம்பாவம், ஆணவம் கொண்டவன் கூட இருப்பானா?'

'நான் அவமானப் படுத்திவிட்டேன்! கேவலப்படுத்திவிட்டேன்! என்று சொல்லுகிறானே! ஆனால், ஒரு பெண்ணிடம் கேட்கக் கூடாதது எல்லாம் கேட்டது



தப்பில்லையா? அனுபவிக்க கேட்டது தப்பில்லையா? அநியாயமில்லையா? பின்னர் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கேட்பது எந்த விதத்தில் நியாயம்? யாராவது அனுபவிக்க கேட்டுவிட்டு, பின்னர் மனம் மாறி மணம் பேசினால் நம்புவார்களா?

'அப்படிப்பட்ட கள்வனை ஒரு பெண் எப்படி நம்புவாள் எவ்வாறு நடந்துக் கொள்வாள்? ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னதம் தெரியாதவனை யாராவது விரும்புவாளா? மணப்பாளா?'

'இதுவே அவனுக்கு ஒரு தங்கையிருந்து... அவளிடம் ஒருவன் வந்து... 'டேட்டிங்' கேட்டால்.. அவனை இவன் தங்கை கொஞ்சுவாளா?'

'இவர்களுக்கு ஒரு நியாயம் அப்போது பேசமாட்டார்களா?'

'எப்படி ஒரு நல்ல தாய், தந்தைக்கு பிறந்தவன் வழி தவறுவான்?

'இப்படி கேவலமாய் நடந்து கொள்வான்!'

'நம்பவே முடியவில்லை மனிதர்களை! மனிதர்களின் மனங்களை!'

'இப்படி அவன் திசைமாற என்ன காரணம்?'

'பெற்றவர்களா..? நண்பர்களா?'

'வளர்ந்த சூழலா...? வளர்ந்த விதமா?

'வளமான பணமா? வெளிநாட்டு படிப்பா?'

அல்லது அனைத்துமே ஒன்று சேர்ந்து அவனை இப்படி மாற்றிவிட்டதா?

'கயவன்! கள்வன்! பாவி!'

'என்னை இப்படி பாழ்படுத்த என்ன காரணம்?'

'நான் பேசிய பேச்சா? என் மேல் உள்ள ஆசையா? விருப்பமா?'

'இன்னொருவனுக்கு என்னை விட்டுக் கொடுக்க முடியாமல்... அவனை எது தூண்டியது?'

'என் நிறமா? தோளின் மினுமினுப்பா? என் அழகும், மொத்த உருவமும் செய்த மாய வலையா? என் அறிவா? அடக்கமா?

பெண்களுக்கு இருக்க வேண்டிய குணமான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இப்படி எதையாவது என்னில் கண்டானா?'

'அல்லது அதற்கும் மேலே என் மேல்... என்மேல் அளவிட முடியாத காதலா? நேசமா? ப்ரியமா?'

'காதலானால்... என் மேல் நேசமானால் அதனை அவனால் அவனுள்ளே போட்டு புதைத்துக் கொள்ள முடியாது! அவனுள்ளே மறைத்துக் கொள்ள முடியாது! அவனுள்ளே அழித்துக் கொள்ள முடியாது!'

'என் மேல் நேசம் கொண்டிருந்தால்... ஒரு நாள் அது பீறிட்டு புயலாய்... பூகம்பமாய்... சுனாமியாய் அவனைத் தாக்கி உருக்குலைய வைக்கும்!

அடுத்த ஜென்மத்திலாவது சித்தார்த்தன் நல்லவனாய் பிறக்க வேண்டும்! என்னைக் கண்டு ஆசை கொள்ளாமல்... காதல் கொள்ளவேண்டும்! என்னையே மணம் முடிக்கவேண்டும்!



இது நடக்குமா?

சித்தார்த்தன் முதல் பார்வையிலேயே பிடிக்கக் கூடியவன்தான்! அழகன்தான்! கம்பீரமானவன்தான்! பெண்களை கோணாமலேயே இதயத்தில் குடி கொள்பவன்தான்! ஆனால் அவன் ஒழுக்கமற்ற நடத்தையால்தானே பிடிக்காமல் போனது! வெறுப்பு வந்தது!

ஆனால், இனி சித்தார்த்தன் என்னுடையவன்! என்னவன்! என்னுடைய, எனக்கு சொந்தமான உயிர்! நகமும், சதையும், ரத்தமுமாய் பிரம்மனால் செய்யப்பட்ட... என்னுடைய பொம்மை!'

'இனி அவன் ஒரு பெண்ணையும் தீண்டக்கூடாது! திரும்பிப் பார்க்கக் கூடாது!'

'அன்னையே... அரவிந்தரே... ஐயா புத்த பெருமானே... உங்களை நான் நெஞ்சார வணங்குவது உண்மையென்றால்...

இனி சித்தார்த்தன் வழிதவறக்கூடாது! ஐயா புத்த பெருமானே... என் தெய்வமே... உன் பெயர் கொண்டவனின் தீண்டல் என்னோடு முற்றுப் பெற வேண்டும்! அந்த தீ இனி இந்த தென்றலுக்குத்தான் சொந்தம்!'

'எனக்கு செய்த துன்பம்... ஒரு நாள் அவன் மனதை பிசைய வேண்டும்! எனக்குச் செய்த துரோகம் அவன் எண்ணங்களை துரத்த வேண்டும்! எனக்குச் செய்த அநியாயம்... அவனை அவனுள் இருக்கும் கெட்ட எண்ணத்தை, கெட்ட நடத்தையை அழிக்கவேண்டும்!'

'மனித தெய்வங்களாய் வாழ்ந்து மறைந்த, கடவுள் பெருமக்களே... என் வேண்டுதல் பலிக்க வேண்டும்!

என் கனவுகள் நினைவாக வேண்டும்! என் எண்ணங்களில் எழுச்சி பெற வேண்டும்!'

அழுதாள்!

உயிர் குலுங்க அழுதாள்!

மக்கள் உள்ளே வர ஆரம்பித்தனர்.

இவளே அழுது கொண்டு இருந்தால்... தெரிந்தவர்கள், பிள்ளைகளின் பெற்றவர்கள் கண்களில் பட்டால், அவமானம் என உணர்ந்து... கண்களைத் துடைத்து எழுந்தாள். தலையை ஒழுங்கு படுத்தினாள். குளிர்ந்த நீரை கொண்டு முகத்தை அலம்பினாள். ஜாக்கெட்டின் கிழிசல் தெரியாமல் இருக்க இழுத்து போர்த்தினாள்.

ஒரு ஆட்டோ பிடித்து பள்ளிக்கு வர...

இவளின் அழுது வீங்கிய கண்ணையும், முகத்தையும் கண்டு சித்தப்பாவுக்காக அழுதிருக்கிறாள் என்று நினைத்து...

"சித்தப்பாவுக்கு ரொம்ப சீரியஸா? அங்கேயே ரெண்டு நாள் தங்கி வரக்கூடாதா?"

"சீரியஸ்தான்! இப்போ பரவாயில்லை! மேடமிடம் எனக்கு லீவு சொல்லிடு திவ்யா!" என்ற யுக்தா தள்ளாடி நடக்க... திவ்யா திரும்பித் திரும்பிப் பார்த்துச் சென்றாள்.

இடைவேளையின்போது திவ்யா வந்தாள்.

காய்ச்சலின் வேகம் அதிகமாகி... நடுங்கிக் கொண்டிருந்த யுக்தாவைக் கண்ட திவ்யா... பள்ளியின் டாக்டரை வரவழைத்து ஊசிப் போடச் செய்தாள்.



சரவணன் வந்து பார்த்தான். பேசினான். ஆனால், அவள் பேசவில்லை!

நீலாட்சியம்மாள் வந்து பார்த்த போது கண்கள் ததும்பியது.

மனந்தான் எல்லாவற்றிற்கும் ஆதாரம்! நல்ல நிகழ்வுகளை மட்டுமே பதிய வைத்துக் கொள்ள வேண்டும்! மகிழ்ச்சியான செய்திகளை மட்டுமே... மனம் மீண்டும் மீண்டும் மனனம் செய்யவேண்டும்!

கெட்ட நிகழ்வுகளை உடனே மறந்துவிட வேண்டும்! அப்படி மறக்காமல்... அதையே நினைத்துக் கொண்டிருந்தால்... அதுபோல மெல்ல கொல்லும் விஷம் எதுவுமில்லை!

யுக்தாவை அந்த கெட்ட நிகழ்வுகள்... விட்டு விலகாமல்... தினம் தினம் மெல்ல கொல்லும் விஷமாய் மாறி... அவள் மனதை கரையானாய் அரித்தது! எரிமலை குழம்பாய் சுட்டுப் பொசுக்கியது! வாடைக் காற்றாய் வாட்டி வதைத்தது!

இத்தனை நாளும் பூலோகமாய் இருந்த இந்த உலகம்... இப்போது பூதலோகமாய் காட்சியளித்தது! சித்தார்த்தனைப் போன்ற அசுரனை கண்டுவிட்டாளல்லவா? வஞ்சிக்கப்பட்டாளல்லவா?

ஐந்து நாளில் உடம்பு சரியாக மனதை திடப் படுத்திக் கொண்டு பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளி போர்டிகோவில் புன்னகைத்துக் கொண்டிருந்த அரவிந்தனையும், அன்னையையும் கைகூப்பி வணங்கினாள்.

என் எண்ணத்திலிருந்து எனக்கு நடந்த கொடுமையை அழித்துவிடு!

என் உடலுக்கு சக்தியினை கொடு!

என் மனதிற்கு வலுவினை கொடு!

கண்களில் கண்ணீர் பூ மலர்ந்தது!

# 13

வானத்தில் நட்சத்திரங்கள் பளிச்சிடாமல்... எங்கோ ஓடி ஒளிந்து, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இரவுப் பொழுது!

வான மங்கை, மேனியெங்கும் மேகப் போர்வையை இழுத்துப் போர்த்தி... நாணமுடன் இருந்தாள்! மின்மினி பூச்சிகளைப் போல... மின்னல் அரக்கர்கள் வானில் மின்னி மின்னி மறைந்து கொண்டிருந்தனர். கொஞ்ச நேரத்தில் தூவானமாய் மழை பெய்து புதுச்சேரி நகரத்தை குளிக்க வைத்துக் கொண்டிருந்தாள் வான மங்கை!

மீனாட்சி... கணவன் சிவநாதனுக்காக கவலையாய் காத்திருந்தாள். மாடியிலிருந்து இறங்கி வந்த சித்தார்த்தன் கேட்டான்.

'என்ன மம்மி இன்னும் டாடியைக் காணும்? அவர் வந்தால்... ஒரு முக்கியமான விஷயம் கேக்கணும்? மழை



நல்லா வலுக்கும்போல இருக்கே! எதற்கு நேரம் காலமில்லாமல்... வீணாய் உழைத்துக் கொண்டிருக்கிறார். என் ஒருத்தனுக்கு இங்கே கொட்டிக் கிடக்கும் சொத்துக்கள் போதாதா? இங்கே ஒன்பதா பெத்து வச்சிருக்கீங்க?''

சித்தார்த்தனின் வார்த்தைகளை கேட்டு கொண்டே உள்ளே நுழைந்த சிவநாதன்...

''என்ன மீனாட்சி.... உன் பையன் என்ன சொல்றான்?''

''என்ன டாடி நனைஞ்சிட்டு வந்திருக்கீங்க?'' என்றவன் டவல் எடுத்துப் போய் தலையை துவட்டி விட்டான்.

பள்ளி விழாவுக்கு பிறகு அப்பாவும் பிள்ளையும் ரொம்பவே பாசமாகி விட்டார்கள்! காரணம்? சித்தார்த்தனின் மாற்றங்கள்!

''நாம ரெண்டு பேரும் ஒன்பதா பெத்து வச்சிருக்கோம்ன்னு அலுத்துக்கிறான்! ஒண்ணே இந்த லட்சணத்தில் சொல் பேச்சி கேட்காமல் வளர்ந்திருக்கே! இதில் ஒன்பது தாங்குமா? கற்பனை பண்ணிப் பார்க்க முடியலே!''

மீனாட்சி சொல்ல...

''ஏன்டா எங்களை குறை சொல்றே? உனக்கு பிறகு மம்மிக்கு உடம்பு முடியாமல் போய் யூட்ரஸ்ஸையே எடுக்கும்படி ஆயிடிச்சி! ஏன் நீ திருமணம் செய்து... ஒன்பது என்ன பதினாறே பெத்துக்கோயேன்!'' சிவநாதன் சொல்ல...

யுக்தாமுகி கண்ணீரோடு வந்து கண்ணுக்குள் நின்றாள்.

"உன் முதலமைச்சர் அங்கிள்... உனக்கு தன் பெண்ணை கொடுக்கறேன்னு சொல்றார்! பேசிமுடிக்கட்டுமா?"

முதலமைச்சர் கொஞ்சம் தூரத்து உறவுகூட!

'என்னைத் தவிர வேற யாரையும்... உங்களால நினைச்சிக்கூட பார்க்க முடியாது!' நெஞ்சுக்குள்ளிருந்து யுக்தாமுகி ஆவேசமாய் பேசினாள்.

"என்னப்பா நீங்க? உங்ககிட்ட ஒரு விஷயம்ப்பா!"

"என்ன சித்து?" பாசமாய் தந்தை கேட்க...

"எனக்கு மெடிக்கல் படிக்கணும்ன்னு ஆசையா இருக்கு! படிக்க வெளிநாடு போறேன்!"

"வர்த்தகம் படிச்சே! ரொம்ப நல்லா பயன்படுத்தினே! இதுல மெடிக்கல் படிக்கணுமாம்! வயசென்னாகுது? விளையாடறீயா? வெளிநாடு போய் கெட்டு சுட்டிச் சுவராகி வந்தது போதாதா? மேலும் தீவிரமா கெடணுமா? வேணாம்! எங்களுக்கு இருக்கும் ஒரே வாரிசு நீதான்!"

சிவநாதன் மறுத்தார்.

"பிஸினஸ் பார்! விட்டுத்தரேன்! பக்கத்துலே இருந்து சொல்லி தந்துட்டு நகர்ந்துக்கிறேன்! அல்லது பள்ளி நிர்வாகத்தை உன் கையிலெடுத்துக்கோ! அதை விடுத்து படிக்கப் போறேன்னா என்ன அர்த்தம்? அதுவும் மெடிக்கல்! எம்.பி.பி.எஸ். முடிச்சிட்டு நீ வர முப்பது, முப்பத்தொன்பது வயசாவது ஆயிடும்! தேவையா? டாக்டராகி என்ன செய்யப் போறே?"

"நான் படிக்கணும்!"



"பிடிவாதம் வேண்டாம், சித்து! வெட்டி செலவு! நீ செய்யும் செலவை ஏழைங்களுக்கு கொடுத்தாலாவது புண்ணியம்! அவர்கள் வாழ்வாவது சிறக்கும்!"

"ஏன் ஏழை, தானம், தர்மம்ன்னு இப்படி கொட்டி கொட்டி கொடுக்கறீங்க! வெட்டியா ஊரானுங்களுக்கு கொடுக்கலாம்! நீங்கள் பெத்த பிள்ளைக்கு கொடுக்கக் கூடாதா?"

"நீ எப்போ சொல்பேச்சு கேட்டிருக்கிறாய்! போ... போய்படி!"

"நல்ல டாடி! ஆனால் அதை சிரிச்சிட்டே சொல்லக் கூடாதா?" சித்தார்த்தன் சந்தோசித்தான்.

"என்னங்க... அவனுக்குதான் அறிவில்லே! உங்களுக்குமா? நாம பெத்தது ஒண்ணே... ஒண்ணு! கண்ணே கண்ணுன்னு! அவன் இஷ்டத்துக்கு ஆடறீங்களே! வெளிநாடு போய் இன்னும் கெட்டு வருவான் தேவையா?"

"சாமியே வரம் கொடுத்தாலும்... பூசாரியா குறுக்கே நிக்காதீங்கம்மா!"

"அப்படின்னா ஒண்ணு செய்! காரைக்குடியில சேர்ந்துக்கோ! இல்லாட்டி சிதம்பரம் அண்ணாமலை யுனிவர்சிட்டியில சேர்ந்து படி! தினமும் போய் வீட்டுக்கு வந்துடலாம்!"

"போர் அடிக்காதே மம்மி! வெளிநாட்டுல படிச்சவனால இங்கே எல்லாம் படிக்க முடியாது! தெரியுமா?" கன்னத்தில் முத்தமிட்டு கொஞ்சினான்.

"கல்யாணம் பண்ண வேணாமா?"

யுக்தாமுகி... 'முடியுமா? உன்னால் வேறொருத்தியை கட்டிக்க முடியுமா?' கேட்டாள், நெஞ்சுக்குள்ளிருந்து.

சித்தார்த்தன் தலையை சிலிர்த்து கொண்டான்.

''எனக்கு இந்த குடும்பம், கல்யாணம் எதுவும் வேண்டாம்!''

''அப்போ உன் பேர் சொல்லவும்... அப்பா பேர் சொல்லவும் வாரிசு வேண்டாமா? இந்த சொத்தையெல்லாம் ஆள... உனக்குப் பிறகு பிள்ளை வேண்டாமா? என்னடா சித்து பேசறே?'' அம்மா கலக்கத்துடன் கேட்க...

''வாரிசு வேணுமானால் அப்பாவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வையுங்க! நீங்கதான் கிழவி ஆயிட்டீங்க! டாடி இன்னும் மாப்பிள்ளைப் போலத்தானே இருக்கார்!''

சித்தார்த்தன் சிரித்தபடி கூற... மீனாட்சி கை ஓங்கிப் போக... மாடியேறி ஓடினான்.

மறுநாள்...

உணவு இடைவேளையின் போது ''பசிக்கல, திவ்யா! நீ போடி!'' என்றவள்... ஆபீஸ் அறைக்கு வந்து கம்ப்யூட்டரை ஓபன் செய்து எதையோ சரிபார்த்துக் கொண்டிருந்தாள், யுக்தாமுகி.

மீனாட்சி உட்பட யாருமே இல்லை!

மாணவர்களுக்கு கோடை விடுமுறை என்பதால்... ஆசிரியர்கள் பேப்பர் திருத்தி, ரிசல்ட் போடும் மும்முரமான வேலையைப் பார்த்தனர். மாணவர்கள் இல்லாத பள்ளி... அலையற்ற கடலாய் தென்பட்டது.



யுக்தாமுகி அருகே... யாரோ நிற்கும் அரவம் உணர... நிமிர்ந்து நோக்கியவள், அதிர்ந்தாள்!

யாரைப் பார்க்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தாளோ... அந்த சித்தார்த்தன்!

அவன் விழியோடு இவள் விழிகலங்க... சட்டென்று அவனுள் கரைந்த உணர்வு! அவனுள் கலந்த உணர்வு 'என்னவன்... என்னவன்' என்று தினமும் மனனம் செய்கிறாளல்லவா?'

''காய்ச்சலோடு வந்தாயே... இப்போ உடம்பு பரவாயில்லையா, யுக்தா?'' அவன் அக்கறையாய் கேட்க...

அவள் மௌனமாய் கம்ப்யூட்டரில் வேலைப் பார்த்தாள்.

''காதுல விழலையா, யுக்தா? அக்கறையாத்தானே, கேட்கிறேன்! பதில் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்? ம்?'' என்று அதட்ட.....

''யார்? யார் சார் நீங்க? என் மேலும், என் உடம்பு மேலும் அவ்வளவு அக்கறை எதுக்கு? அநாவசியமா என்னை கோபப்படுத்தாதீங்க! போங்க சார்!'' வாசலை நோக்கி கை காட்டினாள்!

''என்னை போகச் சொல்ல உனக்கென்ன உரிமை இருக்கு? இது என் பள்ளி!'' பட்டென்று சொல்ல...

''நீங்க போக வேணாம்! நான் வரேன்!'' கம்ப்யூட்டரை குளோஸ் பண்ணி எழுந்தாள்.

''நில்! எங்கே ஓடறே? நான் வெளிநாட்டுக்கு படிக்கப் போறேன்! மருத்துவம்!''

"எங்கேயோ போங்க! அதை ஏன் என்கிட்ட சொல்றீங்க? ஒரே ஒரு அட்வைஸ் மட்டும் சொல்லட்டுமா?"

சித்தார்த்தன் யுக்தாமுகியை புரியாமல் பார்த்தான்.

"மருத்துவம் வேண்டாம்! மனவியல்... சைக்காலேஜி படிங்க!"

"என்ன நக்கலா?"

"ம்கூம்! உங்களுக்கு தேவையான படிப்பு!"

"அன்றைய நிகழ்ச்சியை நினைச்சிட்டு... வீணா உன் வாழ்க்கையை கெடுத்துக்காதே! சரவணனை கட்டி சந்தோசமா வாழ்க்கை நடத்தற வழியைப் பார்!"

"அதை நீங்க சொல்ல வேணாம்!"

"நான் சொல்லாமல் பின்னே யார் சொல்வது?"

"உங்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்தது யார்?" கோபமாய் கத்த...

சித்தார்த்தன் விழிக்க....

"என் வாழ்க்கை! என் இஷ்டம்! என் ப்ரியம்!"

"வீணா எதையாவது கற்பனை பண்ணிட்டு... உன் வாழ்க்கையை கெடுத்துக்காதே! கற்பு! மானம்ன்னு சொல்லிட்டு இருந்துடுவியோன்னு அட்வைஸ் பண்ண வந்தேன்!"

"உங்க அட்வைஸ் எனக்குத் தேவையில்லை!"

"நான் உன்னை ஒருநாளும் நினைக்க மாட்டேன்! மணக்கமாட்டேன்! தெரிஞ்சிக்கோ!"

"நானும் மணந்துக்கோங்கன்னு மாலை மாலையா கண்ணீர் விட்டு நிற்கலையே! ஆனால், இனி நீங்க



வேறு பெண்ணை தொடவோ, தப்பு செய்யவோ மாட்டேங்க!"

கண்களில் ஆச்சரியத்தைத் தேக்கி அவளிடம் சொன்னான்.

"இது என்னடி இத்தனை பெரிய நம்பிக்கை! உன் நம்பிக்கை பொய்க்கப் போகுது! நாளையே ஒருத்தியோடு வந்து... உன் கண் முன்னாடி கொஞ்சி நிற்கட்டுமா? "

"முடியாது!" கட்டாயமாய்ச் சொன்னாள், யுக்தாமுகி.

"அதையும் பார்க்கலாமா? வெளிநாடு போய் அழகான வெள்ளைக்காரியோட இருந்ததை வீடியோ எடுத்து அனுப்பட்டுமா?"

"என்கிட்ட சவால் வேண்டாம்! தோத்துடுவீங்க, சித்தார்த்!"

"நான் ஜெயிக்கவே பிறந்தவன்! உனக்குத்தான் தெரியுமே!" அழுத்தம் கொடுத்துச் சொல்ல...

"ஏமாறப் போறீங்க!"

"அதையும் பார்க்கலாம்டி! உன் கண்முன்னாடியே ஒருத்தியை நாளைக்கு கொண்டு வந்து..."

"அசிங்கமாப் பேசாதீங்க!"

யுக்தாமுகி காதைப் பொத்தினாள். சித்தார்த்தன் புன்னகைத்தான்.

"எனக்கு உன்னை நினைச்சி ஆச்சரியம், யுக்தா? அப்பாம்மாகிட்டயும் சொல்லாமல், போலீஸுக்கும் போகாமல்... எப்படி?"

"'நன்றி மட்டுமே உங்களுக்கு நெருங்கிய உறவாகும். ஆகவே, நன்றியுடன் இருங்கள். உங்களுக்கு தீமை செய்தவருக்கும் நன்மையே செய்யுங்கள்! அதற்கு மனதில் நற்சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்' - புத்தர் சொன்னதை படிச்சதில்லையா?...

"இந்த மூன்று வருடத்தில் தாயாய், நல்லதோழியாய் பாசமிகு தாளாளராய்... அன்பு காட்டிய மீனாட்சியம்மாவின் குடும்பத்தை எப்படி தண்டிப்பது?..."

"என் உழைப்பு கண்டு, உறுதி கண்டு, முன்னேற்றம் கண்டு... திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் முதுகலை படிக்க வைத்த... தந்தையைப் போன்ற சிவநாதனின் பிள்ளையை சிறையில் தள்ளி... எப்படி களி திண்ண வைப்பேன்? அந்த தயாளனை எவ்வாறு தலைகுனிய வைப்பேன்? சொல்லுங்க?

"மறப்பதுதானே நல்லவழி! மன்னிப்பதுதானே நல்ல குணம்! புத்தன், ஏசு, காந்தி, விவேகானந்தன், ராமகிருஷ்ணர், அன்னை அரவிந்தர் அத்தனை பேரின் கொள்கைகளும் எனக்கு பரிட்சயம்!"

கொஞ்சம் நிறுத்தி மூச்சு வாங்கிக் கொண்டு சொன்னாள்.

"அன்பு... அன்பு மட்டுமே தெரியும்! பகையுணர்ச்சி... உங்களுக்கு வேணா தெரியலாம்! ஆனால் எனக்குத் தெரியாது!" குத்தலாய்ச் சொல்ல...

"எதிராளியை பேச்சிலேயே வசீகரிக்க கத்து வச்சிருக்கே! கீப் இட் அப்! வெல்டன்! ஒரே ஒரு மன வருத்தம்! உன் கல்யாணம் வரை இருந்து வாழ்த்திட்டு போகலா



மேன்னு பார்த்தேன்! ஆனால், ப்ராண்ட்ஸ்யெல்லாம் உடனே வரச் சொல்லி வற்புறுத்தறாங்க! இந்த செய்தியை உன்கிட்டே சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்! சரவணனிடம் என் வாழ்த்தினை சொல்லிடு! பை!"

அவன் சம்பீரமாய் வெளியேற...

யுக்தாமுகி விக்கித்து நின்றாள்.

* * *

இரண்டு நாள் கழித்து யுக்தாவிடம் சரவணன் வந்து கேட்டான்.

"கல்யாண நாள் நெருங்கிட்டு இருக்கு! பட்டு சேலை, தாலி வாங்கணும்! மாலை ப்ரீயா? போலாமா?"

யுக்தாமுகி கண்களில் கண்ணீர் திரையிட மௌனமாய் நின்றாள்.

'எதைச் சொல்லுவாள்? எப்படிச் சொல்லுவாள்?'

"என்னங்க யுக்தா... நான் கேட்டுட்டு இருக்கேன்! பதில் சொல்லாமல் இருந்தா என்ன மீனிங்?"

"எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்!" பட்டென்று சொல்ல...

சரவணனோடு சேர்ந்து, திவ்யாவும் அதிர்ந்தாள்.

"ஏன்? என்ன? நீ சம்மதம் சொல்லித்தானே இவ்வளவு ஏற்பாடும் செய்தோம்! ஜோக்தானே செய்யறீங்க? நிஜமில்லைதானே?" பதறிக் கேட்க...

"உண்மைதாங்க! எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்!"

"என்ன காரணம்?" கத்தினான்.

"பிடிக்கலே!"

"யாரை?"

"என்னையே!"

"என்ன யுக்தா... அபத்தமா பேசறே?"

"எனக்கு உங்களை மணந்துக்க தகுதியில்லை!"

"இதுவரை இருந்த தகுதி... திடீர்னு இப்போ எப்படி இல்லாமல் போகும்? தெரிந்தவர்களுக்கெல்லாம் பத்திரிகை கொடுத்தாச்சி! இப்போ போய் கல்யாணம் இல்லேன்னால்... எல்லோரும் காறி துப்புவாங்க! மரியாதை, மானம் போயிடும்! சாயங்காலம் ரெடியா இரு!" கட்டாயமாய்ச் சொல்ல...

"நிஜமாவே எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்!"

"ஏன்? என்ன காரணம்? உண்மையான காரணத்தை சொல்? நான் யோசிக்கிறேன்!"

அவன் அப்படி கேட்க... அடக்க முடியாமல் அவள் அழ....

"யுக்தா... என்னடி? ஏன்டி? உனக்கு கிறுக்கு பிடிச்சிருக்கா என்ன? இந்த மனுசன் திரும்ப... இந்த பள்ளியில் மானம், மரியாதையோட வாழவேண்டாமா?"

"வேணாம்! வேணாம், திவ்யா! ப்ளீஸ் திவ்யா... என்னை புரிஞ்சிக்கோ, திவ்யா!" யுக்தா குழந்தையாய் வீறிட்டு அழ...

"சரவணன் அவசரப்படாதீங்க! நான் என்ன எதுன்னு கேட்கிறேன்! நீ வாடி!" தனியே அழைத்துச் சென்றாள்.



"யுக்தாமுகி... நீ யோசித்துதான் சொல்றீயா? சரவணன் நல்லவர்! உன் சம்மதம் கிடைச்ச பிறகுதானே... ரிஜிஸ்டர் ஆபீஸ்ல தேதி வாங்கி... பத்திரிகை அடிச்சி... ஊருக்கெல்லாம் கொடுத்து... எல்லாமே உன் விருப்பப் படிதானே நடந்தது! இப்போ மறுத்தால் என்ன காரணம்?"

"............................"

"நான் உன் தோழி! என்கிட்ட கூடச் சொல்ல முடியாத காரணம், செய்தி ஏதாவது உண்டா? சொல்லு யுக்தா?"

"............................"

"கோபப்படுத்தாதே, யுக்தா! சரவணன் சரியான காரணம் சொல்லாமல் விடுவாரா? நீ மறுக்கற விஷயத்தை மேடம் வரை கொண்டு போவார்! அது உனக்கு அசிங்கம்தானே?"

"நான் அவரை மணந்து கொள்ளும் தகுதியை இழந்துட்டேன்!"

"என்ன தகுதி? உளறாதே!"

"ஒருத்தனை மணந்துக்க நல்லவளா, குணசாலியா, அறிவுள்ளவளா, கற்புள்ளவளா இருக்க வேண்டுமல்லவா?"

"நீதான் அனைத்துமே ஒருங்கிணைஞ்சவளாச்சே! மாசு மருவற்றவளாச்சே!"

"என்கிட்ட கற்பு இல்லடி! பெண்ணின் உயிரைவிட... உயர்வான கற்பு... இப்போ என்கிட்டே இல்லே!" குலுங்கிக் குலுங்கி அழுதவளைப் பார்த்துப் பதறி...

"ஏய் சத்தம்... யாராவது உன் அழுகுரல் கேட்டு வந்துடப் போறாங்க! மெதுவாடி! சொல்லு? எப்படி? எப்

போது? உண்மையாகவா?'' அதிர்ச்சி மாறாமல் கேட்டாள்.

''அன்னைக்கு சித்தப்பாவுக்கு சீரியஸ்ன்னு போனோம் இல்லையா? அன்று... அன்றுதான்... அந்த கொரோமான சம்பவம் நடந்துச்சி! என் வாழ்க்கையில இப்படி ஒரு அநியாயம் நடக்கும்ன்னு எதிர்பார்க்கலே! நான் மாசு பட்டுட்டேன்! என் உடம்பு கறையாயிடிச்சி! இப்படிப்பட்ட நான் எப்படி சரவணனை மணப்பேன்!''

''யார் தெரியுமா? நம்ம மீனாட்சி அம்மாகிட்ட சொல்லலாமா?''

''யாருன்னே தெரியாது!

''சமீபமா யாராவது உன்மேல ஆசைப்பட்டு ஏதாவது கேட்டாங்களா? நீ மறுத்தாயா? ஞாபகப்படுத்து! யுக்தா... இது உன் வாழ்க்கைப் பிரச்சினை!''

''தெரியலே!'' பொங்கிய கண்ணீரைத் துடைத்தாள்.

''சரி! நீ தெரிஞ்சி தப்பு பண்ணலே! உன் மேல் குற்றமில்ல! சாக்கடையில தவறி விழுந்துட்டா... உடம்பை கழுவிக் கொள்வது இல்லையா? அதுபோல மறந்துட்டு மணந்துக்கோயேன்!''

''உடம்பை கழுவிக்கலாம்! மனசை... மனசாட்சியை... எதை கொண்டு கழுவுவது? எப்படி கழுவுவது? சரவணன் என்னைத் தொடும்போதெல்லாம்... அந்த முகம் தெரியாதவன் ஞாபகம் வந்து... என்னை அணுஅணுவாச் சாகடிக்குமே! தெரிஞ்சே எப்படி ஒரு ஆண்பிள்ளையை ஏமாற்றுவது?''

''உன் வாழ்க்கை?''



''கேள்விக்குறிதான்! இப்போ போல தனிக்கட்டையாய் வாழ்ந்துட வேண்டியதுதான்!''

''தப்பு செய்தவன் தண்டனையை அனுபவிக்க வேண்டாமா? நம்ம பெரியவர்... வேண்டாம் சின்னவருக்கு போலீஸ்கிட்ட நெருக்கமான பழக்கம்! ரகசியமா அவர் கிட்ட சொல்லி... உன்னைக் கெடுத்தவனை தேடலாமா?''

'சின்னவர்கிட்டயா? திருடியவனிடமே திருடனை பிடித்துக் கொடுடா என்பது என்ன அதிசயம்!'

யுக்தாமுகிக்கு அந்த நினைப்பு புன்னகையை வரவழைத்தது.

''என்ன மௌனமாயிட்டே?''

''இது அசிங்கம்! பெரிய அவமானம்! மற்றவரிடம் சொல்லி... என்னையே கேவலப்படுத்திக்கணுமா? திவ்யா?''

''தப்பு செய்தவனுக்கு தண்டனை?''

''அதை ஆண்டவன் பார்த்துக்குவான்! இதற்கான தீர்ப்பை கடவுள்கிட்ட விட்டுவிடலாம், திவ்யா!''

யுக்தாமுகி பொங்கி வந்த அழுகையை அடக்க பெரும்பாடுபட்டாள்.

அவளுக்கு நடந்த அநியாயம்...

காலத்தின் தீர்ப்பா? கட்டாயத்தின் தீர்ப்பா?

கடவுளின் தீர்ப்பா? இல்லையில்லை ஒரு தனிமனிதனின் தீர்ப்பு!

# 14

சித்தார்த்தன் வெளிநாடு சென்றுவிட்டான்.

சரவணன் யுக்தாவிடம் மீண்டும் மீண்டும் திருமணத்துக்கு வற்புறுத்த...

யுக்தாமுகி மறுக்க...

இந்த விஷயம் மீனாட்சி அம்மாளின் காதுக்கு சென்றது.

"என்ன விஷயம்? ஏம்மா மறுக்கறே? நீ நல்ல பெண்ணாச்சே! காரணமில்லாமல் எதுவும் செய்யமாட்டே! சொல்? ஏன்? என்ன செய்தி?" பாசமாய் கேட்க... நெகிழ்ந்துவிட்டாள்.

"திருமணம் வேண்டாம், மேம்!" கண்ணீர் துளிகள் கண்களிலிருந்து சிதறி ஓடியது.

"எனக்கு என்னதான் வழி?" சரவணன் இடைப்புக...

"இரு சரவணா! பொறுப்பா! அவசரப்படாதே! நான் கேட்டுட்டு இருக்கேன், இல்ல?" என்று அதட்ட... அவன் வாயை மூடிக் கொண்டான்.

"மன்னிச்சிக்கங்க, மேம்! என்னை வற்புறுத்தாதீங்க!"

"நான் வெளியே எப்படி மேம் தலைகாட்டுவேன்!" சரவணனின் கண்கள் கண்ணீரில் பளபளத்தது.



"இந்த பிரச்சினைக்கு என்னதாம்மா தீர்வு?"

"திவ்யா... திவ்யா... நினைச்சா முடியும், மேம்! திவ்யாவும் என்னைப் போல யாருமில்லாத அநாதை! என்னைவிட அழகுலயும், குணத்துலயும் குறைச்சலா இருக்கலாம்! ஆனால் தங்கம்! ப்ளீஸ் அவளை திருமணம் செய்துக்கங்களேன்! திவ்யா நான் சொன்னால் கேட்பா? என்ன திவ்யா?" கண்ணீரோடு கேட்டவளுக்கு... சரி என்பது போல... திவ்யா மௌனத்தை பதிலாய் தந்தாள்.

மீனாட்சியும் இதை ஆமோதித்தாள்.

"ஆமாம், சரவணன்! நீங்க உடனடியா எதுவும் சொல்ல வேணாம்! யோசிங்க!"

"யோசிக்க என்ன இருக்கு? யுக்தா சம்மதிக்க போறதில்லே! அப்புறம் திவ்யாவா இருந்தா என்ன? காவ்யாவா இருந்தா என்ன? எனக்கு சம்மதம்!"

சரவணன் சொல்ல... யுக்தாமுகி மகிழ்ந்தாள்.

குறித்த தேதியில் திருமணம் நல்லபடியாய் நடந்தது.

திவ்யா, சரவணன் சந்தோசமாய் குடும்பம் நடத்தினர்.

விடுமுறைக்கு பின்னர் பள்ளி திறக்கப்பட்டது. ஏற்கனவே அட்மிஷனை முடித்திருந்தாலும்... சில அட்மிஷனை தவிர்க்க முடியவில்லை.

யுக்தாமுகி கவலையை, துக்கத்தை மறந்து பிசியானாள்.

ஓரளவு தனக்கு நேர்ந்த துன்பத்தை... மறந்து இந்த சமயம் பார்த்து... புயலாய்... எரிமலையாய்... அந்த விஷயம் யுக்தாவைத் தாக்கியது.

வகுப்பறையில் யுக்தாமுகி மயங்கி விழ...

அவளைத் தானே அழைத்துக் கொண்டு வில்லிய னூரில் இருந்த அறிமுகமே இல்லாத டாக்டரிடம் அவ சரத்திற்கு சென்றாள், மீனாட்சி அம்மாள்.

மீனாட்சி வராண்டாவில் பதைபதைக்க அமர்ந்து இருந் தாள்.

யுக்தாமுகி சமீபமாய் சரியாய் உண்ணாமல் மெலிந்து, நிறமிழந்து காணப்பட்டதைக் கண்டு மீனாட்சியம் மாளுக்கு வருத்தம்தான்! 'இந்த பெண்ணுக்கு என்ன சோகம் நடந்திருக்கும்? ஏன் இப்படி இருக்கிறாள்?'

அவ்வப்போது நினைத்துக் கொள்வாள்! என்ன என்று கேட்டு மேலும் யுக்தாவை புண்படுத்த மனசில்லை!

கொஞ்ச நேரத்தில் டாக்டர் அழைக்க... மீனாட்சி உள்ளே செல்ல.. யுக்தாமுகி துணியை சரிபடுத்திக் கொண்டு மயக்கம் தெளிந்து வர..

"வாங்கம்மா! எல்லாம் நல்ல செய்திதான்! உங்கள் மரு மகளா? கற்பமா இருக்காங்க! நீங்க பாட்டி ஆயிட்டீங்க! சந்தோசம்தானே? இவங்க பாடி கொஞ்சம் வீக்கா இருக்கு! வெயிட் தூக்க வேண்டாம்! கடுமையா வேலை செய்ய வேண்டாம்! முக்கியமா உங்க பிள்ளையை கொஞ்சம் முரட்டுத்தனமா இருக்க வேண்டாம்ன்னு சொல்லுங்க? ஏன் ஒரு மூணுமாசம் தள்ளியே இருக்கறது பெட்டர்! உங்க சன் வர்லையா? இந்த சந்தோசமான செய்தியை அவர்கிட்ட போய் சொல்லுங்க?" என்று அந்த அறிமுகமற்ற டாக்டர் சிரிக்க..

மீனாட்சி அதிர்ந்து நோக்க...



யுக்தாமுகி உடம்பெல்லாம் தீப்பற்றிக் கொண்டவள் போல அலற...

அழும் யுக்தாமுகியை டாக்டர் கேள்விக்குறியாய் நோக்க... நன்றி சொல்லிவிட்டு... யுக்தாவின் கைப்பிடித்து வெளியே வந்தாள், மீனாட்சி.

"அம்மா யுக்தா... டாக்டர் சொன்னாப்போல நீ என் மருமகளா இருந்து... என் மகனின் பிள்ளையை சுமந்து இருந்தால்... எவ்வளவோ சந்தோசப்படுவேன்! ஆனால்....?"

'இது உங்க மகனின் பிள்ளைதான்! சித்தார்த்தனின் கருதான் என் வயிற்றில் வளருது!' என்று யுக்தாவிற்கு அலற வேண்டும் போல இருந்தது.

"சரி சொல்? திருமணம் வேண்டாம் என்றதுக்கு இது தான் காரணமா? தெரிஞ்சி இந்த தப்பை செய்யக்கூடி யவள், நீயில்லே! இதற்கு காரணமானவன் யார்? தெரி யுமா? எப்படி?" அடுக்காய் கேள்விகளை அடுக்க... யுக்தா முழி பிதுங்கினாள்.

"எனக்கு தெரியாது, மேம்! சித்தப்பாவுக்கு சீரியஸ்ன்னு போனேன்! அப்போ... அப்போ... யார்ன்னே தெரியல, மேம்! என்னைச் சீரழிச்சுட்டான்! நம்பாமல் பாக்கறீங்களே மேம்! நான் தெரிஞ்சி தப்பு பண்ணல, மேம்! ப்ளீஸ்...!" அழுதாள்.

"உன்னை நம்பறேன்! ஆனால் அவனை தெரியாதுன்னு சொல்றீயே, அதைத்தான் நம்பமுடியலே!"

"எனக்கு சுயநினைவு இல்லாமல் செய்து... என்னை நாசப்படுத்திட்டான்!" பொய் சொன்னாள்.

''சரி ஏன் அதை அப்பவே சொல்லல? பெரியவங்கிட்ட சொல்லி... போலீசை முடுக்கி விடலாம்ல? என்ன பெண்ணம்மா நீ? படித்தவள் தானே! இவ்வளவு பெரிய கொடுமை நடந்திருக்கு சொல்லலையே! ஏன்?''

''..........................................''

''சித்து... இருக்கும்போதே சொல்லியிருந்தால்... அவன் இதை சும்மாவே விட்டுருக்க மாட்டான், தெரியுமா?''

யுக்தாமுகி அதிர்ச்சியோடு நோக்கினாள்.

''சரி... இனி என்ன செய்யலாம்?''

''போலீஸ்கிட்ட எல்லாம் வேணாம், மேம்! ப்ளீஸ் மேம்...''

''போலீஸ்கிட்ட வேண்டாம்! வயித்துல வளரும் அசிங்கத்தை என்ன பண்ணப்போறே?''

'அசிங்கமா? செய்தி அறிந்தால் புனிதம்ன்னு போற்றுவீங்களே!' மனதிற்குள் அழுதாள்.

''என்ன யுக்தா? கிளீன் பண்ண டேட் வாங்கிடலாமா?''

'உங்க மகன்... எனக்கு கொடுத்திருக்கும் அழிக்க முடியாத, பரிசு!'

''ஏய் யுக்தா... கேக்கிறேன் இல்ல?''

''வேணாம், மேம்!''

''ஏன்?''

''பெத்துக்கப்போறேன்!'' முடிவாய், அழுத்தம் திருத்தமாய், வார்த்தைகள் வர...



''உனக்கென்ன பைத்தியமா? கண்டவனோடதை எல்லாம் ச்சே...! தாலியில்லாமல் குழந்தையை சுமந்துட்டு... எத்தனை கேள்விகள்! எத்தனை அவமானங்கள்! குத்தல்கள்! எல்லாத்தையும் சகித்து... இதை பெத்துக்கணும்னு அவசியம் என்ன இருக்கு? உனக்கென்ன தலையெழுத்தா? யாரோ திருடன்... உன்னை கெடுத்து, கொடுத்துட்டுப் போன பிள்ளையை சுமந்து பெறணும்னு விதியா என்ன? படிச்சவள் போல பேசு...

''உனக்கு, நாளைக்குன்னு ஒரு எதிர்காலம் இருக்கு! இந்த அவமானத்தை பெத்து சீராட்டினால்... எவன் உன்னை கட்டிக்குவான்? இதைக் கலைச்சுடு! உன் மனக்காயம் ஆறியதும்... நானே நல்ல பையனாப் பார்த்து... உனக்கு மணம் முடித்து வைக்கிறேன்! புத்தியா பொழைச்சிக்கோ! உன்னிடம் ஒரு பள்ளியின் தாளாளர் போலவா பழகியிருக்கேன்! ஒரு தாயைப் போல தானே நினைச்சிட்டு இருக்கேன்! உனக்கு நல்லது எது, கெட்டது எது?ன்னு தெரிஞ்சிக்க முடியாத மனநிலையில் இருக்கே! நான் இந்த டாக்டர் பெண்ணிடம் டேட் வாங்கிடறேன்!''

''ஒரு உயிரை கொல்லறது பெரிய பாவம்!''

''யாருக்கும் உன்போல நிலைமை வந்ததில்லையா? அவங்கலெல்லாம் இப்படி செய்து கொண்டதில்லையா? சறுக்கி சேற்றுல விழறது, சிலசமயம் நடக்கும்தான்! எழுந்து கழுவிக்கணும்! அதை விடுத்து சகதியோட நிற்கக் கூடாது! அது முட்டாள் தனம்!''

''மற்றவங்க எப்படியோ? நான் இதை பெத்துக்கப் போறேன்! இந்த குழந்தைதான் என் எதிர்காலம்! என் நம்பிக்கை, எல்லாமே!''

"யுக்தா... என்ன பேசறே? இப்படி பேச நீ வெட்கப் படலை? அப்போ நீ தெரிஞ்சே... எவனோடவோ ஆசையா தப்பு பண்ணியிருக்கே!"

"ஐய்யோ..." தலையில் நெருப்பு விழுந்தவள் போல கதறினாள்.

"இல்லை... இல்லை... நிஜமா இல்லை!"

"அப்போ அபார்ஷன் பண்ணிக்கோ! நம்பறேன்!"

"அது மட்டும் மாட்டேன்!"

"என்ன இது அடம்? சின்ன பிள்ளையா நீ? அடிச்சி திருத்த!"

"ப்ளீஸ் மேம்..." அவள் மறுத்து அழ... வேற வழி யில்லாமல்... எக்கேடும் கெட்டு போகட்டும் என்று மீனாட்சி விட்டுவிட்டாள்.

பள்ளியை விட்டு நீக்கவும் மன வரவில்லை, மீனாட் சிக்கு!

'இந்த நேரத்தில் நாமும் சதி செய்தால்... அவள் எங்கே போவாள்?'

'என்ன ஆவாள்?'

'கர்ப்பிணிப் பெண்ணின் பாவம் நமக்கு வேண்டாம்!' என்று இருந்துவிட்டாள்.

சிவநாதன் கெஞ்சிக்கேட்டும் பலனில்லை!

திவ்யா.. எத்தனை போராடியும், யுக்தா மர்ம முடிச்சை அவிழ்க்கவில்லை.

பள்ளியில் உள்ள சக ஆசிரியர்கள் முதற்கொண்டு... கடைநிலை ஊழியர்வரை அவளை அசிங்கமாய் பார்த்து, அவமானமாய் பேச...



[illegible] ஒடுங்கி) போனாள்.

இந்தச் செய்தி மீனாட்சிக்கு தெரியவர... எல்லோரை யும் [illegible] கூட்டி...

"இனி யுக்தாவை அவமானப்படுத்தவோ... அசிங்கப் படுத்தவோ கூடாது! உங்க வீட்டு பெண்களுக்கு இப்படி ஒரு கொடுமை நடந்திருந்தால் என்ன செய்வீங்க? மீறி யாராவது செய்தால்... உங்களை வேலையைவிட்டு தூக்கி விடுவேன்!"

அதன் பிறகு யுக்தாவிற்கு எந்தவித துன்பமும், அவ மானமும் நேரவில்லை.

யுக்தா ஓட்டுக்குள் சுருளும் நத்தையாய் சுருண்டுப் போனாள். வாடி, வதங்கி மெலிந்துப் போனாள்.

இலக்கியத்தில் தலைவன் பொருள் தேடச் செல்லும் போது 'கார்காலம் வருவதற்குள் வந்து விடுகிறேன்!' என்று தலைவியிடம் கூறிச் செல்லுவான்! கார்காலமும் வந்துவிடும்! கார்கால மலர்கள் பூத்துக் குலுங்கும்! தலைவனைக் காணாத தலைவி பிரிவுத் துயர் தாங்காமல் மெலிந்து, பசலைப் படிந்து... கை வளையல்கள் தானே கழன்டு விழ... வாடி... தலைவனின் வரவுக்காய் காத் திருப்பாள்!

தலைவியின் நிலைக் கண்டு தோழி கூற... பாணன் தலைவன் இருக்குமிடம் தூது செல்லுவான்.

அந்த இலக்கியத் தலைவன் பொருள் தேடச் செல் வான்! ஆனால் யுக்தாவின் தலைவனோ.. அவளின் உயிரிலும் மேலான ஒரு பொருளை கவர்ந்து கொண்டு... கடல் கடந்து சென்றுவிட்டான். அவன் இவளுக்காக வரப் போவதில்லை!

பின்னே யாருக்காக உடல் மெலிந்து, பசலை படிந்து காத்திருக்கிறாள்?

ஐந்தாம் மாதமே வயிறு பெரிதாய் தெரிந்தது. எத்தனை இழுத்து மறைத்தாலும்... அவளுக்கு அவமானமாய் இருந்தது. அசிங்கமாய் இருந்தது.

'இத்தனை அவமானப்பட்டு... இந்த குழந்தையை பெற வேண்டுமா?' என்று மனம் கேட்டது.

'வேண்டும்! எனக்கு இந்த குழந்தை வேண்டும்!'

'இதன் தகப்பன் ஒரு நாளும் உன்னை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை!'

'வேண்டாம்! அதை நான் எதிர்பார்க்கவில்லை!'

'இந்த நேரம் யாரோடு, எந்த பெண்ணின் மடியில் கிடக்கிறானோ?'

'அது மட்டும் மாட்டான்!'

'அதுயென்ன இத்தனை நம்பிக்கை!'

'என் நேசம் நிஜமானால்... அவன் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்!'

'நீ அவனை நேசிக்கிறாயா?' மனம் வேகமாய் கேட்டது.

'ஆமாம்!'

'வெக்கமாயில்ல? உன்னை கெடுத்து குட்டிச்சுவராக்கியவனை... ஒரு கெட்டவனை நேசிக்கிறேன் என்பது!'

'அவனை கெட்டவனாக்கியதே நான்தானே! நான் கெட்டுப் போக... நானே காரணம்! என் தீ நாக்கே காரணம்! ஒழுக்கம்... ஒழுக்கம் என்று பேசிய என் வறட்டு பிடி



வாதமே காரணம்! திருந்திட்டேன்... என்னை மணந்துக்கோ... என்று கெஞ்சியவனை உதாசீனப்படுத்தியது, என் தப்புதானே?'

'பைத்தியக்காரி!'

'திருந்திட்டேன்னு வந்தவனை ஏற்று... திரும்ப ஒழுக்கம் கெடுகிறானா என்று நான் பார்த்திருக்கலாம் இல்ல? என் தவறு தானே?'

'போடி, கிறுக்கி!'

'நல்லவனை... மேலும் நல்லவனாக்குவதைவிட... கெட்டவனை நல்லவனாக்குவது தானே சிறப்பு! என் புத்திக்கு அப்போது தெரியாமல் போனதேன்?'

'பைத்தியம் முத்திடிச்சி!'

'ஒழுக்கம், மானம் என்றெல்லாம்... நானே என் தலையில் மண்ணள்ளி போட்டுட்டேன்!...'

'கெட்டவன் திருந்தி ஒழுக்கமாய் வாழ்வது உயிரினும் மேலாக மதிக்கப்படும்!' - என்று ஒது புது திருக்குறளை நான் ஏன் வழிவகுத்துக் கொள்ளவில்லை.'

'ஐய்யோ...' மனம் அலறியது.

'ஒழுக்கம்... ஒழுக்கம்ன்னு என்னை நீ சீரழிச்சது போதாதா? அவ்வளவு தூரம் ஒருவனை அவமானப்படுத்தினால்... அவன் சும்மா இருப்பானா? எத்தனை கெஞ்சினான்! எல்லாக் கெட்டப் பழக்கத்தையும் உனக்காக விட்டுடறேன்! உன் ஒருத்தி மட்டும் எனக்கு வேண்டும் என்றவனை... அநியாயமாய் அவமானப்படுத்தி...

என்னை பாழ்படுத்திக் கொண்டு... கடைசியில் கயவன், கள்வன், பாவி, பாதகன் என்று அவனையே திட்டுவது தப்பில்லையா?'

'உன்னை கண்ட நாள் முதலாய் ஒருத்தியையும் நினைச்சிக்கூட பார்க்கலே, யுக்தாம்மா! என்னை மன்னிச்சுக்கோ, முகிம்மா!' என்று கெஞ்சி, கொஞ்சியது இப்போது போலத் தோன்ற... உடலை உதறிக் கொண்டாள்.

'சித்தார்த்தா.... தாய்மை கூட அழகுதான்! இனிமை தான்! சந்தோசம்தான்! தவம்தான்! உன் பிள்ளை என் வயிற்றில் தவழும்போது... அந்த உணர்வை என்னால் விவரிக்கவே முடியவில்லை!'

'இந்த தாய்மை உணர்வை கொடுத்த நீ நல்லா இருக்கணும்! இனி ஒரு போதும் உன்னைத் திட்டமாட்டேன். சித்தார்த்! உனக்கு நான் சாபம் விடமாட்டேன்! இதுவரை நான் கொடுத்த சாபம் உனக்கு பலிக்கக்கூடாது! கடவுளே... என் புலம்பல்கள், சாபங்கள் அவனை வேறுக்க கூடாது! சித்தார்த்தன் என்னுடையவன்! என்னில் பாதி!'

ஆனால், இவள் கொடுத்த சாபம் பலிக்கப் போகிறது எனத் தெரியாது!

## 15

மாலை பள்ளிவிட்டு... சலசலத்து... நீரோடையாய் குழந்தைகள் வீட்டுக்கும், ஹாஸ்டலுக்கும் சென்றனர்.



யுக்தா... மீனாட்சியின் அறையில் இருந்த, கம்ப்யூட்டரில் வேலையாய் இருந்தாள்.

போன் மணி இசைக்க... யுக்தாமுகி எடுத்தாள்.

''ஹலோ சித்தார்த் வித்யாஸ்ரம் டே கம் ரெஸிடென்சியல் ஸ்கூல்! யார் சார் நீங்க?''

யுக்தாவின் குரல்... உயிரில் கலந்து... உள்ளத்தை சிலிர்க்க வைத்தது, சித்தார்த்தனுக்கு!

''ஹலோ யாருங்க? உங்களுக்கு என்ன வேணும்?'' மீண்டும் கேட்க...

''யுக்தா... நான் சித்தார்த்தன்!'' அவன் மெல்லச் சொல்ல...

யுக்தாவிற்கு உள்ளம் நடுங்கியது. நொடிப் பொழுதில் எல்லியிலும் வியர்த்துக் கொட்டியது.

''மம்மி இல்லையா? நீ எப்படி இருக்கே?''

அவனோடு பேசவேண்டும் என்று ஆசையாய் இருந்தது. ஆனால், ரோஷம் பேச விடவில்லை!

டொக்கென்று போனை வைத்தாள். கம்ப்யூட்டர் முன்பு போய் அமர்ந்தாள்.

திரும்பத் திரும்ப ஒலிக்க... உள்ளே வந்த மீனாட்சி எடுத்தாள்.

''ஹலோ.. யாரு சித்துவா? ஏய் சித்து குட்டி... நல்லாயிருக்கியா? ரொம்ப நாளா போனும் பண்ணலே! லெட்டரும் போடலே! அடிக்கடி போன் பண்ணக்கூடாதா? உன் செல்லுக்கு ட்ரைப் பண்ணினால் ஆப்ல இருக்கு! டாடியா ரொம்ப நல்லா இருக்கார்! பள்ளியில எல்லோரும் நல்லாயிருக்காங்க. ஆனால் யுக்தா பொண்ணுதான்...''

மீனாட்சி இதுவரை யுக்தாவைப் பற்றி சொன்னதில்லை! கேட்க நினைக்கும்போது அம்மா சந்தேகப்படுவாளோ என்று பயம்! யுக்தாவைப் பற்றிய எந்த செய்தியும் சித்தார்த்தனுக்குத் தெரியாது!

''என்ன மம்மி? யுக்தாவுக்கு என்ன? சரவணனும் அவளும் நல்லாயிருக்காங்கதானே?''

''நல்லா கேட்டப்பா ஒரு கேள்வி! யுக்தாவுக்கு எங்கே திருமணம் நடந்தது! எவனோ ஒரு பாவி அவள் வாழ்க்கையை பாழாக்கிட்டான்! யார்ன்னு தெரியலையாம்! பாவம் இல்ல? அந்த நல்லப் பெண்ணை கடவுள் என் சோதிக்கறான்னே தெரியல, சித்து!'' அம்மா கவலையாய் சொல்ல...

சித்தார்த்தன் ரொம்பவே அதிர்ந்துவிட்டான்.

''இப்போ ஐந்து மாதம் முழுகாம இருக்கா, சித்து! அதை அழிச்சிடுன்னு சொன்னால்... அந்த பொண்ணு கேட்க மாட்டேங்கிறா...''

''மேம்... மேம்....'' என்று தவிப்புடன் இடைப்புகுந்த யுக்தாவை 'பேசாதே' என்பதுபோல அடக்கினாள். யாருக்கு அவளுடைய கேவலமான நிலை தெரியக் கூடாது என்று நினைத்தாளோ... அவனுக்கு மீனாட்சியம்மாள் வெளிச்சம் போட்டு விளக்கிக் கொண்டிருந்தாள்.

''பெத்துக்கப் போறேன்னு அடம் பண்ணிட்டு... அவமானப்பட்டு நிற்கறா! பார்க்கவே கஷ்டமா இருக்கு! எலும்பும், தோலுமா இருக்கா! தாய், தகப்பன் இல்லாத பொண்ணு! அது அந்த பாவிக்கு தெரியுமோ தெரியாதோ! இப்போ அவள் வாழ்க்கையே பூஜ்யமாயிடிச்சி!''



வெள்ளத்தில் சிக்கியவன் கணக்காய் முகம் வெளிறி, அலண்டுப் போனான், சித்தார்த்தன்.

யுக்தாமுகியை உடனே பார்க்க வேண்டும் போல வெறி வந்தது.

''என்ன சித்து மௌனமாயிட்டே! நம்ம யுக்தா பொண்ணை நினைச்சி கலங்கறீயா?''

உடனே இந்தியாவுக்கு திரும்ப வேண்டும் போலானது.

சித்தார்த்தன் ஒரு மாதமாய் ஆஸ்பத்திரியில் இருந்தான். மஞ்சள் காமாலையிலேயே அரக்கத்தனமான 'ஹெபபடீஸ் பீ' வந்து படுத்துவிட்டான். பெற்றவர்களிடம் சொன்னால் வருந்துவார்கள் என்று சொல்லாமலேயே மறைத்துவிட்டான்.

''மம்மி எனக்குகூட உடம்புக்கு மஞ்சள் காமாலை வந்து முடியாமல் போய் ஆஸ்பிட்டலில் இருந்து இப்போ தான் டிஸ்சார்ஜ் ஆகினேன்!'' என்று சொல்ல...

மீனாட்சி பதறிவிட்டாள்.

''ஏய் சித்து... என்னப்பா குண்டை தூக்கி போடற? மஞ்சள் காமாலையா?' ஹெபபடீஸ் பீ'யா? ஐய்யோ அது ஆபத்தான நோயாச்சே! க்ளியர் ஆச்சா? படிப்பும் வேண்டாம்... ஒண்ணும் வேண்டாம்! இந்தியா வர வேலையைப் பார்! அப்பா திட்டமாட்டார்! எத்தனை லட்சமா? போகட்டும் விடு! நீ நல்லபடியா வந்து சேர்! சீக்கிரமா வா! எனக்கு உள்ளமெல்லாம் பதறுதே! கவலை வேண்டாமா? எப்படிப்பா கவலைப்படாமல் இருப்பது? உன்னை திரும்ப பார்த்த பின்புதான் உயிரே வரும்! சீக்கிரமா வா, சித்து! அப்பாகிட்ட நானே பக்குவமா பேசறேன்!''

கண்களில் நீர் வழிய மீனாட்சி அமர்ந்துவிட்டாள்... சம்யுக்தாவின் கைதான் வேலை செய்ததே தவிர... மனம் முழுக்க டெலிபோன் பேச்சிலேயே இருந்தது.

'ஹெபடைடிஸ் பி மஞ்சள் காமாலை மோசமான நோய்... இது வந்தவர்களை காப்பாற்றுவது கடினமாம்... ஐயோ... ஐயோ... என் கொள்ளி நாக்கின் சாபம் பலித்து விட்டதா? அவன் ஊருக்கு வருகிறானா? அவன் முன் எப்படி நிற்பது? நடமாடுவது? பேசாமல் வேலையை விட்டு விட்டு கண்காணாத தூர தேசத்திற்குப் போய் விடலாமா? வெளியே போய் வயிற்றுப் பிள்ளையோடு பிழைக்க முடியுமா?'

யுக்தாமுகி கலங்கினாள்!

அன்று மாலையே பஞ்சவடி ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்றாள்.

'ஆஞ்சநேயா... என் சித்தார்த்தனைக் காப்பாற்று!'

'அவன் வரப்போகிறானாம்!'

'அவன் முன்பு நான் கூனிக்குறுகிப் போகாமல் தைரியத்தோடு இருக்கும் மனப்பான்மையை எனக்கு கொடு!'

அன்று ஞாயிற்றுக் கிழமை!

லைன்ஸ் கிளப் சார்பில் இரத்ததானம் முகாம் நடந்தது. புதுச்சேரியில்!

ஒரு அரசு பள்ளியில் ஏற்பாடு செய்து இருந்தனர்.

சாலையில் போவோர் வருவோருக்கு அறிவுறுத்தி... மனம் மாறி வருபவர்களை உள்ளே அழைத்து வந்து...



ரத்தம் எடுக்கும் பணிகளை யுக்தாமுகி, திவ்யா, புஷ்பா செய்தனர். இன்னும் சில ஆண்களும் பெண்களுமாய் தன்னார்வ ப்ரியர்கள் கூடி நின்றிருந்தனர்.

கண்தானம் செய்ய விரும்புவோரிடம் அப்ளிகேஷன் கொடுத்து, பூர்த்தி செய்து, கையெழுத்து வாங்கும் வேலையும் செய்தனர்.

அந்த பெரிய கார் வர... யுக்தா கையாட்டி நிறுத்தினாள்.

காரின் கண்ணாடி இறங்கி... அந்த அழகான விழிகள்.. அவளை கூர்மையாய் நோக்க... யுக்தாவும் திகைத்து நோக்க...

இரு ஜோடி விழிகளின் பார்வைகள் கலந்து சங்கமமாயின.

''அட... நம்ம சின்னவர்! நல்லாயிருக்கீங்களா, சார்? மேம்... நீங்க வரப்போறதா சொன்னாங்க! ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவீங்கன்னு சொல்லலை! ரத்த தானம் செய்யுங்க, சார் உங்களுக்கு புண்ணியம் உண்டாகட்டும்!'' திவ்யா படபடப்பாய் பேச....

ஓரக்கண்ணால் யுக்தாவை பார்த்தவனுக்கு சிலிர்த்தது!

வயிறு பெருத்து நின்றிருந்தவளைக் கண்டு பாசம் பொங்கியது.

'யுக்தாவின் வயிற்றுக்குள் இருப்பது 'என் உயிர்... என் ஜீவன்... என் பிள்ளை!' என்று கத்த வேண்டும் போல வெறிவந்தது.

ஆனால், அவள் முகத்தை நன்கு நோக்கும்போது... அவள் பேசிய பேச்சுக்களே காதில் ஒலித்தது.

அவளும் முகத்தை திருப்பிக் கொண்டு... என்னைக் கோழியாய் கோபத்தோடு நின்றாள்.

"என்ன சார் அதிசயமா பார்க்கறீங்க? நம்ம யுக்தாவை பங்க்ஷன்ல பாடி அசத்தினாலே... அந்த யுக்தாதான்!" புஷ்பா கூறி...

"ரத்தம் டொனேட் பண்ணுங்க சார்!" திவ்யா கேட்க...

"யெஸ்...!" என்றவன் காரை ஒரு ஓரமாய் நிறுத்தி விட்டு வர...

"ஏய்.. யுக்தா... சாரை அழைச்சிட்டுப்போடி!"

அவர்கள் கட்டளையிட... வேண்டா வெறுப்பாய் அவனை அழைத்துப் போனாள்.

பழைய திமிர், நக்கல், ஆணவம் இல்லாத சித்தார்த்தனைப் பார்க்க நிம்மதியாய் இருந்தாலும்...

'பாவம்! நோய் எத்தனை படுத்திவிட்டதோ? யாருமே இல்லாத அநாதையாய் எவ்வளவு கஷ்டப்பட்டானோ? ஆள் இளைத்து, கொஞ்சம் கறுத்துத்தானே தெரிகிறான்!' என்று மனதிற்குள் பரிதாபப்பட்டாள்.

"யுக்தா... முழுசா வைரஸ் அழிஞ்சதா, இல்லையான்னு தெரியலே! அதனால் ரத்ததானம் வேண்டாம்! என் கண்ணை வேண்டுமானால் தானமாய் எழுதித் தரேன்! அந்த அப்ளிகேஷனைக் கொடு!" என்றவன் வாங்கி... அதைப் படித்துப் பார்த்து.. கையெழுத்து இட்டு நீட்டினான்.

"நான் வரேன்!" என்று கிளம்பி கம்பீரமாய் போனவனைப் பார்த்தாள்! பார்த்துக் கொண்டே இருந்தாள்!



'யுக்தா... எப்படி இருக்கே? உடம்பு பரவாயில்லையா?' என்று கேட்க... அவன் நினைத்தான்.

'மஞ்சள் காமாலையாமே! பரவாயில்லையா?' என்று கேட்க... அவன் நினைத்தான்.

இருவரையும் கேட்கவிடாமல் எதுவோ தடுத்தது!

மீனாட்சியும், சிவநாதனும் அவனைக் கட்டிக் கொண்டு கதறினர்.

"டாடி... நான் இனி பாரீன் போகல, டாடி! எனக்கு படிப்பு வேணாம், டாடி! உங்களோடவே பிஸினெஸ் பார்த்துட்டு இங்கேயே இருந்துடறேன்! ப்ளீஸ் டாடி.. சம்மதிப்பீங்களா, டாடி?"

சித்தார்த்தன் கண்ணீரோடு கேட்க... சிவநாதன் அவனை அணைத்துக் கொண்டார்.

"மம்மி... உன் மடியில கொஞ்ச நேரம் படுத்துக்கட்டுமா? அனுமதிப்பீங்களா?"

"ஐயோ... என் சித்து குட்டி... என்னைக் கொல்லாதேடா!"

சித்தார்த்தனை இழுத்து மடியில் போட்டுக் கொண்டாள். நெற்றி, கன்னம் என அழுகையோடு முத்தமிட்டாள். சித்தார்த்தன் சின்னக் குழந்தையாய் மாறி... தாயைக் கட்டிக் கொண்டு விசும்பினான்.

பிரிந்தவர்கள் ஒன்று கூடியதாலா?

நோய் தந்த கடுமையான தாக்கத்தாலா?

அல்லது யுக்தாமுகிக்கு செய்த தீங்காலா?

எதனால் அவனுக்கு அவ்வளவு அழுகை வந்தது என்று இனம் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

யுக்தாவின் நீர் தளும்பி நின்ற விழிகளும், அழுகையை மென்று விழுங்கிய உதடுகளும், அந்த மேடிட்ட வயிறுமே... கண்முன் வந்து நின்று... அவனைக் கலங்க அடித்தது!

முதன் முதலாய் ஆசை கொண்டது, யுக்தாவை!

முதன் முதலாய் மணந்துக் கொள்ள நினைத்தது, யுக்தாவை!

முதல் முதலாய் அவள் மறுக்க, விருப்பம் கொண்டு கெடுத்தது, யுக்தாவை!

எல்லாமும் முதன்முதலாய் அனுபவித்த அனுபவமும்... புதுவித சித்திரவதையையும் செய்தவள், யுக்தாமுகி!

யுக்தாமுகி ஒரு தேவதை!

யுக்தாமுகி ஒரு புதையல்!

யுக்தாமுகி ஒரு போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்!

இவ்வளவு நல்லவளை... தன் கண்முன்னே.. காலம் கடந்து காட்டாமல்.. முதலிலேயே காட்டியிருந்தால்... கண்ணியமானவனாய் இருந்திருப்பான். அவன் விருப்பத்தை சொன்ன போது... அவளும் நம்பியிருப்பாள்!

'எத்தனை இனிமையாய் வாழ்க்கை போயிருக்கும்!'

சித்தார்த்தன் பெருமூச்சு விட்டான்!



[illegible] பிலினைல் பார்க்கச் சென்றான்.

[illegible] கற்றதோ... அத்தனையும் அவன் ஒருவனே [illegible] கொண்டான். சிவநாதன் அவனைக் கண்டு [illegible] போனான்.

[illegible]யான வேலை... அவன் கவலைக்கு மருந் [illegible] உதவியது.

[illegible]களின் புதுச்சேரி முத்தியால்பேட்டையில் உள்ள [illegible] திருமண மகாலை அநாதை ஆசிரமமாக்கினான்.

[illegible]லாலும், கனாமியாலும், வறுமையாலும் பாதிக்கப் [illegible]களை தேடிப் பிடித்து... அழைத்து வந்து இல் [illegible] சேர்த்தான்.

[illegible]டைய தொழிற்சாலையில் பணிபுரியும் தொழி [illegible]களின் ஊதியத்தினை உயர்த்தினான்.

அடிமட்ட ஊழியர்கள் வீட்டு விசேஷமானாலும் கலந்து கொண்டான்.

இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தினான்.

அவன் புத்திக்கு என்னவெல்லாம் நல்லதாய் படுகிறதோ... அதையெல்லாம் செய்தான்.

நேரம் கிடைக்கும் போது பள்ளிக்கு வருவான்.

யுக்தாமுகியைப் பார்ப்பான்.

அவள் ஏறெடுத்துப் பாராமல்.... முகத்தை திருப்பிக் கொண்டு சென்றுவிடுவாள்!

அவன் வலியச் சென்றாலும்... அவள் விலகிச் சென்றாள்!

'யுக்தாமுகி... யுக்தாமுகி.. என் கண்ணே!' என்று அவன் மனது கரையும். அந்த கரைதலுக்குப் பெயர்தானே காதலா?

காணும்போது வன்மம்! சுயமரியாதை! சுயகௌரவம்!

காணாத போது காதல்! ப்ரியம்! அன்பு நேசம்!

இரண்டு விதமான கலவையான எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டவனின் மனது முற்றிலும் மாறி... யுக்தாமுகியின் ஓரவிழிப் பார்வைக்கும், காதலுக்கும் தவமிருந்தான்!

அவளின் பார்வை ஒரு வரமாய் கிடைக்காதா? என ஏங்கினான், சித்தார்த்தன்!

# 16

புதுச்சேரி கடலோரமாய் மையங் கொண்டிருந்த புயலால்... புயல் மழையால் நிறைய சேதம்! நூற்றுக்கும் மேற்பட்டோர் இறப்பு! பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்களின் வீடிழந்து... பள்ளிகளிலும்... கல்லூரிகளிலும்... கல்யாண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டு... போர்க்கால நடவடிக்கையாய்... சேதாரத்திலிருந்து மக்களை காப்பாற்றியது!



ஊரெல்லாம் வெள்ளக் காடாய்... எங்கு நோக்கிலும் மழைநீர் தேங்கி நின்றது.

சித்தார்த் பள்ளிக்கு அருகே இருந்த கிராமமே கூரை பிழந்து, சுவர் விழுந்து, மக்கள் மழையில் திண்டாட... அனைவரையும் அழைத்து வரப்பட்டு... பள்ளியில் தங்க வைத்தனர்.

அவர்களில் பெரும்பாலோர்... சித்தார்த் வித்யாஸ்ரமத்தில் சமையல், பாத்திரம் கழுவுதல், பள்ளியைப் பெருக்குதல், தோட்ட வேலை, பண்ணை வேலை என்று அங்கேயே வேலை பார்ப்பவர்கள்.

அத்தனைப் பேரும் நடுத் தெருவில் நின்றபோது... மீனாட்சியிடம் அனுமதி பெற்று, அவர்களைத் தங்க வைத்தது, யுக்தாமுகிதான்!

அனைவருக்கும் நல்ல உணவு, துணிமணிகள், போர்வைகள் எனக் கிடைக்க நிம்மதியாய் இருந்தனர்.

சிவநாதனிடம் யுக்தாமுகி சொன்னாள்.

"சார்... இந்த மக்கள் எல்லோரும்.. வீடிழந்து... நாளைய சோற்றுக்கே அருகதையில்லாமல்... எதிர்காலம் இருட்டாய் மிரட்ட... பயந்து போய் உள்ளார்கள். இந்த கிராமத்தால் நம் பள்ளிக்கு பாதுகாப்பு! நம் பள்ளியில் உள்ள, பண்ணையில் உள்ள அடிமட்டத் தொழிலாளர்கள் அனைவரும்... இந்த கிராமத்திலிருந்துதான் வருகிறார்கள்! இவர்களுக்கு நீங்க ஏதாவது செய்யணும், சார்!"

"என்ன செய்யலாம்?"

"தப்பா எடுத்துக்கமாட்டீங்களா?" என்று தயங்க...

"இல்லே! சொல்?"

"எங்கோ இருந்து வந்து... விவேக் ஓபராய் என்ற இந்தி நடிகர்... சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் தேவனாம்பட்டிணம் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கார். இது உங்க மாநிலம்! இவர்கள் உங்களுடைய மக்கள்! இது கிராம மக்கள்... உங்களுக்காக... தன் வியர்வையை காணிக்கையாக்கி உழைச்சிட்டு இருக்காங்க... இவர்களுக்கு சின்னதா வெயில், மழை, புயல் எதுவும் தாக்காததுபோல வீடுகட்டிக் கொடுக்கக் கூடாதா? நீங்க நினைச்சா முடியும், சார்!" அன்போடு ஆணையிட்டாள்.

"முடியும்மா! ஆனால் நிர்வாகமெல்லாம் சித்தார்த்தன் கையில் இருக்கு! தொழிலை முன்னுக்கு கொண்டு வருவது, சித்தார்த்! வரவு, செலவு கணக்குப் பார்ப்பது, சித்தார்த்! பேங்க் பாலன்ஸ் ஷீட்டு மொத்தமும் அவன் பேரில் இருக்கு! இது அவன் மட்டுமே நினைச்சால்தான் முடியும், யுக்தா!"

சிவநாதன் கூற, மீனாட்சியும் இதை ஆமோதிக்க... இதையெல்லாம் வெளியே இருந்து கேட்டுக் கொண்டிருந்த சித்தார்த்... உள்ளே நுழைந்து சொன்னான்.

"எங்கிருந்தோ வந்த இந்தி நடிகன் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்யும்போது... நம்ம மக்களுக்கு, நம்ம கிராமத்துக்கு செய்ய.. என்னை நீங்க அனுமதி கேட்கணுமா? நல்ல ஸ்ட்ராங்கான வீடே கட்டிக் கொடுத்துடலாம்! யுக்தாமுகிக்கு சந்தோசம் தானே?"

சித்தார்த்தன் அவள் அழகு முகம் பார்த்து கேட்க...

மின்னல் மின்னி மறைந்தாற்போல சிறு புன்னகை பூத்து மறைந்தது.



"ரொம்ப நன்றி!" என்று கையெடுத்துக் கும்பிட்டு விட்டு... வேகமாய் வெளியேறி... சென்று மறைந்தாள்.

அவள் பெரிய மலையாய் நினைத்ததை... கடுகாய் நினைத்து சம்மதித்துவிட்டானே!

ஒரு வீடுகட்ட ஒரு லட்சம் என்றாலும்.. நூறு வீடு கட்ட ஒரு கோடி தேவையாச்சே! இவ்வளவு பெரிய தொகையை செய்ய அந்த இரும்பு இதயம் ஒத்துக் கொண்டதெப்படி? மீனாட்சியம்மாள் சொல்வது பொய்யில்லையோ! அப்போ பழைய சித்தார்த்தன் இவனில்லையோ! இத்தனை நல்லவனா இந்த சித்தார்த்தன்?

'சித்தார்த்தனுக்கு எல்லாம் காலம் கடந்து வரும் ஞானோதயம்! என்ன பயன்?' அலுத்துக் கொண்டாள்.

'யுக்தாமுகிக்கு இவ்வளவு பெரிய தீங்கிழைத்தது நான்தான்! அவள் வயிற்றில் வளர்வது என் பிள்ளை தான்!' என்று அம்மாவிடம் கூறலாமா... என்று நினைப்பான்.

'நீ இல்லடா! ஏன் அபாண்டமாய் பொய் சொல்றே?' என்று யுக்தாமுகி மறுத்துவிட்டால் என்ன செய்வது என்று சித்தார்த்தன். சொல்லாமல் இருந்துவிட்டான்.

இத்தனை கொடுமைக்காரனை அப்போது இருந்த புத்தியால், மானத்தைக் காக்க மணக்கக் கேட்டாள்.

ஆனால், இப்போது இருக்கும் வீராப்பு, ஒதுக்கம், முகத்திருப்பம், அலட்சியத்தைப் பார்த்தால் 'என்னை மணந்து கொள்வாயா?' என்று கேட்டால் 'மாட்டேன்' என்று சொல்லும் அளவு அவள் நடத்தை உள்ளதே!

'துளிகூட ஆசையில்லாதவளிடம்... என்னவென்று கெஞ்சி நிற்பது?'

'உன்னை நினைத்த மனதால்... இதுவரை வேறொருத்தியை நினைக்கவில்லையடி! என்றால் நம்புவாளா?

'உன்னைத் தொட்ட கையால்... வேறொருத்தியை இதுவரை தொட்டதில்லையடி! என்றால் விரும்புவாளா?

'என் மனம் முழுக்க யுக்தாமுகிதான்... என்றால் என்னை ஏற்றுக் கொள்வாளா?'

நாள் ஆக ஆக... அவன் இதயத்தில் 'காதல் பறவை' தன் அலகுகளால் குத்திக் காயப்படுத்தியது.

ஏதாவது காரணம் கற்பித்து... எத்தனை நேரமானாலும்... பள்ளிக்கு வந்து... தூரமாவது நின்று... அவளைக் கண்ட பிறகுதான்... வீட்டிற்குப் போய் படுப்பான்.

மீனாட்சியிடம் விரைவிலேயே கேட்டான்.

"அம்மா... யுக்தாமுகி ஒழுங்கான மெடிக்கல் செக்கப்புக்கு போறாளா?

"எல்லாம் செய்யறாப்பா!"

"கர்ப்பிணி பெண் நிறைய வேலை செய்யறாளே! அவ விடத்துக்கு ஒரு புது மிஸ்ஸைப் போட்டுட்டு... பிரசவம் வரை அவளுக்கு ஓய்வு கொடுக்கக் கூடாதா?"

"யுக்தா பொண்ணு சம்மதிக்கலேப்பா!"

"தாய், தகப்பனில்லாத பெண்! பாவம்! அதான் கேட்டேன்!

மீனாட்சிக்கு சந்தேகம் வராமல் பேசிச் சென்றான்.

* * *



...மழையால்... மழைநீர் தேங்கி நின்ற பகுதி ...தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதால்... ...குழு... அங்கே பாதிக்கப்பட்ட இடங் ...சென்று மருந்து, மாத்திரை கொடுத்துக் கொண் ...

"...போகாதடி! வயிற்றுப் பிள்ளைக்காரி! சட்டுன்னு ...தொற்றிக்கும்!' என்று எவ்வளவு கெஞ்சியும் ...வந்துவிட்டாள், யுக்தாமுகி!

...முடிந்து கிளம்ப மாலையாகிவிட்டது. ...இருட்டிக் கொண்டிருந்தது.

...ஸ்டாண்ட் செல்லுவதற்குள் யுக்தாமுகி தெப்ப ...நனைந்து விட்டாள்.

...ண்டும், குழியுமாய் இருந்த சாலையை மழையில் ...டப்பதற்குள்... பள்ளங்களில் காலை விட்டு... எத் ...னையோ முறை தடுமாறி... கீழே விழ இருந்தவள்... ...ளித்து பஸ்ஸை தவிர்த்து ஆட்டோ ஸ்டாண்ட் ...ருகே வருவதற்குள்... ஒரு ஆட்டோக்காரன் அவள் அருகில் வந்து விட்டான்.

அப்போது சித்தார்த்தனின் கார் வந்து, அருகில் ப்ரேக் போட்டு நிற்க...

"யுக்தாமுகி... ஏறிக்கொள்!" என்று கதவைத் திறந்து விட்டான்.

அந்த நேரத்திலும் முகத்தை கடுப்பாக்கி முறைத்தாள்.

"நான் ஆட்டோவில் போறேன்!" சீறினாள்.

''நான் ஸ்கூலுக்குத்தான் போறேன்! நனையவையோ... யுக்தா!'' உள்ளம் பதறிச் சொன்னான்.

''வம்பு பண்ணாதே, யுக்தா! இதுபோல இருக்கும் போது... உடம்பு சரியில்லாமல் போயிடும்! வா... வாம்மா வந்து உட்கார்! ஏய் ஆட்டோ... போடா... போ இடியட்!'' என்று அவனைப் பார்த்துக் கத்த...

''சரிங்கண்ணா!'' என்று ஆட்டோக்காரன் சென்றான்.

''உங்க வேலையைப் பாருங்க சார்! போங்க!'' பழைய யுக்தாவை ஞாபகப்படுத்தினாள்.

''நீ வாயால் சொன்னால் கேட்கமாட்டே! இரு வரேன்!'' என்று மழையில் இறங்கி அவளருகில் வர... எங்கே அவன் தன்னை தொட்டுத் தூக்கிவிடுவானோ என்று பயந்து... சட்டென்று ஏறி அமர்ந்தாள்.

கார் விரைந்தது.

ஒரு பூந்துவாலையை எடுத்து... தலையைத் துவட்டியவன்... அவளிடம் நீட்டினான்.

''துடைத்துக் கொள்! நனைஞ்சிட்டே! சுரம் வந்துடப் போகுது!''

அவன் நீட்டியத் துண்டை வாங்கி... அவன் மேலேயே வேகமாய் விட்டெறிந்தாள்.

'என் வாழ்க்கையையே அழிச்சிட்டு... என்ன அக்கறை வேண்டிக் கிடக்கு?'

''யுக்தா... துடைச்சிக்கோம்மா! குளிரப்போகுது.''

அவன் சொன்னதை அவள் காதில் வாங்கிக் கொள்ளாமல் வேறுபுறம் திரும்பிக் கொண்டாள்.



கண்ணனொடு ஏற்றி இருந்தாலும்... நனைந்துவிட்ட காரணத்தால்... குளிரில் நடுங்கினாள்.

பார்க்க பாவமாக இருந்தது.

இதுவே பழைய சித்தார்த்தனாய் இருந்திருந்தால்... அவள் மறுக்க மறுக்க... தலையைத் துவட்டி... அவள் குளிரில் நடுங்காமல் இருக்க... இழுத்து அணைத்துக் கொண்டிருப்பான்!

அந்த சித்தார்த்தன்... அவனுள் செத்துவிட்டான்!

அவளுக்கு பிடிக்காததைச் செய்ய... அவனால் முடியாது!

அந்த அளவு யுக்தாமுகியின் மேல் நேசம் கொண்டிருக்கிறான்! ஆனால் அதை அவளிடம் விளக்கத்தான் துணிவு வரவில்லை.

அவளுக்கும் இந்த புதுப்பிறவி எடுத்த சித்தார்த்தனை ரொம்பவே பிடிக்கும்.

'கொள்ளைப் பிரியம்!'

அவளின் சுய மரியாதை, சுயகௌரவம் தடுத்தது. ஆனாலும் கட்டறுந்து அவள் மனது அவனிடம் மெல்ல விரைந்தது. எங்கே சித்தார்த்தனின் அக்கறையில் மெழுகாய், உருகி, தன்னை காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்தே வீராப்பாய் இருந்தாள்.

'ஒரு முழம் மஞ்சள் கயிறு கொடுக்காதவனுக்கு... இவ்வளவு அக்கறை எதுக்கு?'

'என் மீது ப்ரியம் உள்ளவனாய் இருந்தால், மீனாட்சியம்மாளிடம் சொல்லியிருப்பானல்லவா?'

'கல் நெஞ்சன்!'

"உனக்கு செய்த தீங்காலோ என்னவோ நான் வெளிநாட்டில் இருக்கும் போது நோயால் அவதிப்பட்டுட்டேன், யுக்தா!"

அவன் வந்த இந்த மூன்று மாதத்தில் அவளை தனியே சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது இப்போதுதான்!

மனதில் இருந்ததை கொட்ட...

யுக்தாமுகியின் கண்கள் சட்டென்று உருகி நீரைக் கொட்டப் பார்த்தது.

கண்ணீரை மறைக்க தலை குனிந்து கொண்டாள்.

மறுநாள் பள்ளிக்கு வந்து அவள் சுகமாய் இருக்கிறாளா? என்று அறிந்த பிறகுதான் வேலைக்குச் சென்றான்.

அன்று விடுமுறை தினம்!

மதியம் தடபுடலாய் சமையல் செய்து கொண்டிருந்தாள், மீனாட்சி.

"பசிக்குது மம்மி! சமையல் ஆயிடிச்சா? என்ன விசேஷம்? இத்தனை அமர்க்களப்படுது, சமையலறை?" என்று கேட்டுக் கொண்டே... மீனாட்சியின் அருகில் போனான், சித்தார்த்தன்.

"விசேஷம்தான்! முக்கிய விருந்தாளி வராங்க!"

"யாரு மம்மி? என் அத்தையா?"

"ம்கூம்! வரட்டும்! நீயேப் பார்த்துச் தெரிஞ்சிக்கோ!"

"யார்ன்னு சொல்லாமல் ரொம்பந்தான் அலட்டறீங்களே! வந்த பிறகு நானே பார்த்துத் தெரிஞ்சிக்கிறேன்!



ஆனால் எனக்கு இப்போ பசிக்குது. மம்மி! சாப்பிடலாமா?"

"ம்கூம்! நாமெல்லாம் சேர்ந்து விருந்தாளியோடத்தான் சாப்பிடணும்!"

மீனாட்சி உறுதியாய் சொல்ல...

"ரொம்பத்தான் விருந்தாளி மேல பாசமோ?" என்று கூறிச் சிரித்தான்.

கொஞ்ச நேரத்தில் அழகாய்... அந்தப் பெரிய வயிற்றைத் தூக்கி கொண்டு யுக்தாமுகி வந்து நின்றாள்.

சித்தார்த்தனின் மனதில் பூமழைச் சாரல்!

அப்படியேக் குளிர்ந்துவிட்டான்.

'என் வீட்டிற்கு முக்கிய விருந்தாளியாய் அழைக்கப்பட்டது... என் உயிர் யுக்தாமுகியா?'

"வாம்மா...! எல்லாம் ரெடி! கைகழுவிட்டுச் சாப்பிடும்மா! ஏய் சித்து... என்னடா பார்க்கறே? பசிக்குதுன்னு அலைஞ்சீயே! வாயேன்டா!" என்று மீனாட்சி அழைக்க...

"எனக்கு வெளியே கொஞ்சம் வேலையிருக்கு, மம்மி! நான் வரேன்!"

சித்தார்த்தன், சொல்லிக் கொண்டே விறுவிறுவென்று வெளியே ஓடினான்.

'இந்த சித்தார்த்தனுக்கு நான் இங்கே வந்தது பிடிக்கவில்லையா? மீனாட்சியம்மாளிடம் உறவாடி... பழையதைச் சொல்லி... ஒரேயடியாய்... இந்த வீட்டிற்கு நிரந்தரமாய் வந்து விடுவேனோ என்ற பயமா? அந்த அளவு

மோசமான ஜென்மம் இல்லை சித்தார்த், நான்! ஒரு போதும் என்னையும், என் பிள்ளையையும் ஏற்றுக் கொ என்று கெஞ்சி நிற்கமாட்டேன்! உன் கையால் தாலி வேண்டும் என்று தாழ்ந்து நிற்கமாட்டேன்! இது சத் தியம்!"

'உனக்கு பிடித்தவனாய்... நல்லவனாய்... நீ மணந்து வாழ... நான் ஒரு நாளும் குறுக்கே நிற்கமாட்டேன்.'

சித்தார்த்தன் வருவதற்குள் கிளம்பிவிட்டால் நல்லது என்று அவசர அவசரமாய் சாப்பிட்டாள்.

"நான் கிளம்பறேன், மேம்! ரொம்ப நன்றி, மேம்! இந்த அநாதைக்கு இரக்கம் காட்டி... என் அம்மாவை உங் களில் காண்கிறேன், மேம்!" என்று கண்ணீர் சிந்திய வளை...

"நல்ல வெயில்! குறையட்டும்! என்ன அவசரம்? தூங்கு! மாலையில் போகலாம்!"

மீனாட்சி வலுக்கட்டாயமாய் அழைத்துக் கொண்டு போய்... சித்தார்த்தனின் எதிர் அறையில் படுக்க வைத் தாள்.

அந்த வீடு அவளுக்கு பாதுகாப்பு உணர்வைக் கொடுக்க... படுத்த உடனே துயில் கொண்டு விட்டாள்.

கொஞ்ச நேரத்தில் சித்தார்த்தன் கையில் பார்சலோடு வந்து சேர்ந்தான்.

அழகிய ஒரு பட்டுச் சேலை, இரண்டு கெட்டியான தங்க வளையல்கள், நெக்லஸ், செயின் என்று செட்டாய் எடுத்து வந்து மீனாட்சியிடம் நீட்டினான்.



"நம்மக் கடையைத் திறந்து எடுத்து வந்தேம்மா! டிசைன்ஸ் பிடிச்சிருக்கா?"

"சூப்பரா இருக்குடா! சித்து குட்டி எனக்குக்கூட தோண லைடா! ரொம்ப நன்றிடா! புடவை 'யுக்தா கலருக்கு பொருத்தமாய், அம்சமாய் இருக்கும்! உன் தேர்வு பிர மாதம்டா" என்று பாராட்டினாள்.

"நான் எடுத்து வந்தேன்னு சொல்லவேணாம்! என்னை அவளுக்கு அவ்வளவா பிடிக்காது, மம்மி!"

"ரொம்பக் கூச்சச் சுபாவம் உள்ளவள், யுக்தா! அதுக்காக உன்னைப் பிடிக்காதுன்னு எல்லாம் அர்த்தம் எடுத்துக்க வேண்டாம்! நீ உட்கார்ந்து சாப்பிடு!"

சித்தார்த்தன் பேருக்காய் சாப்பிட்டுவிட்டு மாடிக்குப் போனான்.

சன்னல் வழியே படுத்து உறங்கும் யுக்தாவையே... கால் மாற்றி கால் நின்று... ஆசையாசையாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளின் வயிற்றைப் பார்க்கும் போது இதயம் குழைந்து... உருகி... பாசம் பீறிட்டது!

'என் குழந்தை!' என்று உரிமை கொண்டாடத் தோன் றியது.

மீனாட்சியிடம் வந்தான்.

"மம்மி... பிரசவம் வரை யுக்தாவை இங்கேயேத் தங்கி விடச் சொல்லுங்களேன்! யாருமில்லாதவள்! பாவம்தானே? நீங்க அவள் இங்கே இருந்தால் நல்லாப் பார்த்துக்கு வீங்க! ஏதாவது ஒண்ணுன்னாலும் டாக்டரிடம் அழைத்துப்

போக வசதி! மாலையானால் உங்களோடே அழைச்சிட்டு ஏற்பாடு பண்ணுங்க, மம்மி!''

''யுக்தாம் பொண்ணு ஒத்துக்கமாட்டா, சித்து!''

''நீங்க சொல்ற விதமா சொன்னாலுமா? கேட்பாளுமா!'' என்று மீனாட்சியை சித்தார்த்தன் பேச்சில் மடக்க...

''கேக்கறேன், சித்து!'' தலையாட்டினாள்.

இரவு ஏழு, எட்டு, ஒன்பது என்று நேரம் போகப் போக யுக்தா எழுந்தபாடில்லை.

பாதுகாப்பும், இதமும் கிடைக்க... தன்னை மறந்து நீண்டநேரம் உறங்கியவள்... சட்டென்று விழிப்பு வந்து... மணி பார்க்கப் பதறிவிட்டாள்.

வேகமாய் படியிறங்கியவள்... படியிறங்கி முடிக்கும் இடம் வந்து... கால் தடுமாறி... விழப் போக...

சித்தார்த்தன் ஓடிவந்து, தாங்கிப் பிடித்து அணைக்க... யுக்தாமுகி உடலெல்லாம் பதற... அவனிடமிருந்து அவசரமாய் விடுபட்டாள்.

''ஸாரி... ஸாரிம்மா... நீ விழாமல் இருக்கத்தான் உன்னைத் தொட்டேன்! மத்தப்படி தப்பான எண்ணமெல்லாம் இல்லை!''

சித்தார்த்தன் மன்னிப்புக் கேட்க... ஒரு முறைப்போடு நகர்ந்து கொண்டவள்... மீனாட்சியைத் தேடிப் போனாள்.

''ஸாரி மேம்! ரொம்ப நேரமா தூங்கிட்டேன்! நான் வரேன்!''



''எங்கே ஓடறே? சாப்பிடு! காலையில நாமெல்லாம் சேர்ந்தாப் போகலாம்!''

''வேண்டாம், மேம்!'' மறுத்தாள்.

''சொன்னாக் கேளு, யுக்தா! நல்ல இருட்டு! எப்படிப் போவே?''

''நான் வேணும்ன்னால் கொண்டு போய் விட்டுட்டு வரேம்மா!''

சித்தார்த்தன் உதவ முன்வர...

''அதெல்லாம் வேண்டாம்! சாப்பிட்டுட்டு படு! காலையிலப் போகலாம்!''

சிவநாதன் கூற... மறுத்துப் பேசமுடியாமல்... அங்கேயேத் தங்கிவிட்டாள்.

''யுக்தாமுகி... நீ நிரந்தரமா இங்கேயேத் தங்கிவிடேன்! ப்ளீஸ்...!''

சித்தார்த்தன் மனதிற்குள் புலம்பினான், விடியவிடிய!

# 17

மறுநாள் எழுந்தவள் முன்பு சேலை, நகைகள் அடங்கியத் தட்டை நீட்டினாள், மீனாட்சி.

''பட்டா...? நான் அதை உடுத்துவதில்லையே, மேம்! ஆயிரம் பட்டுப் பூச்சிகளின் சமாதியில் கிடைக்கும்...

சந்தோசத்தை நான் விரும்பறதில்லையே, மேம்! இந்த நகைகளா? இவ்வளவு காஸ்ட்லியான நகைகளை எனக்கேவா தர்றீங்க. வேணாம், மேம்! உங்க தங்கமான மனசு வருத்தப்படக் கூடாது என்பதற்காக ஒன்றே ஒன்று மட்டும்... ப்ளீஸ் மேம்!" என்று கெஞ்சலோடு வளையல் ஒன்றை எடுக்க...

"ஒத்தையா வேணாம்மா! ஜோடியா எடுத்துக்கோ! வளையல்களைப் பிரிக்கக் கூடாது! என்ன பெண்ணம்மா நீ? என் மகளாய், அல்லது மருமகளாய் இருந்தாக் கொடுக்க மாட்டேனா? ம்?" என்று மீனாட்சி சிரிக்க...

யுக்தாமுகி வேதனையான புன்னகை ஒன்றை வீசினாள்.

சித்தார்த்தனுக்கு நகைகளை, புடவையை மறுத்தது ஒரு பக்கம் மனக்கஷ்டமாய் இருந்தாலும்...

மறுபக்கம் 'ஆயிரம் பட்டுப் பூச்சிகளின் சமாதியில் விளைந்த பட்டை கட்டுவதில்லை' என்று கூறிய கொள்கையைப் பிடித்திருந்தது.

"ஓரறிவுப்படைத்த பூச்சிகளின் வாழ்க்கைக்கெல்லாம் இரங்கும் தன்மைக் கொண்ட... தன்னிகரற்ற தேவதையை இப்படிக் காட்டுமிராண்டித் தனமாய் தண்டித்துவிட்டேனே! சிறகு முறித்து சின்னாப்பின்னப்படுத்திவிட்டேனே..."

"துணைப்பறவை இறந்துப் போனால் உயிர்வாழாத அன்றில் பறவையின் நேசத்தைக் கேட்டிருந்தும்..."

"ஆண் மான் நீரை அருந்தும் என்று பெண் மானும்... பெண்மான் நீரை அருந்தி தாகத்தைத் தீர்த்துக்



கொள்ளட்டும் என்று ஆண்மானும்... நீர் குட்டையில் நீரை அருந்தாமல் இருந்த காதல் கதைகளைப் படித்திருந்தும்...'

'கருவுற்றிருக்கும் தனது இணை உயிரியோடு புணர்தலை விரும்பாத விலங்கினங்களும் என அறிந்திருந்தும்...'

'ச்சே... மிருகங்களுக்கு இருக்கும் பண்புகூட எனக்கில்லாமல் போனதே!'

'பறவைகளைக் கண்டு, விலங்குகளைக் கண்டுக் கூட கற்றலைத் தெரிந்துக் கொள்ளாத மூடனாய், முட்டாளாய் இருந்துவிட்டேனே!'

'ஆறறிவை இறைவன் எனக்குக் கொடுத்திருந்தும்... ஐந்தறிவுப் படைத்த ஜீவன்களை விட நாம் தாழ்ந்து போனேனே!'

'யாருமே இல்லாமல் இருக்கும் அநாதைப் பெண்ணை கருவறுத்து விட்டேனே! ச்சே மனிதனா நான்!'

'இதுப்போல நேரத்தில் ஆசைப்பட்டதை உடனே அனுபவிக்க வேண்டும்! ஆசைப்பட்டு நிறைவேறாமல் போனால் கை, கால்கள் வீங்கிடும்!'

மீனாட்சி அவனுக்குச் சொல்லியிருக்கிறாள்.

'எத்தனை ஆசைகளை தன்னுள் போட்டு புதைத்திருக்கிறாளோ! ஆசைப்பட்டதை அடைய முடியாமல் ஏக்கம் கொண்டு தவிக்கிறாளோ... என் கண்மணி!'

சித்தார்த்தன் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியங்களும் யுக்தாவிற்கு மீனாட்சி மூலம் சென்றடையும்!

சந்தோசத்தை நான் விரும்பறதில்லையே, மேம்! இந்த நகைகளா? இவ்வளவு காஸ்ட்லியான நகைகளை எனக்கேவா தர்றீங்க. வேணாம், மேம்! உங்க தங்கமான மனசு வருத்தப்படக் கூடாது என்பதற்காக ஒன்றே ஒன்று மட்டும்... ப்ளீஸ் மேம்!'' என்று கெஞ்சலோடு வளையல் ஒன்றை எடுக்க...

''ஒத்தையா வேணாம்மா! ஜோடியா எடுத்துக்கோ! வளையல்களைப் பிரிக்கக் கூடாது! என்ன பெண்ணம்மா நீ? என் மகளாய், அல்லது மருமகளாய் இருந்தாக் கொடுக்க மாட்டேனா? ம்?'' என்று மீனாட்சி சிரிக்க...

யுக்தாமுகி வேதனையான புன்னகை ஒன்றை வீசினாள்.

சித்தார்த்தனுக்கு நகைகளை, புடவையை மறுத்தது ஒரு பக்கம் மனக்கஷ்டமாய் இருந்தாலும்...

மறுபக்கம் 'ஆயிரம் பட்டுப் பூச்சிகளின் சமாதியில் விளைந்த பட்டை கட்டுவதில்லை' என்று கூறிய கொள்கையைப் பிடித்திருந்தது.

''ஓரறிவுப்படைத்த பூச்சிகளின் வாழ்க்கைக்கெல்லாம் இரங்கும், தன்மைக் கொண்ட.... தன்னிகரற்ற தேவதையை இப்படிக் காட்டுமிராண்டித் தனமாய் தண்டித்து விட்டேனே! சிறகு முறித்து சின்னாப்பின்னப்படுத்திவிட்டேனே...''

''துணைப்பறவை இறந்துப் போனால் உயிர்வாழாத அன்றில் பறவையின் நேசத்தைக் கேட்டிருந்தும்...''

'ஆண் மான் நீரை அருந்தும் என்று பெண் மானும்... பெண்மான் நீரை அருந்தி தாகத்தைத் தீர்த்துக்



கொள்ளட்டும் என்று ஆண்மானும்... நீர் குட்டையில் நீரை அருந்தாமல் இருந்த காதல் கதைகளைப் படித்திருந்தும்...'

' கருவுற்றிருக்கும் தனது இணை உயிரியோடு புணர்தலை விரும்பாத விலங்கினங்களும் என அறிந்திருந்தும்...'

'ச்சே... மிருகங்களுக்கு இருக்கும் பண்புகூட எனக்கில்லாமல் போனதே!'

'பறவைகளைக் கண்டு, விலங்குகளைக் கண்டுக் கூட கற்றலைத் தெரிந்துக் கொள்ளாத மூடனாய், முட்டாளாய் இருந்துவிட்டேனே!'

'ஆறறிவை இறைவன் எனக்குக் கொடுத்திருந்தும்.... ஐந்தறிவுப் படைத்த ஜீவன்களை விட தாம் தாழ்ந்துப் போனேனே!'

'யாருமே இல்லாமல் இருக்கும் அநாதைப் பெண்ணை கருவறுத்து விட்டேனே! ச்சே மனிதனா நான்!'

'இதுப்போல நோத்தில் ஆசைப்பட்டதை உடனே அனுபவிக்க வேண்டும்! ஆசைப்பட்டு நிறைவேறாமல் போனால் கை, கால்கள் வீங்கிடும்!'

மீனாட்சி அவனுக்குச் சொல்லியிருக்கிறாள்.

'எத்தனை ஆசைகளை தன்னுள் போட்டு புதைத்திருக்கிறாளோ! ஆசைப்பட்டதை அடைய முடியாமல் ஏக்கம் கொண்டு தவிக்கிறாளோ... என் கண்மணி!'

சித்தார்த்தன் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியங்களும் யுக்தாவிற்கு மீனாட்சி மூலம் சென்றடையும்!

சிவநாதன் தன் தாய் சாரதா பெயரில் ட்ரஸ்ட் நிறுவி பல நல்லத்தைச் செய்தார் என்றால்...

சித்தார்த்தன் தனது தாய் மீனாட்சிப் பெயரில் ஒரு ட்ரஸ்டை நிறுவி... மருத்துவ முகாமும், இல்லாத ஏழை களின் இருதயச் சிகிச்சைக்குப் பணம் கொடுத்தும்...

ஏழைப் பெண்களின் திருமணச் செலவிற்கு பணம் கொடுத்தும் உதவினான்.

தொழிலிலும் நல்ல வெற்றியைக் கண்டான்.

அதில் கிடைத்த லாபங்களை ஏழைகளுக்காய் செல விட்டான்! சேவை செய்தான்!

'சின்னவர்... சின்னவர்!' என்று புதுச்சேரி நகரமே கொண் டாடியது, அவனை!

யுக்தாமுகியோ...

'கெட்டவனாய் இருந்தபோதே தன்னை ஏற்றுக் கொள்ளாதவன்... நல்லவனாய் மாறிய பிறகு திரும்பிப் பார்ப்பானா? ஏற்றுக் கொள்ளத்தான் போகிறானா?'

'என் எதிர்காலத் தூண்கள் என் குழந்தைகள் தான்!'

யுக்தாமுகி அவன் பார்க்காதச் சமயம் பார்த்து... அவனைக் கண்களில் நிரப்பிக் கொள்வாள்!

ஆசையாசையாய் பார்த்து... அவளிதயத்தில் ஆழப் பதிந்து கொள்வாள்!

அவன் நோக்கும்போது... அவள் நிலம் நோக்கு வாள்!

அல்லது வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொள்வாள்! சித்தார்த்தன் வலியப்பேசப் போனால்... ஓடி ஒளிந்து



கொள்வாள்! சித்தார்த்தனும் அப்படியேத்தான் செய் வான்!

இருவர் மனதிலும்... காதலும்... நேசமும், பிரியமும், ஆசையும், விருப்பமும், பாசமும் கடலளவு உள்ளது.

இருவரும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாததால் தெரியவில்லை!

இருவருக்கும், காதலை வெளிப்படுத்திக் கொள்ள முடியாமல்... உள்ளிருந்து எதுவோ... தடுத்து... அணைப் போட்டது!

'ஈகோ வா...?'

## 18

ஒரு அழகிய, குளிர்ச்சியான, தென்றல் தட்டித் தாலாட்டுப் பாடிய... மாலைப் பொழுதில்...

யுக்தாமுகி வலியெடுத்து அலறினாள்.

மீனாட்சியும், திவ்யாவும் காரில் அவளை அள்ளிப் போட்டுக் கொண்டு ஸ்கூலிலிருந்து புதுச்சேரி பயண மானார்கள்.

"ஜிப்மர் போலாம், மேம்! வேற எங்கேயும் வேண்டாம்! அத்தனை செலவு செய்ய எனக்கு யார் இருக்கா? தாயா? தகப்பனா...?"

யுக்தாமுகி அழுதாள்.

இதுவரைச் சேமிப்பு என்று வைத்துக் கொண்டதில்லை. ஒவ்வொரு மாசமும் வாங்கும் சம்பளத்தை எய்ட்ஸ் நோயாளிகளின் மருத்துவச் செலவுக்கும், தொழு நோயாளிகளையும் கண்டறிந்து அத்தனையும் வாரி வாரி வழங்கிவிட்ட வள்ளல், அவள்!

"செலவைப் பற்றி உனக்கேன் கவலை? எத்தனை செலவானாலும் மலர்விழிக்கிட்டத்தான் போகணும்! அவளுக்குத்தான் உன் ஹெல்த் கண்டிசன் தெரியும்!" மீனாட்சி அவளை அடக்க..

"வேணாம், மேம்! ப்ளீஸ் மேம்!" என்று யுக்தா கெஞ்சிக் கொண்டிருக்க...

அந்த நேரம் பார்த்து சித்தார்த்தனிடமிருந்து போன் வந்தது.

"மம்மி... அவசரம்! வேலை விஷயமா... நான் மும்பை போறேன்! நான் போயிட்டு வரவா..." என்று கேட்க...

"எப்பா சித்தார்த்தா... இந்த யுக்தாப் பெண் வலியெடுத்து துடிக்கிறா? ஆஸ்பிட்டலுக்கு அழைச்சிட்டு வந்துட்டு இருக்கேன்! ஜிப்மர் போங்கன்னு அடம்பிடிக்கிறா! தனியார் ஆஸ்பத்திரின்னா செலவாகும்! அவ்வளவு பணம் என்கிட்ட இல்லேன்னு அழறா! உனக்கு நான் செய்யறேன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறா! என்ன செய்ய?"

யுக்தாமுகியின் அலறல் சத்தம் போனில் கேட்க...

சித்தார்த்தன் துடித்துப் போனான்.



அவன் உள்ளம் உதற... பயம் வந்தது.

"மம்மி... மம்மி... அவ சொல்றான்னு கேக்காதீங்க! மலர்விழி கிட்டத்தானே காட்டறீங்க? அவள் என் க்ளாஸ்மெட்டும்கூட! நல்லக் கைராசி! அவள் பேச்சைக் கேட்காதீங்க! நானும் அங்கே வரேன்!"

"சித்து... உனக்கு ஏன் வீண் சிரமம்? நீ மும்பை போறதைத் தள்ளிப் போடவேண்டாம்! நீ கிளம்பு! அப்பாவை மட்டும் அனுப்புப் போதும்!"

சட்டென்று சொன்னான்.

"மம்மி... எனக்கும் கொஞ்சம் டீவரிஸ்ஸா இருக்கு! என்னால் மும்பை வரை போய் வரமுடியுமான்னு சந்தேகம்...! நம்ம மேனேஜரை அனுப்பிடறேன்! செய்யவா?"

"சரிப்பா!" என்று கூறினாள், மீனாட்சி.

அவர்களுக்கு முன் ஆஸ்பத்திரியில் இருந்தான்.

யுக்தாமுகி, திவ்யா, மீனாட்சி வந்த கார் வர அருகில் ஓடி வந்தான், சித்தார்த்தன்.

கண்ணீர் மல்க அலறித் துடித்துக் கொண்டிருந்த யுக்தாமுகி... சித்தார்த்தனைக் காணவும்...

வெட்கி, தலைகுனிந்து... அழுகையை அடக்கினாள். உதட்டைப் பல்பதிய அழுத்திக் கடித்து... கைவிரல்களை இறுக்கி... வலியை அடக்கினாள்.

யுக்தாமுகியின் உதட்டில் இருந்து இரத்தம் வருவத்தைக் கண்ட சித்தார்த்தன்,

"ஏய்... ஏய்... ஏன்? என்ன? ஐய்யோ ரத்தம்!" என்று கத்தி... கர்ச்சீப் எடுத்து உதடு துடைக்கப் போக...

"வேண்டாம்!" என்று அலறி நகர்ந்தாள்.

"சித்து... உன்னைப் பார்த்து சங்கோஜப்படறா! வெட்கப்படறா! நீ தூரப்போ...!"

மீனாட்சிக் கூற... நகர்ந்தான்.

அதற்குள் டாக்டர் வர... பிரசவ அறைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

அவள் அலறலும், கத்தலும், கதறலும், துடிப்பும் அவன் நெஞ்சைப் பிசைந்தது! அவளின் கதறல் இதயத்தை கோடாரியாய் வெட்டிப் போட்டது!

சித்தார்த்தன் வெளிக் காட்டிக் கொள்ளமுடியாமல் ஊமையாய் உள்ளுக்குள் சத்தம் இன்றி அழுதான்.

'யுக்தாம்மா... பயப்படாதேடா! உனக்கு நான் இருக்கேன். யுக்தா கண்ணே!' என்று கூறமுடியாத நிலையைக் கண்டு நொந்துப் போனான்.

அதற்குள் சிவநாதனும் செய்திப் போய் வந்துவிட்டார்.

பள்ளியில் பணிபுரியும் மிஸ்ஸாய் இருக்கும்போதே இந்த கவனிப்பு என்றால்.. இதுவே தன் மகனின் பிள்ளையைச் சுமப்பவள் என்று தெரிந்தால்... என்ன ஆர்ப்பாட்டம் செய்வார்கள், இந்த மீனாட்சியும், சிவநாதனும்!

மலர்விழி வெளியே வந்தாள்.

"ஏய் சித்தார்த் ஹவ் ஆர் யூ டா?"

"ஓ... பைன், மலர்! யுக்தாமுகி..."

"பயப்படும்படி இல்லே! ஆனால் லேட் நைட் ஆகும்!"

மீனாட்சியோடு சிவநாதன் இருக்கிறேன் என்று கூற...



"சரி சித்து... நீ கிளம்பு!" என்று மீனாட்சி கூற...

இதற்கு மேல் தான் இங்கே இருந்தால் தாய்க்கும், தகப்பனுக்கும் சந்தேகம் எழலாம் என்று மனசே இல்லாமல் கிளம்பினான்.

இரவு சாப்பிடவில்லை!

குளித்துவிட்டு பூஜையறையில் அமர்ந்துவிட்டான்.

'கடவுளே... என் யுக்தாம்மாவை நல்லபடியாக காப்பாற்று!' என்று விடிய விடிய பாராயணம் செய்தான்.

விடியற் காலையில் குழந்தைப் பிறந்தது.

ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாய் இரட்டைப் பிள்ளைகள்!

மீனாட்சி செய்தி சொல்ல... பறந்து வந்துவிட்டான்.

சிவநாதன் மடியில் ஒரு குழந்தையும்... மீனாட்சி மடியில் ஒரு குழந்தையும் இருக்க..

சித்தார்த்தன் புரியாமல் பார்த்தான்.

"ரெட்டைக் குழந்தைங்க, சித்து! உனக்கு தெரியாதா? ஸ்கேன் பண்ணிப் பார்த்த விஷயத்தை உன்கிட்ட நான் சொல்லலையா?"

"ம்கூம்...!" என்று தலையாட்டினான்.

சித்தார்த்தன் நெஞ்சு துள்ளிக் குதியாட்டம் போட்டது.

இரண்டு குழந்தைகளும்... ரோஜாக்குவியலாய் காட்சியளிக்க... மகிழ்ச்சியோடு பார்த்தான்.

பெண் குழந்தை அச்சு அசல் யுக்தாமுகிப் போல் இருந்தாள்.

செப்பு உதடுகளும், திராட்சைக் கண்களும், குட்டி கையும், காதும் முளைத்த ரோஜாவைப்... [illegible] காண இன்பம் பெருகியது.

அப்படியே இரண்டையும் அள்ளி அணைத்த... "என் குழந்தை... என் சொர்க்கம்... என் நிம்மதி!" என்று கத்த வேண்டும் போல தாகம் எழுந்தது.

குழந்தைகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து ஆனந்தப்பட்டான்.

யுக்தாமுகி மயக்கம் தெளிந்து கண்விழிக்க... அவளைத் தீராதக் காதலுடன் ஆசையாசையாய் விழிகளால் [illegible] சிக்க...

அவள் கண்ணீரோடு கண்களை மூடிக் கொண்டாள்.

வேல் எடுத்து இதயத்தில் பாய்ச்சிய கணக்காய்... சித்தார்த்தனுக்கு வலித்தது!

நிலவாய் ஜொலித்த அவளுடைய முகம்... அவனைக் கண்டதும் மேகம் சூழ்ந்தாற்போல இருட்டி விட்டது.

யுக்தாமுகியை மீனாட்சி, திவ்யா என மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்.

தினமும் மாலையோ, இரவோ ஆஸ்பிட்டலில் அம்மாவும், திவ்யாவும் இல்லாத நேரம் தெரிந்து கொண்டு வந்தான்!

பெரும்பாலும் சித்தார்த்தன் வரும் நேரம் யுக்தாமுகி உறங்கிக் கொண்டிருப்பாள்.

அப்படித்தான் ஒருநாள் வந்தபோது... யுக்தாமுகி முழித்துக் கொண்டிருந்தாள்.



[illegible]

"யுக்தா... நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்" என்று தயக்கத்துடன் கேட்க...

"என்கிட்டப் பேச எதுவுமே இல்லை! எனக்கு உங்களைப் பார்க்கவே பிடிக்கலை! பேசவே பிடிக்கலை! நீங்க இப்படி தினமும், யாருமில்லாதப்ப... திருட்டை... திருட்டுத்தனமா வந்து பார்க்கறது, எனக்கும் பிடிக்கலை!"

அவன் முகம் சோர்ந்துவிட...

"எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதீங்க! எனக்கு எல்லாமேத் தெரியும்! இனி வர வேலை வச்சிக்காதீங்க!"

"யுக்தா... நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

யுக்தாமுகி கோபத்தோடு கத்தினாள்.

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்! எனக்கு நன்மைச் செய்யணும்னு எண்ணமிருந்தா... முதல்ல என்னைப் பார்க்க வராதீங்க! நானும் இங்கே இருந்து ஒழியலாம்னு பார்க்கிறேன்! எப்போ அதுக்கான நேரம் காலம் கூடி வருமோ! போயிடுங்க! என் கண்முன்னாடி நிற்காதீங்க! எனக்கு உங்களைக் காணும் ஒவ்வொரு நொடியும்... எனக்கு உயிரேப் போயிடுது!"

அதற்குமேல் அங்கிருப்பது அவமானமாய் தெரிய... பட்டென்று வெளியேறிவிட்டான்.

அவன் போனப் பின்பு விக்கி விக்கி.. விம்மி விம்மி அழுதாள்!

# 19

குழந்தைகள் இரண்டும் அழகாய் 'கொழுக் மொழுக் கென்று வளர்ந்தார்கள். குழந்தைகளும் அவனைப் போலவே இருந்தாலும்... அந்த ஆண் குழந்தையின் கண்களும், அழுத்தமான உதடுகளும், கன்னக்குழியும் அப்படியே சித்தார்த்தனுடையதாய் இருந்தது.

பெண் குழந்தைக்கு மீனா என்றும்...

ஆண் குழந்தைக்கு சிவா என்றும் பெயரிட்டாள்.

மீனாட்சியும், சிவநாதனும் யுக்தாமுகியின் நன்றி உணர்ச்சியைக் கண்டு பெருமைப்பட்டனர்.

மாலை ஐந்திலிருந்து ஏழு, எட்டுவரை குழந்தைகளைக் கொஞ்சி விளையாடிவிட்டுத்தான் வீட்டுக்குப் போவாள். மீனாட்சி, அந்த நேரத்தைத் தெரிந்துக் கொண்டு வேலையெல்லாம் முடித்தவுடன்... சித்தார்த்தன் அம்மாவை அழைத்துக் செல்லும் சாக்கில் வந்துவிடுவான்.

குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சுவான்.

மாலையானால் அவனும் வந்துவிட்டால்... அவர்களிடம் விட்டுவிட்டு ஹாஸ்டல் குழந்தைகளின் ஸ்டடி ஹாலுக்கு சென்று விடுவாள் யுக்தாமுகி;

குழந்தைகள் கவிழ்ந்து, தவழும் பருவத்தில் சித்தார்த்தனைக் கண்டுவிட்டால் கட்டுக்கடங்காமல் தாவி ஓடி வருவார்கள்.



''என்னடா சொக்குப்பொடி போட்டே? ரெண்டுமே உன் வரவை எதிர்பார்த்து ஏங்குது! வந்துட்டா துள்ளிட்டு உன்னிடம் வந்துடுது! பின்னாடி நான் ஒருத்தி இருப்பதையே கண்டுக்க மாட்டேங்குதுங்க!'' சித்தார்த்தனை மீனாட்சி சீண்டுவாள்.

''சித்து... குழந்தைகள் எவ்வளவு சந்தோசம்... மகிழ்ச்சின்னு தெரிஞ்சிட்டையா? நீயும் காலாகாலத்தில் கல்யாணம் பண்ணிட்டால்... உனக்கும் இப்படி அழகழகான குழந்தைகள் பிறக்கும்டா! உன் குழந்தையையும் தூக்கி கொஞ்சணும்ன்னு மனசு ஏங்குதுடா! என் ஆசையைப் புரிஞ்சிக்கோ, சித்து குட்டி!''

ஒருநாள் கண்களில் நீர் மின்ன மீனாட்சிக் கேட்க.

'இது உன் பேரப்பிள்ளைங்கதான், மம்மி!' என்று சொல்ல முடியாத துக்கத்தை எண்ணி வேதனையுற்றான்.

ஆட்களற்ற இடத்திற்குத் தூக்கிச் சென்று ''அப்பா... அப்பா சொல்லு? அப்பா சொல்லுடா, செல்லம்!'' என்று கற்றுத் தருவான்.

குழந்தைகள் 'ப்பா... ப்பா' என்று சொல்லும் போது... சந்தோச மிகுதியில் கண்கள் கலங்க இழுத்து அணைத்து முத்தமிடுவான்!

ஒருநாள் குழந்தை மீனா கிளம்பும் சமயம் சித்தார்த்தனைக் கட்டிக் கொண்டு... யுக்தாமுகியிடம் போகாமல் அழ...

மீனாட்சிதான் சொன்னாள்.

''அவனைப் பிரிய குழந்தை கஷ்டப்படறா? எனக்கும் ஆசையா இருக்கு! வீட்டுக்குத் தூக்கிட்டுப் போய் நாளை கொண்டு வரேம்மா!''

"உனக்கு என்ன சிரமம்! இப்பொழுதே [illegible] டீங்களா!"

"அப்படி அழுதால் எந்த நேரமா இருந்தாலும் [illegible] விட்டு சொல்லுங்க மேடம்!" என்று கூறி எடுத்துச் [illegible] னர்.

சித்தார்த்தன் வந்தால் 'பபா.. பபா..' என்று தாவுவதும் [illegible] அவனோடு ஒட்டிக் கொள்வதும்... அவன் [illegible] தானே அவனுக்கு ஒரு கல்யாணம் நடந்தது [illegible] வந்தால் என்ன சந்தோசத்திற்கு இடமாகலாம்! [illegible] முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இந்த [illegible] கண்காணாத தூரத்திற்கு சென்றுவிட வேண்டும் என்று எண்ணினாள், முக்தாமுகி.

வயிறு முட்டப் புட்டிப் பால் குடித்துவிட்டு, அடம் [illegible] பாலை படித்துவிட்டது. சித்தார்த்தன் தன் நெஞ்சில் [illegible] போட்டு தட்டித் தாலாட்ட... அந்த நெஞ்சு தந்த [illegible] யிலேயே சுகமாய் உறங்கிப் போயிற்று.

'குழந்தைகளும், முக்தாமுகியும் நிரந்தரமாய் [illegible] தேசிய, [illegible] இருந்துவிட்டால் எத்தனை [illegible] முக்தாமுகியிடம் பேச வேண்டும்! அவள் ஒத்துக் [illegible] வாளா? இப்போது உள்ள முகத்திருப்பம், முறைப்பு [illegible] அலட்சியம் எல்லாம் அவனுக்கு பயத்தைக் கொடுத்தது.

'அம்மா, அப்பாவிடம் உண்மையை விளக்கி... [illegible] டாயாய் முக்தாவை மணக்கத்தான் வேண்டும்! அவளை [illegible] யும், குழந்தைகளையும் பிரிந்து... நினைத்து நினைத்து வேதனைப்பட்டு இன்னும் கொஞ்ச நாட்களில் நெஞ்சே வெடித்து சிதறினாலும் சிதறலாம்' என்று விடிய விடிய உறங்காமல் நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு விடியற் காலையில் உறக்கம் வந்தது.



முக்தாமுகியோடு கைக் கோர்த்து இன்பமாய் வாழ்வது போல கனவு வந்தது.

அவன் கனவு பொய்க்கப் போகிறது எனத் தெரியாமல்!



# 20

நான்கு நாட்கள் கழித்து... சித்தார்த்தன் உடம்பு முடியாமல் போய்... ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனான்.

அன்று மீனாட்சி பத்து மணியாகியும் வராமல் போக, முக்தாமுகி போன் செய்தாள்.

சித்தார்த்தன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதைக் கூற...

முக்தாமுகி இடிவிழுந்தக் கணக்காய் கலங்கிவிட்டாள். கண்களில் அவளைக் கேளாமலேயே நீரருவி உற்பத்தியாகி... கன்னத்து சமவெளியில் பாய்ந்தோடியது.

"அம்மா முக்தா..... என்னால முடியலையே! என் பிள்ளை கிழிந்த நாராய் கிடக்கானே! கண்கொண்டு பார்க்க முடியலையே! எனக்கு பயமா இருக்கும்மா! என்னென்னவோ செக் பண்றாங்கம்மா! இன்னதுன்னு தெரியலே! என்னால் ஸ்கூலுக்கெல்லாம் வரமுடியாது! பிரின்சியை பார்த்துக்கச் சொல்லு நீ வரியாம்மா?" என்று அழ...

"வரேன்... கண்டிப்பா வரேன்... மேம்!" என்று சொன்னாள்.

பிரின்ஸ்பாலிடம் விளக்கிவிட்டு.. குழந்தைகளை நம்பிக்கையான ஆயாவிடம் விட்டுவிட்டு... ஆஸ்பத்திரிக்கு வந்தாள்.

மீனாட்சி ஓடிவந்து, அணைத்து கதறிவிட்டாள்.

யுக்தாமுகி அழுகையை அடக்க சிரமப்பட்டாள். சித்தார்த்தனுக்காய் உள்ளுக்குள்ளே அழுதாள். கத்தினாள், கதறினாள். விம்மினாள். வெடித்தாள்.

டாக்டர் அழைக்க மீனாட்சி, சிவநாதனோடு... அவளும் உள்ளேச் சென்றாள்.

"என் பையனுக்கு என்ன டாக்டர்? "சிவநாதன் கலங்கியவாறு கேட்க...

"ஸாரி... ஸாரி.... இந்த விஷயத்தைச் சொல்ல வருத்தமா இருக்கு! ஆனாலும் சொல்லித்தான் ஆகணும்!" என்று டாக்டர் பீடிகைப் போட... மூவரும் அதிர்ந்து விட்டனர்.

"உங்க மகனோட ரெண்டு கிட்னியும் பழுதாகி இருக்கு!"

"ஐய்யோ... " அலறினாள், மீனாட்சி.

"தெய்வமே..." சிவநாதன் தலையில் கைவைத்துக் கொண்டார். யுக்தாமுகி நொறுங்கிவிட்டாள்.

"எப்படி...? எப்படி...? ஏன் டாக்டர்?" என்று மீனாட்சி கேட்க...

"ஹெபபட்டீஸ் பீ மஞ்சள் காமாலை வந்ததில்லையா? அதான் காரணம்! ரொம்ப மோசமான நோய்! அது வந்து பிழைத்தவர்கள் அரிது! அல்லது இப்படி மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்திட்டுப் போயிடும்!"



"அது வந்து வருஷத்துக்கு மேலாகுதே, டாக்டர்! க்யூர் ஆயிடிச்சே, டாக்டர்!"

"அப்போதாம்மா கிட்னியை பாதிச்சி இருக்கு! சித்தார்த்தனுக்கு இது சம்மந்தமா சில அறிகுறிகள் தோன்றி இருக்கலாம்! அல்லது இது சம்மந்தமா... யூரினரி பிராப்ளத்துக்காக டாக்டரைப் பார்த்திருக்கலாம்! அவர் இதைப் பற்றி எதுவும் சொல்லலையா?"

"ம்கூம்..." என்று மீனாட்சி தலையாட்ட...

"பழுதானதை அகற்றி, புது கிட்னியை பொறுத்தினாத்தான் அவரை உயிரோடேப் பார்க்கலாம்!"

"ஐயோ... ஒத்தப் பிள்ளையாச்சே! எங்க குடும்ப வாரிசாச்சே! கடவுளே...!"

மீனாட்சி வெடித்துக் கதறினாள்.

யுக்தாமுகியின் உலகமே இருண்டுவிட்டாற் போலானது.

'நல்லவனாய் மாறி... ஊரான் மெச்ச.. புகழ வாழும் போது... இப்படியா ஒரு அரக்க நோய் வந்து உன்னை ஆளவேண்டும்! ஐயோ.. என் சாபம் கூட பலித்திருக்குமா? உடனே உனக்கு பொருத்தமான கிட்னி கிடைக்குமா, சித்தார்த்தா?'

"எங்களுடையது பொருந்துமா டாக்டர்!" பெற்றோர் இருவரும் கேட்க...

"ஸாரி... உங்களுடையதெல்லாம் வேணாம்! திரும்பவும் பழுதாக வாய்ப்பிருக்கு! நீங்களும் சில உடல் உபாதைகளால் கஷ்டப்பட வேண்டி வரும்! பேப்பர்ல விளம்பரம் கொடுங்க! உடனடியா ஏற்பாடுப் பண்ணுங்க! கால தாமதம் அவரோட உயிருக்கு எமன்!"

யுக்தாமுகி உடனடியாய்ச் சொன்னாள்.

"ப்ளீஸ் டாக்டர்... என்னோட கிட்னி பொருந்துமாப் பாருங்களேன்! மனப்பூர்வமா டொனேட் பண்ணக் காத்திருக்கேன்!"

"இது?"

"எங்க ஸ்கூல் மிஸ்! அம்மா... உன்னோடது வேண்டாம்மா! இரண்டு குழந்தைகளோட எதிர்காலம் உன் கையிலத்தான் இருக்கு! உனக்கு ஏதாவது ஒண்ணு ஆகி, உன் குழந்தைங்க அநாதையா அலையணுமா?" சிவநாதன் கேட்க...

"எனக்கு எதுவும் ஆகாது! ஒரு ஆரோக்கியமான மனிதன் உயிர் வாழ... ஒரு கிட்னியேப் போதும். அப்படியே எனக்கு ஏதாவது ஆனாலும்... என் குழந்தையை நீங்க பார்த்துக்க மாட்டீங்களா?"

"ஐயோ... யுக்தா... என்னால தாங்க முடியலையே!" மீனாட்சி யுக்தாமுகியைக் கட்டி அழுதாள்.

உடனடியாய் பரிசோதனை பண்ணிப் பார்த்தத்தில் யுக்தாவின் சிறுநீரகம் அவனுக்குப் பொருந்தியது.

விரைவிலேயே அவனுடைய பழுதான சிறுநீரகத்தை அகற்றி விட்டு... அவளுடையது ஒன்றை எடுத்துப் பொறுத்தினர்.

யுக்தாமுகி நினைவு வந்தவுடன்...

"மேம்... நான் கிட்னி கொடுத்தது யாருக்கும் தெரிய வேண்டாம்! குறிப்பா... சித்தார்த்தன் சாருக்கு தெரிய வேண்டாம், மேம்!"



"ஏம்மா?"

"அவருக்கு கிட்னி கொடுத்து, அவர் என்னாலதான் பிழைச்சார்ன்னு தம்பட்டம், தற்பெருமை அடிச்சிக்கப் பிடிக்கலே! ஒரு நல்லது செய்யும்போது... வெளியேத் தெரியணும்ன்னு அவசியமில்லே, மேம்!"

திவ்யாவுக்கு மட்டும் தெரியும்! கண்களில் கேள்விக் குறியோடு நோக்கியவளிடம்...

"என்னை இவ்வளவு கண்ணும் கருத்துமாய் தாங்கும் போது... நானும் என் நன்றி உணர்ச்சியை இப்படிக் காட்டக்கூடாதா? தப்பா, திவ்யா?" என்று கேட்க....

திவ்யா மேலும் தூண்டித் துருவவில்லை!

யுக்தாவும் ஏதோ நோய் வந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்று மட்டும் பள்ளியில் உள்ளவர்களுக்கு தெரியும்! சித்தார்த்தனுக்கு கிட்னி கொடுத்துவிட்டு அங்கே இருக்கிறாள் என்று யாருக்குமே தெரியாது!

சித்தார்த்தன் கண்விழித்தவுடன் கேட்டான்.

"எனக்கு கிட்னி கொடுத்து... உயிர் பிழைக்க வைத்த நல்ல உள்ளம் யாரும்மா? நான் அவங்களை உடனே பார்க்கணும்!"

"டொனேட் பண்ணவங்க அதை வெளிப்படுத்திக்க விரும்பலேப்பா!"

"மம்மி..." என்றவனை இடை மறித்துச் சொன்னாள்.

"நீ உயிர் பிழைச்சது எவ்வளவு சந்தோசம் தெரியுமா? பயந்துட்டேன், சித்துக் குட்டி! மறுபிறவி எடுத்து எங்களுக்கு நீ கிடைச்சிருக்கே! எல்லாம் அந்த மருத மலை முருகனோட அருள்தாம்பா!"

மீனாட்சி கண்கலங்கி... அவன் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

''அம்மா... நான் குழந்தைகளைப் பார்க்கணும்மா! யுக்தாமுகி குழந்தைகளோட வரவே இல்லையா?'' என்று சோகமாய் சித்தார்த்தன் கேட்க...

''தினமும் வந்தாப்பா!''

''குழந்தைங்க ரெண்டும் கண்ணுக்குள்ளே இருக்குது! நான் பார்க்கணும்மா!'' என்று கெஞ்ச..

''மாலை வருவாங்க! பார்க்கலாம்!''

''முதல்ல உனக்கு உடம்பு தேறியதும்... நல்ல பொண்ணாப் பார்த்து திருமணத்தை முடிச்சி வைக்கணும்!''

சித்தார்த்தன் அதிர்ந்து நோக்க...

''அடுத்தவள் குழந்தைக்கே இப்படி பாசம் கொண்டு உருகறீயே! உனக்கே உனக்குன்னு குழந்தைப் பிறந்தால்... எந்த அளவு ப்ரியம் கொள்வே! நினைப்பே சந்தோசத்தைக் கொடுக்குது! அதைப் பார்க்கணும், சித்துக் குட்டி!'' அம்மா ஏக்கத்தோடு கூறி முடிக்க...

'என் யுக்தாமுகி இருக்க... என்னவளை விட்டுவிட்டு வேறொருத்தியோடு திருமணமா? இந்த ஜென்மம் இல்லை... ஏழேழு ஜென்மமானாலும் அது ஒன்று மட்டும் நடக்காது! என் மனைவி என்றால்... என்னுடைய தேவதை யுக்தாமுகி மட்டுமே!'

'என் குழந்தைங்கன்னால் சிவா, மீனா மட்டுமே!'

''எனக்கு நீ, மருத்துவமனையில இருந்து உடம்பு நல்லாகி வெளியே வந்ததும்... நிறைய வேலையிருக்கு,



சித்துக் குட்டி! உனக்கொரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கணும்! அடுத்ததா யுக்தாமுகியோட மனசை மாத்தி... குழந்தையோட அவளை ஏத்துக்குற நல்ல பக்குவப்பட்ட இளைஞன் கிடைத்தால்... அவளுக்கும் மணம் முடித்து வைக்கணும்! பாவமில்லையா?''

சித்தார்த்தன் மௌனமாய் இருக்க...

கொஞ்ச நேரத்திற்கு முன் எழுந்து அவனைப் பார்க்க வந்தவள்... அறையின் வாயிலில் மீனாட்சிக்கும் சித்தார்த்தனுக்கும் நடந்த உரையாடல்களைக் கேட்டாள். இந்த சந்தர்ப்பத்திலும் தன்னைப் பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் மீனாட்சியிடம் வெளிப்படுத்தாத சித்தார்த்தனைக் கண்டு வேதனையுற்றாள்.

அதன் முடிவு?

# 21

மூன்று மாதம் கழிந்தது.

சித்தார்த்தன் உடல் நலம் தேறினான். ஆனால் ஆபீஸ்க்கு போகாமல்... வீட்டிலேயே ஓய்வில் இருந்தான்.

அவன் கேட்கும் நேரம் குழந்தைகளைத் தூக்கி வந்துக் காட்டினாள், மீனாட்சி.

யுக்தாகூட ஒருநாள் குழந்தையோடு வந்தாள். வந்த கொஞ்ச நேரத்திலேயே கிளம்பிவிட்டாள்.

சித்தார்த்தன் குழம்பிப் போனான்.

'உடம்பு பரவாயில்லையா?'

'உணவு உட்கொள்ள முடியுதா?'

'ஆபீஸ் எப்போ போறீங்க?' என்று ஒரு சின்னச் சம்பிரதாயத்திற்கு கூட அவனிடம் யுக்தா பேசவில்லை. கேட்கவில்லை.

'எனக்கு மட்டும்தான் யுக்தாமுகியின் மேல் காதலா? அவளுக்கு என்மேல் அன்பும், பிரியமும் இல்லையா? இத்தனை நோய் வந்து செத்துப் பிழைத்திருக்கும்... என் மேல் பரிதாபம் வரவில்லையா? அத்தனை வெறுப்பும், பகையும், குரோதமும் என்மேல் கொண்டிருக்கிறாள்?'

'என்னை எந்த அளவு பிடிக்காமல் போயிருந்தாள்... இப்படி ஒரு கடின கல்லாய் இருப்பாள்!'

'ஆசையாசையாய் பார்ப்பதும்... காதலாய், அவளைக் கண்களில் நிரப்பிக் கொள்வதும்... நான் மட்டும் தானா?'

'என்மேல் விருப்பமிருந்திருந்தால்... அது ஒரு நோத்திலாவது அவளுடைய வதனத்திலும், நயனத்திலும் வெளிப்படும் அல்லவா?'

'நான் மருத்துவ மனையில் இருந்தபோது யுக்தாமுகி என்னை வந்து பார்க்காததிலிருந்து நான் தெரிந்துக் கொண்டிருக்க வேண்டாமா?'

'இந்த அம்மாவும் அவளோடு கைக் கோர்த்துக் கொண்டு... நான் தூங்கும் சமயங்களில் வந்துப் பார்ப்பதாய் சொல்லி.. என்னை முட்டாளாக்கிவிட்டாளே!'



'யாரோ முன்பின் தெரியாத... முகம் அறியாத நபர் கூட... என்மேல் இரக்கம் கொண்டு... எனக்கு சிறுநீரகத்தை தானமாய் வழங்கி... என்னை உயிர் பிழைக்கச் செய்யும்போது... இவள் வந்து பார்க்கக்கூட இல்லையே!'

'இப்படி இருப்பவள் எப்படி என்னை ஏற்றுக் கொள்வாள்? மணந்து, மனம் ஒப்பி என்னோடு வாழ்வாள்!'

'கடவுளே... என் யுக்தாமுகி... எனக்குக் கிடைக்கவே மாட்டாளா?'

'என் மனதில் உள்ள வேதனையைச் சொல்லாமல்... என்னுள்ளே போட்டுப் புதைக்க புதைக்க.. தாங்க முடியாமல் வெடித்து.. அதற்கு பலியாகிவிடுவேனோ என்று தெரியவில்லையே!'

சமய சந்தர்ப்பத்துக்காய் காத்திருந்தான், சித்தார்த்தன்!

அன்று மாலை...

சிவநாதனும், மீனாட்சியும் ஐந்துமணிக்கெல்லாம் வீடு வந்துவிட்டனர். அவர்களின் முகமெல்லாம் சோகங்களை அப்பிக் கொண்டிருந்தது.

சித்தார்த்தன் அவர்களின் அருகே சென்று, கேட்டான்.

''மம்மி... ஏன் சிக்கிரமே வந்துட்டீங்க? ஏன் சோகமாத் தெரியறீங்க? குழந்தைங்க ஆரோக்கியமாத்தானே இருக்காங்க? என்ன விஷயம்? ஏன், மம்மி?'' என்று கேட்டது தான் தாமதம்.

சட்டென்று மீனாட்சி விம்மி விட்டாள்.

''என்ன மம்மி? ஏன் அழறீங்க?'' பயத்தோடு கேட்டான்.

''இந்த யுக்தாப் பொண்ணு...'' என்று குலுங்கி அழ...

''யுக்தாவுக்கு என்ன?'' உயிர் துடிக்கப் பதறினான்.

''சொல்லுங்க? சொல்லுங்க? அவளுக்கென்ன?''

''கெஞ்ச.. கெஞ்ச... கேட்காமல் போயிட்டாப்பா!''

''எங்கே?''

அவன் பதற்றம் புதிதாய் இருக்க... அவனையே உற்று நோக்கினார், சிவநாதன்.

''நியூயார்க் போறாப்பா! அங்கே ஏதோ ஒரு ஸ்கூல் விளம்பரம் பார்த்து விண்ணப்பிச்சி இருக்கா! உடனே வரச்சொல்லியிருக்காங்க! நானும் இந்த பத்து நாட்களில் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்! கேட்கலை! உங்கப்பா பேச்சிக்குக் கூட அது மதிப்புக் கொடுக்கல, தெரியுமா? பிடிவாதக்காரி.. போயிட்டா!''

''உனக்கு கிட்னி கொடுத்து பிழைக்க வச்சது அவ தான்டா, சித்தார்த்!'' சிவநாதன் கூற

''டாடி... என்ன சொல்றீங்க?'' அலறிவிட்டான்.

''உடனே அவள் உதவலேன்னா... நீ உயிர் பிழைச்சி இருக்கமாட்டே!''

சட்டென்று உடைந்து கதறினான்.

''ஐய்யோ டாடி... என்னை சாகடிச்சிட்டு போயிட்டாளே! உயிரோடே கொன்னு போட்டுட்டுப் போயிட்டாளே! என் குழந்தைங்க... என் குழந்தைங்க இல்லாமல் நான் எப்படி இருப்பேன்? என் யுக்தாமுகி இல்லாமல் எப்படி உயிர் வாழ்வேன்?''

''ஏய் சித்தார்த்தா... என்னடா சொல்றே? பெரிய குண்டாத் தூக்கிப் போடறீயேடா! உன் குழந்தைகளா? மீனா,



திவா... உன் குழந்தைகளா? அப்போ... அப்போ...'' அலற கதற...

''நான்... நான்தாம்மா...! அவளை கெடுத்தப் பாவி நான்தாம்மா! என்னை மணந்துக்கச் சொல்லிக் கேட்டேம்மா! மாட்டேன்னு சரவணனை மணக்கப் போனவளை... என்மேல் விருப்பமே இல்லாதவளை... தூக்கிட்டுப் போய்...! ஐய்யோ அம்மா... எனக்கு வாழ்வு கொடுங்க! என்னை மணந்துக்கங்கன்னு கெஞ்சிக் கதறினாம்மா! என்னை மறுத்தவளை... அப்போதிருந்த திமிரில மறுத்துட்டேம்மா!''

''நல்லவளா மாறின என்னை இப்போ... இப்போ... அவ திரும்பிக் கூட பார்க்கலேம்மா! என் விருப்பத்தை, ஆசையை, அன்பை சொல்லக்கூட எனக்கொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கலம்மா, யுக்தா!'' என்று மடிந்து அமர்ந்து அழுதான்.

''கிறுக்கா... கிறுக்கா... மடையா... எங்கக்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது. என்ன பிள்ளைடா நீ?'' மீனாட்சி கத்த...

''என் மனைவி, என் பிள்ளைங்க இல்லாமல், என்னால் இருக்கவே முடியாது! நான் செத்துடுவேன், டாடி!'' என்று கட்டாயமாய் கூற...

''அறிவுக் கெட்டத்தனமா பேசாதே! பஸ்லதான் போனாள். சென்னைப் போய் ப்ளைட் பிடிக்கறதுக்குள்ளே அவளைப் பிடிச்சிடலாம்!'' என்று சிவநாதன் கூற...

டி.வி.யில் முக்கியச் செய்தி ஓடிக் கொண்டிருந்தது.

'புதுச்சேரியிலிருந்து சென்னைப் புறப்பட்டுச் சென்ற அரசுப் பேருந்து பெரும் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த அறுபது பயணிகளில் நாற்பது பேர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தனர். இருபது பேரின் உடல் நிலை 'கவலைக்கிடம்!' என்று கூறி அப்பளமாய் நொறுங்கிய பஸ்ஸைக் காட்ட..

சிவநாதனும், மீனாட்சியும் வெலவெலத்துப் போனார்கள்.

''இந்த பஸ்தானா? யுக்தா போனது இந்த பஸ்தானா?'' சித்தார்த்தன் கதற...

அவர்கள் மவுனமாய் இருக்க...

நிறைய சடலங்களைக் காட்டினர். ஒரு சடலத்தின் மேலே யுக்தாவின் சேலை! அந்த சேலையை அவள் அடிக்கடி விரும்பிக் கட்டி, சித்தார்த்தன் பார்த்திருக்கிறான்.

''என் கண்மணி செத்துப் போயிட்டா! நானே அவளைச் சாகடிச்சிட்டேனே!'' தலையில் அடித்துக் கொண்டு கதறினான்.

அடுத்த நொடி புயலாய் மூவரும் ஆஸ்பத்திரி நோக்கி ஓடினர்.

''எனக்காக ஒருநாள் கத்துவீங்க! கதறுவீங்க! என் பொண்டாட்டி யுக்தாமுகிதான்னு சொல்லுவீங்க! அது நான் செத்தப் பிறகுகூட நடக்கலாம்ன்னு சொன்னாளே, அவச் சொன்னாப்லயே நடந்துடுச்சே...!''

சித்தார்த்தன் அழுது, புலம்பிக் கொண்டு ஆஸ்பத்திரி வராண்டாவில் ஓட..



குழந்தைகள் லேசான அடியோடும், யுக்தாமுகி கொஞ்சம் பலத்த அடியோடு... தலையெல்லாம் கட்டுப் போட்டு... ஒரு அறையின் படுக்கையில் படுத்திருக்க...

புயலாய் ஓடிய சித்தார்த்தனை 'ப்பா.. ப்பா...' என்ற குரல் தடுத்து நிறுத்த..

குரல் வந்த திசையை நோக்கியவனை இனிமையான அதிர்ச்சித் தாக்கியது.

சம்பவ இடத்தில் ஒரு சடலம் ரொம்ப சிதிலமாகிவிட அதை மூடி மறைக்க தன் பையில் இருந்த சேலை ஒன்றை எடுத்து கொடுத்து உதவினாள், யுக்தா. அதைக் கண்டு தான் யுக்தா இறந்துவிட்டதாய் எண்ணி சித்தார்த்தன் பயந்துப் போனான்.

அவளை உயிரோடு காணவும்.. அவன் தயக்கம், சுய மரியாதை, சுய கௌரவம் அத்தனையும் உடைந்து தூள் தூளாகி...

''யுக்தா... யுக்தா... என் கண்ணே...'' என்று ஓடி வர...

மரண பயத்திலிருந்து மீண்டு வந்த யுக்தாவும் அத்தனையையும் விடுத்து... அவனைக் கண்ட நிம்மதியில்...

''சித்தார்த்...'' என்ற அலறலோடு ஓடி.. அவன் பரந்த நெஞ்சத்தில் தஞ்சம் புக... இழுத்து இறுக்கிக் கொண்டான்.

அதைக் கண்ட பெற்றோர் மகிழ்ந்தனர்.

''யுக்தா... யுக்தா... என் உயிரே... என்னை மன்னிப்பாயா? நான் உனக்கு செய்த துரோகத்துக்கு, மன்னித்து, என்னை ஏற்றுக் கொள்வாயா, கண்ணே?''

''சித்தார்த்... சித்தார்த்... '' அவள் கண்ணீரோடு அழைத்தாள். அவள் கண்களிலிருந்து காதல் கசிந்துருகி வழிய...

''ஐ லவ் யூ டா! ஐ லவ் யூடா, யுக்தாம்மா! ஏழேழு ஜென்மத்துக்கும் என் மனைவின்னா அது நீதான் கண்ணே!''

அவளை இறுக்கிக் கன்னத்தில் முத்தமிட...

குழந்தைகள் இரண்டும் அவன் காலை வந்து கட்டிக் கொள்ள.. ஆசையாசையாய் தூக்கி முத்தமிட்டான்.

அங்கே 'மகிழ்ச்சிப் பறவை' சிறகடித்து, சுதந்திரமாய் பறந்தது!